# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 28

விலை - 30ரூபா

சுடர் 34 கதிர் 303 புரட்டாதி 11ஆம் நாள் சனிக்கிழமை 28 செப்ரெம்பர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050


## வல்லிபுர ஆழ்வார் கொடியேற்றம் இன்று

வடமராட்சி, செப். 28
சரித்திரப் பிரசித்திபெற்ற வடமராட்சி 23

# சிங்கள - பௌத்த நாட்டை ஏற்காவிடின் வெளியேறுங்கள்

### ஞானசாரர் அதட்டல் பேச்சு

கொழும்பு, செப். 28
இது சிங்கள பௌத்த நாடு. இதனை ஏற்றுக் கொண்டவர்கள் மட்டும் இந்த நாட்டில் இருக்கலாம். ஏற்காதவர்கள், தங்களது உடமைகளுடன் தாராளமாக வேறு நாடுகளுக்குச் செல்லலாம். இவ்வாறு பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.
பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் முன்னிலையாகி வாக்கு 08

## ஞானசாரரை கைது செய்ய மைத்திரி உத்தரவிடவேண்டும்


### கோருகிறார் மாவை. எம்.பி.

யாழ்ப்பாணம், செப். 28
ஞானசார தேரரைக் கைது செய்வதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உத்தரவிட வேண்டும் என்று கோரிக்கை முன்வைத்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சோ.சேனாதிராசா, மதச் சார்பற்றநாடாக இலங்கை இருக்கும் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.
இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு நேற்று அனுப்பி வைத் 23



# நான் நாட்டின் தலைவராவதை எவராலும் தடுக்கவே முடியாது

### இறுமாப்பில் கூறுகிறார் கோத்தபாய



கொழும்பு, செப்ரெம்பர் 28
அரச தலைவர் தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி வெல்வதை சஜித் பிரேமதாசவால் தடுக்கவே முடியாது. எமது ஆட்சி மலர்ந்தே தீரும். இவ்வாறு சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார். 23

## சஜித் எல்லாம் கோத்தாவுக்கு தூசி

### எள்ளிநகையாடுகிறார் மகிந்த

கொழும்பு, செப். 28
அரச தலைவர் வேட்பாளராக சஜித் பிரேமதாச நியமிக்கப்பட்டாலும், அவர் எமது வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவுக்கு தூசிதான். நவம்பர் 17ஆம் திகதி நாட்டின் தலைவராக கோத்தபாய பொறுப்பேற்பார். நாடா 08

## கூட்டமைப்பு உறுப்பினரின் வீட்டின் மீது குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், செப். 28
வலி. தெற்கு பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெண் உறுப்பினரின் 05

## மிருசுவிலில் தாக்கப்பட்டது பேருந்து

யாழ்ப்பாணம், செப். 28
பொத்துவில் நோக்கிச் சென்ற இலங்கைப் போக்குவரத்துச் 23

## யாழ்ப்பாணம் மன்றில் முன்னிலையாக கோத்தபாயவுக்கு பாதுகாப்பில்லையாம்

யாழ்ப்பாணம், செப். 28
கோத்தபாய ராஜபக்ச, யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாக பாதுகாப்பு இல்லை என்று மேன்முறையீட்டு நீதிமன்றில் இடைக்காலக் கட்டளை பெற்றுள்ளார். அவர் இனி ஒரு சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தால் அது தொடர்பில் கவனம் 05

### பாதுகாப்பு இல்லை என்பதால்

## மன்றுக்கு வரமுடியாதெனின் பரப்புரைக்கும் வரமுடியாது!

### கோத்தாக்கு செக் வைக்கிறது முன்னிலை சோசலிசக் கட்சி

யாழ்ப்பாணம், செப். 28
யாழ்ப்பாணத்துக்கு வருவதற்குப் பாதுகாப்பு இல்லை என்று நீதிமன்றுக்குக் கட்டளை அனுப்பும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச, தேர்தல் பரப்புரைக் காலத்திலும் யாழ்ப்பாணத்துக்கு வரமுடியாதுதானே? இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார், 08

## நான் கெட்டவனில்லை

### ஐ.நாவே நற்சான்றிதழ் வழங்கியதாம் என்கிறார் கோத்தா

யாழ்ப்பாணம், செப். 28
என்னை எல்லோரும் கெட்ட மனிதன் என்கின்றனர். ஆனால் நான் கெட்ட மனிதனில்லை. ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியே அதற் 23

## வல்லரசுகளுடன் வலுவான உறவு

### கோத்தாவின் திட்டம் இது என்கிறார் அவரின் பேச்சாளர்

கொழும்பு, செப். 28
எதிர்வரும் அரசதலைவர் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச வெற்றிபெற்றால், அணிசேரா கொள்கையை கடைப்பிடிப்பார் என்றும், உலகின் அனைத்து வல்லரசுகளுடனும் உறவைப் பேணுவார் என்றும் அவரது பேச்சாளரான கெஹலிய ரம்புக்வெர தெரி 23

### ஐ.நாவின் முடிவு:

## பாதிக்கப்பட்டோருக்கு நம்பிக்கையளிக்கிறது

### கூறுகிறார் சூக்கா

ஜெகனஸ்பேர்க், செப். 28
ஐ.நா. அமைதிப் படையிலிருந்து இலங்கையை நிறுத்தும் செயற்பாடு பற்றிய செய்தி இன்னும் எந்த நீதியுமே கிடைக்காத போரால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நம்பிக்கையைக் கொடுத்துள்ளது. இவ்வாறு உண்மை மற்றும் நீதிக்கான பன்னாட்டு அமைப் 23

## தொடர் பணிப்புறக்கணிப்புக்கள் ஆராய அமைச்சரவை உபகுழு

கொழும்பு, செப். 28
தொடருந்துப் பணியாளர்கள், ஆசிரியர்கள், இலங்கை நிர்வாகசேவை அதிகாரிகள் உள்பட அரச துறையில் தொழிற்சங்கங்கள் பல சம்பள முரண்பாட்டால் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்துள்ள நிலையில் அதுதொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க அமைச்சரவை உபகுழுவை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நிய 23

### நீராவியடிக் குழப்பம்;

## பொலிஸார் மன்றுக்கு இடைக்கால அறிக்கை

முல்லைத்தீவு, செப். 28
முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலயச் சூழலில் நீதிமன்றக் கட்டளையைமீறி பிக்குவின் உடல் தகனம் செய்யப்பட்டமை, அதன் பின்னர் இடம்பெற்ற சம் 23

# புரட்டாதி மாத ராசிபலன்

## மீனம்

மீனம்




கடமையிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பவர்கள் நீங்கள். காரியம் முடிந்த பின்னால் நன்றி சொல்வதற்கு மறக்கமாட்டீர்கள். உறவினர்களுக்கு பாசத்தை வழங்குவதில் உங்களுக்கு நிகர் யாருமில்லை. நியாயத்தை கடைபிடிப்பதற்கு முன்வருவீர்கள். நிகழ்கால தேவைகள் எத்தனை இருந்தாலும் அதை வெளிக் காட்டிக் கொள்ள மாட்டீர்கள். ஒரு சில சமயங்களில் உணர்ச்சிவசப்பட்டு எதையாவது பேசிவிடுவீர்கள். பிறகு ஏன் இப்படி பேசினோம் என்று நினைத்து வருத்தப்படுவீர்கள்.

உங்களுக்கு இந்த புரட்டாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாத தொடக்கத்திலேயே செவ்வாயும், சனியும் எட்டாம் இடத்தில் சேர்ந்திருக்கிறார்கள். அது அவ்வளவு நல்லதல்ல. எனவே, மாதத்தின் முதல் 10 நாள்கள் அதாவது செவ்வாய் விலகும் வரை மிகுந்த விழிப்புணர்ச்சியோடு செயற்படுவதுதான் நல்லது. விரயங்கள் அதிகரிக்கலாம். வீட்டில் ஒற்றுமை குறையாமல் பார்த்துக்கொள்வது நல்லது.

வாகனங்களில் செல்லும்பொழுதும் விழிப்புணர்ச்சி தேவை. இதுபோன்ற காலங்களில் ஆன்மிக நாட்டம் அதிகமாக இருந்தால், வாழ்க்கையில் எந்தப் பிரச்சினைகளும் வராது. பெரும்பாலும் சனி, செவ்வாய் சேர்க்கை காலத்தில் சனீஸ்வர வழிபாடும் முறையாகச் செய்வதோடு வன்னி மரத்தடி சனீஸ்வரரை வாய்ப்பிருக்கும் பொழுது வழிபட்டு வருவதன் மூலம், வரும் துயரங்களில் இருந்து விடுபட இயலும்.

மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் குருவோடு, கேது இருப்பதால் தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். புதிய கூட்டாளிகளை இணைத்துக் கொண்டு பொன்னான வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முன்வருவீர்கள். உங்களைச் சார்ந்த குடும்பத்தினருக்கோ மருத்துவ செலவுகள் உருவாகலாம்.

# சனிப்பெயர்ச்சி: எந்த ராசிக்கு ஏழரை சனி ஆரம்பம்?



மேடம் முதல் மீனம் வரையிலான 12 ராசிகள் ஒவ்வொன்றிலும், தலா இரண்டரை ஆண்டுகள் அமர்ந்து, அந்தந்த ராசிக்காரர்களுக்கு பலன்களை வழங்குபவர், சனி பகவான். வரும் 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம், 24ஆம் திகதி சனிப் பெயர்ச்சி நடைபெற உள்ளது.

பொதுவாக ஜோதிடத்தில் பெரிய கிரகங்களாகவும், ஜாதகர்களின் வாழ்வில் அதிக தாக்கத்தையும் ஏற்படுத்தும் கிரகங்களாக கருதப்படும் குரு மற்றும் சனி ஆகிய கிரகங்கள் 3 மாத இடைவெளியில் அடுத்தடுத்த ராசிகளுக்கு இடம் பெயர்வதால், 12 ராசிக்காரர்களுக்கும், பல்வேறு மாற்றங்களை எதிர்பார்க்கலாம்.

குரு பகவானின் ஆட்சி வீடான தனுசில் இரண்டரை ஆண்டுகள் சஞ்சாரம் செய்த சனிபகவான், அடுத்ததாக, தன் சொந்த வீடான, மகரத்துக்கு செல்கிறார். இது, சனியைச் சொந்த வீடாக உடைய ராசிக்காரர்கள், ஜாதகத்தில் சனி, உச்சம் பெற்ற ஜாதகர்கள், சனியின் அமைப்பு நல்ல வகையில் உடையோருக்கு நல்ல பலன்களை அளிக்கும். அத்துடன், மகரத்தில் அமர்ந்து சனி பார்க்கும் ராசிகளுக்கும் அதற்கேற்ற பலன்கள் இருக்கும். குறிப்பாக, விருச்சிக ராசிக்காரர்களுக்கு இத்துடன், ஏழரைச் சனி முடிவடைகிறது. தனுசு ராசிக்கு பாத சனியாகவும், மகர ராசிக்கு ஜென்ம சனியாகவும் அமர்கிறார். கும்ப ராசிக்காரர்களுக்கு, 2020 ஜனவரி முதல் ஏழரை சனி ஆரம்பம் ஆகிறது.

சனிப்பெயர்ச்சிக்கு இன்னும் 3 மாதங்கள் உள்ள நிலையில், அதன் தாக்கம் ஏற்கனவே தொடங்கியிருக்கும்.

எந்தெந்த ராசிக்காரர்களுக்கு என்னென்ன நடக்க வாய்ப்புள்ளது என்பதை சற்று முன் கூட்டியே தெரிந்து கொண்டால், அதற்கேற்ற வகையில் முன்னெச்சரிக்கையாக இருக்கலாம். அதே போல் சுப நிகழ்ச்சிகளையும் திட்டமிட்டு நடத்தலாம்.



# இன்றைய நாள்

**மேடம்:** நண்பரின் ஆலோசனை புதிய நம்பிக்கையை தரும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்க மாற்று உபாயம் பயன்படுத்துவீர்கள். கூடுதல் பணச்செலவு ஏற்படும். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம்.

**இடபம்:** உங்களின் மனக்குறையை பிறரிடம் சொல்ல வேண்டாம். இதனால் கௌரவம் பாதுகாக்கலாம். தொழில், வியாபாரத்தில் பணிசுமை அதிகரிக்கும். உணவு உண்பதில் கட்டுப்பாடு பின்பற்றுவது நல்லது.

**மிதுனம்:** உங்களின் நற்செயல் கண்டு புதியவர் அன்பு பாராட்டுவர். மனம், செயலில் புத்துணர்வு பிறக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணவரவு திருப்திகரமாகும்.

**கடகம்:** உங்கள் செயல்களில் நிதானம் வேண்டும். தொழிலில் இலக்கு நிறைவேற கால அவகாசம் தேவைப்படும். பிறர் பொருளை பாதுகாக்கும் பொறுப்பு ஏற்க வேண்டாம்.

**சிம்மம்:** உறவினருக்கு முன்னர் செய்த உதவிக்கான நற்பலன் தேடி வரும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். பண பரிவர்த்தனையில் திருப்திகரமான நிலை உண்டு.

**கன்னி:** திட்டமிட்ட பணியில் மாற்றம் செய்ய நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பாதுகாப்பது நல்லது. சராசரி பணவரவு கிடைக்கும். வீடு, வாகனத்தில் பாதுகாப்பு வேண்டும்.

**துலாம்:** உங்கள் மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். நண்பரின் நற்செயலை மனமுவந்து பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் நிலுவை பணி நிறைவேறும். உபரி பணவரவு கிடைக்கும்.


**விருச்சிகம்:** உங்கள் பேச்சில் அதிக அன்பும், பண்பும் கலந்திருக்கும். முக்கியஸ்தரின் நட்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி ஏற்படும். ஆதாய பணவரவு பெறுவீர்கள்.

**தனுசு:** தெய்வ நம்பிக்கையுடன் செயற்படுவதால் பணி சீராக நிறைவேறும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அளவுடன் இருக்கும். பண பரிவர்த்தனையில் கவனம் அவசியம்.

**மகரம்:** உறவினரில் சிலர் எதிர்பார்ப்புடன் அணுகுவர். உங்களால் இயன்ற அளவில் உதவுவீர்கள். சேமிப்பு பணம் அத்தியாவசிய செலவுக்கு பயன்படும்.

**கும்பம்:** வாழ்வில் பெற்ற நன்மைகளை எண்ணி மனம் மகிழ்வீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை வியத்தகு அளவில் முன்னேற்றம் பெறும்.

**மீனம்:** பொதுநல பணியில் ஈடுபடுவீர்கள். தொழிலில் இருந்த குளறுபடி சரியாகும். தாராள பணவரவு கிடைக்கும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும்.



# ‘பனர்’ வைக்க வேண்டாம்

## ரசிகர்களுக்கு தனுஷ் அறிவுறுத்தல்

சென்னையில் ‘பனர்’ விழுந்து இளம்பெண் சுபஸ்ரீ சாவடைந்த சம்பவத்துக்குப் பிறகு பனர் கலாசாரத்தை ஒழிக்க குரல்கள் ஒலிக்கின்றன. அரசியல் கட்சிகள் பனர்களை தவிர்க்கும்படி தொண்டர்களை வற்புறுத்தி உள்ளன. இதேபோல் பனர்கள் வைக்கவேண்டாம் என்று நடிகர்கள் விஜய், சூர்யா ஆகியோர் ரசிகர்களுக்குத் தடை விதித்தனர்.

விஜய் வேண்டுகோளை ஏற்று அண்மையில் நடந்த ‘பிகில்’ படத்தின் இசை வெளியீட்டு விழாவில் ரசிகர்கள் பனர் வைக்கவில்லை. அஜித்குமார் ரசிகர்களும் பேனர்கள் வைக்க மாட்டோம் என்று உறுதிமொழி எடுத்து சுவரொட்டிகளை ஒட்டினர். இந்த நிலையில் தனுஷும் தனக்கு பனர் வைக்க வேண்டாம் என்று ரசிகர்களுக்கு அறிவுறுத்தி உள்ளார்.

## கேலிச்சித்திரம்



குரைக்கும் ஒவ்வொரு நாய்க்கும் பதில் சொல்லிக்கொண்டே இருந்தால் குறிக்கோளை என்றும் அடைய முடியாது...



## வாழ்க்கை என்பது...!

- ஒரு சந்தர்ப்பம் நழுவ விடாதிருங்கள்
- ஒரு கடமை நிறைவேற்றுங்கள்
- ஒரு இலட்சியம் சாதியுங்கள்
- ஒரு சோகம் தாங்கிக்கொள்ளுங்கள்
- ஒரு போராட்டம் வென்றுகாட்டுங்கள்
- ஒரு பயணம் நடத்தி முடியுங்கள்













ரோஸ்@rose_tweety_

தவறுகள்
மன்னிக்கப்படும்போது..
அழகான உலகம்
ஆரம்பமாகிறது

i@Jino_Offl

நமக்கான அடையாளத்தை
உருவாக்கிக் கொண்டால்
அங்கீகாரம் தேடி வரும்!

ஆனந்த் @anand17m

முயலும் வெல்லும்!
ஆமையும் வெல்லும்!!
முயலாமை வெல்லாது!!!

மாற்றம் மனதின் ஆழத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும், வெறும் வாய் வார்த்தைகளில் அல்ல.

சண்முக வடிவு @tweety

அறிவே இல்லையா..? முட்டாளா நீ..?' என்ற கேள்விகளுக்கு விவாதித்து நிற்காமல் விலகி நடக்கத் தெரிந்தவன் புத்திசாலி.

@NeelSays

சோகங்களைப் பற்றி யோசிக்க முடியாத அளவுக்கு மூளையை பிஸியாக வைத்திருக்கவேண்டும்.

# ஏமாற்றிய முயல்!

முன்னொரு காலத்தில் சின்னசாமி என்பவன் தன் நிலத்தில் பெரிய தோட்டம் அமைத்து, காய்கறிகளைப் பயிரிட்டு வந்தான். நாள்தோறும் அவனுக்குத் தெரியாமல் முயல் ஒன்று உள்ளே நுழைந்து, கொழுந்து இலைகளைத் தின்று சென்றது. எப்படியாவது அந்த முயலைப் பிடிக்க வேண்டும் என்று பல வகைகளில் முயற்சி செய்தான். ஆனால், அவனால் பிடிக்க முடியவில்லை.



"அந்த முயல் ஒழிந்தால்தான் தன் தோட்டத்தைக் காப்பாற்ற முடியும். தனக்கும் நிம்மதி ஏற்படும். என்ன செய்வது'' என்று சிந்தித்தான்.

அரசனிடம் சென்ற சின்னசாமி, "அரசே! என் நிலத்தில் அருமையான தோட்டம் அமைத்துள்ளேன். நாள்தோறும் ஒரு முயல் அங்கு நுழைந்து எனக்கு தொல்லை தருகிறது. அந்த முயலைப் பிடிக்க நீங்கள்தான் எனக்கு உதவி செய்ய வேண்டும்," என்று வேண்டினான். "ஒரு முயலைப் பிடிக்க உன்னால் முடிய வில்லையா?" என்று கேட்டான் அரசன்.

"அரசே! என் தோட்டத்தைச் சுற்றி பாதுகாப்பாக வேலி போட்டு இருக்கிறேன். அப்படி இருந்தும் தந்திரசாலியான அந்த முயல் எப்படியோ உள்ளே நுழைந்து விடுகிறது. பொறிகளையும் வைத்துப் பார்த்து விட்டேன். ஒன்றிலும் அது சிக்கவில்லை. அதனால்தான் உங்களிடம் வந்தேன்," என்றான் சின்னசாமி.

"கவலைப்படாதே! அந்த முயல் இறந்து விட்டது என்றே நினைத்துக்கொள். வேட்டைக்காரர்களோடும், வேட்டை நாய்களோடும் நாளை நானே அந்த முயலை வேட்டையாட வருகிறேன். அந்த முயலின் திறமை என் வேட்டை நாய்களிடம் செல்லாது. மகிழ்ச்சியோடு போ," என்றான் அரசன்.

வரப்போகும் பெரிய இழப்பை உணராத சின்னசாமி வீடு திரும்பினான். மறுநாள் படை வீரர்கள் சூழ வேட்டைக்காரர்களோடும், வேட்டை நாய்களோடும் ஆரவாரமாகக் குதிரையில் அங்கு வந்தான் அரசன். எல்லாருக்கும் விருந்து அளித்தான் தோட்டக்காரன்.

"அரசே! நீங்கள் நல்ல நேரத்தில் வந்தீர்கள். அந்த முயல் என் தோட்டத்தில் எங்கோ மறைந்து இருக்கும் நேரம்தான் இது," என்றான் சின்னசாமி.

வேட்டைக்குத் தயாரானான் அரசன். முயல் தப்பித்து ஓடி விடாதபடி தோட்டத்தைச் சூழ்ந்து நின்றனர் வேட்டைக்காரர்கள். வீரர்கள் குதிரையில் அமர்ந்தனர்.

கொம்புகள், பறை போன்றவை பேரோசையோடு முழங்கின. வேட்டை நாய்கள் பயங்கரமாக குரைத்தன.

சத்தத்தைக் கேட்டு அஞ்சியது முயல். புதர் மறைவிலிருந்து வேலியை நோக்கி ஓடியது.

குதிரையில் இருந்த அரசன், "அதோ முயல் ஓடுகிறது. விடாதீர்கள்! பிடியுங்கள்," என்று கத்தியபடி முயலை விரட்டினான்.

வேட்டை நாய்கள் அவிழ்த்து விடப்பட்டன. வேட்டைக்காரர்களும், வீரர்களும் முயலைத் துரத்தினர். வேலி வழியே தப்பிக்க வழி இல்லாத தால் அந்த முயல் தோட்டத்துக்கு உள்ளேயே ஓடத் தொடங்கியது.

எல்லாரும் அதைத் துரத்தினர். வளர்ந்திருந்த காய்கறிச் செடிகள் அனைத்தும் குதிரைகள், வேட்டைக்காரர்களின் கால்களில் சிக்கி நாசமாயின. வேலியும் பல இடங்களில் சின்னாபின்னம் ஆக்கப்பட்டது.


நீண்ட நேரம் அவர்களை ஏமாற்றிய முயல் கடைசியில் சிக்கியது. வேட்டையில் பிடித்த முயலைத் தோட்டக்காரனிடம் நீட்டினான் அரசன்.

"மீண்டும் இப்படி ஏதேனும் ஒரு முயல் உன் தோட்டத்துக்குள் நுழைந்து தொல்லை கொடுத்தால் தயங்காமல் என்னிடம் சொல்," என்று மகிழ்ச்சியுடன் சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

பாழ்பட்டுக் கிடந்த தோட்டத்தை வேதனையோடு பார்த்தான் அவன். மீண்டும் அதைப் பழைய நிலைக்குக் கொண்டு வரப் பல மாதங்கள் பிடிக்கும் என்பது அவனுக்குப் புரிந்தது.

"என் முட்டாள்தனத்தால்தான் எனக்கு இந்த இழப்பு ஏற்பட்டு உள்ளது. ஒரு முயல் என்ன, ஓராயிரம் முயல்கள் வந்திருந்தாலும் என் தோட்டம் இப்படி நாசமாகி இருக்காது. சின்னஞ்சிறு செயலுக்குப் பெரியவர்களை உதவிக்கு அழைத்தேனே.:. எனக்கு இந்தத் தண்டனை வேண்டும்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் சின்னசாமி.

## புள்ளிகளை இணைத்து உருவத்தை முழுமை செய்வோம்




## பறக்காத பறவைகள்

தீக்கோழி, அடைக்கோழி, ரேகா, குவிஸ் போன்ற பறவைகளால் பறக்க முடியாது. அவைகள் பறக்கும் சக்தியை இழந்து விடுகின்றன. பறக்க முடியாத பறவைகளை பல இடங்களில் பார்க்கலாம். ஆப்பிரிக்கப் பகுதிகளில் தீக்கோழிகள் அதிகமாக இருக்கும். ரேகா இனங்கள் தென் அமெரிக்காவில் அதிகமாகக் காணப்படும். ஆஸ்திரேலியாவில் உள்ள அடைக்கோழி அங்கு அதிகமாகத் திரியும். குவிஸ் பறவைகள் நியூசிலாந்து காடுகளில் பெருவாரியாகக் காணப்படும்.



## அம்மாவின் அன்பு...

காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக்
கட்டிக் கொஞ்சும் அம்மா
பாலைக் காய்ச்சிச் சீனி போட்டுப்
பருகத் தந்த அம்மா

புழுதி துடைத்து நீரும் ஆட்டிப்
பூவும் சூட்டும் அம்மா
அழுது விழுந்த போதும் என்னை
அணைத்துத் தாங்கும் அம்மா

அள்ளிப் பொருளைக் கொட்டிச் சிந்தி
அழிவு செய்த போதும்
பிள்ளைக் குணத்தில் செய்தான் என்று
பொறுத்துக் கொள்ளும் அம்மா

பாடசாலை விட்ட நேரம்
பாதி வழிக்கு வந்து
துள்ளிக் குதிக்கும் என்னைத் தூக்கித்
தோளில் போடும் அம்மா

பாப்பா மலர்ப் பாட்டை நானும்
பாடி ஆடும் போது
வாப்பா இங்கே வாடா என்று
வாரித் தூக்கும் அம்மா.

## விலை உயர்ந்த பொருள்!



மவுலானா ஜாமி, உலக புகழ்பெற்ற பாரசீக கவிஞர். சிறந்த தத்துவ ஞானி கவர்ச்சி மிக்க பேச்சாளர். வீட்டிலிருக்கும் போது, கதவை மூடி உட்புறம் தாழிட்டு கொள்வார். வெளியே புறப்பட்டால், கதவை திறந்து போட்டு செல்வார்.

இந்த வினோத நடவடிக்கை, அக்கம் பக்கத்தவருக்கு ஆச்சரியத்தை தந்தது.

ஒருநாள், "உங்கள் செயல் விந்தையாக உள்ளதே... சாதாரணமாக வெளியே செல்லும் போது தான், பாதுகாப்புக்காக வீட்டை பூட்டுவர். நீங்களோ, வீட்டுக்குள்ளிருக்கும் போது, தாழ்ப்பாள் போட்டுக் கொள்கிறீர்கள்; வெளியே செல்லும் போது திறந்து போடுகிறீர்கள்" இது ஏன் என்றார் ஒரு நண்பர்.

"மிகவும் விலை உயர்ந்த பொருளாக, என்னை மட்டுமே நினைத்துக் கொள்கிறேன்".

அதனால், உள்ளே இருக்கும் போது கதவை தாழிட்டு, என்னை பாதுகாத்துக் கொள்கிறேன்.

"வெளியே செல்லும் போது, விலை உயர்ந்த பொருள், வீட்டில் இல்லை அல்லவா... எதற்காக, வீட்டை பூட்ட வேண்டும். அதனால் தான், திறந்து போடுகிறேன்'' என்றார், இந்தக் கோமாளி!

# நவீன உபகரணத்தை சீனா இலங்கைக்கு வழங்கியது

## போதைப்பொருள், வெடிபொருள்களை இலகுவாகக் கண்டறியலாம்

கொழும்பு,செப்.28

போதைப்பொருள்கள் மற்றும் வெடிப்பொருள்களை கண்டறிவதற்கான 750 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க அதிநவீன உபகரணங்களை சீனா அரசு இலங்கைக்கு அன்பளிப்பு செய்துள்ளது. அவற்றைச் சீன தூதுவர் அரச தலைவர் செயலகத்தில் அரச தலைவர் சிறிசேனவிடம் நேற்று உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

5 மீற்றர் தூரத்துக்குள் இருக்கும் நபர்கள் அல்லது பொருள்களுக்கிடையில் மறைத்துவைக்கப்பட்டிருக்கும் வெடிப்பொருள்கள் மற்றும் போதைப்பொருள்களை தன்னிச்சையாக இனங்கண்டு கொள்வதற்காக தயாரிக்கப்பட்ட சிறப்பு ரோபோ இயந்திரங்கள் மூன்றும் இதற்குள் உள்ளடங்குகின்றன.

நபர்களால் உடலில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் வெடிப்பொருள்கள் மற்றும் ஆயுதங்களை தன்னிச்சையாக இனங்காண்பதற்காக தயாரிக்கப்பட்ட இயந்திரங்கள் மூன்றும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பயணப் பொதிகள் உள்ளிட்ட பொதிகளில் மறைத்துவைக்கப்படும் வெடிபொருள்களையும் போதைப்பொருள்களையும் இனங்காணும் சிறப்பு உபகரணம் ஐம்பதும் இவற்றுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஆயுதங்களை உடனடியாக இனங்காணும் ஆற்றலுடைய 25 இயந்திரங்களையும் சீன அரசு இலங்கைக்கு பெற்றுக்கொடுத்துள்ளது.

வாகனங்களை ஸ்கேன் செய்து அவற்றில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் வெடிப்பொருள்கள் மற்றும் ஆயுதங்களை பரிசோதிக்கும் அதிகாரிகள் அவற்றை உடனடியாக இனங்காண்பதற்கான ஆற்றலுடைய 25 இயந்திரங்களும் இவற்றுள் உள்ளடங்குகின்றன.

நபர்களிடத்தில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் ஆயுதங்களை உடனடியாக இனங்காணும் ஆற்றலுடைய 500 இயந்திரங்களும் பாதுகாப்பு துறையின் பயன்பாட்டிற்காக சீன அரசால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

(ஒ.5)

# ஆயுத் திணைக்கள முன்னாள் பணிப்பாளர் நேற்றுக் கைது

கொழும்பு, செப். 28

ஆயுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் ஜகத் பீ விஜேவீர மற்றும் ஆயுத் திணைக்கள முன்னாள் மேலதிக பணிப்பாளர் தாரக செனவிரத்ன ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நிதிக்குற்றப்புலனாய்வு விசாரணை பிரிவினரால் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சட்ட மா அதிபரின் பரிந்துரைக்கமைய அவர்களை உடனடியாக கைதுசெய்து மன்றில் முற்படுத்துமாறு கோட்டை நீதவான் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அண்மையில் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ.5)

## கூட்டமைப்பு...

வீட்டின் மீது நேற்று இரவு இனந்தெரியாதோர் பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

ரவிக்குமார் லோகாதேவி என்ற உறுப்பினர் வீட்டின் மீதே பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

சுன்னாகம் கந்தரோடை வீதியில் உள்ள உறுப்பினர் வீட்டுக்கு உந்துருளியில் மிக வேகமாக வந்த சில்ரே பெற்றோல் குண்டுத் தாக்குதலை நடாத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர். வீட்டின் முன் பகுதியில் பெற்றோல் குண்டு வீழ்ந்தமையால் அதிக சேதம் ஏற்படவில்லை.

தாக்குதலுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில் சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

(ஒ.5.105)

## யாழ்ப்பாணம்...

செலுத்துவதற்கான உரிமையைத் தக்க வைத்துக்கொள்ள அனுமதியளிக்க வேண்டும். அவரது சாட்சியம் லலித், குகன் வழக்கில் முக்கியமானது.

இவ்வாறு யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் லலித், குகன் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான ஆள்கொணர்வு மனு மீதான விசாரணையில் மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி விண்ணப்பம் செய்தார். எனினும் அந்த விண்ணப்பத்தை நிராகரித்த மன்று, வழக்கின் அடுத்த சாட்சியாக டயலொக் நிறுவனத்தின் பிரதிநிதியை மன்றில் முன்னலையாகுமாறு உத்தரவிட்டதுடன், வழக்கை ஒக்ரோபர் 31ஆம் திகதி வரை ஒத்திவைத்தது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களான லலித் மற்றும் குகன் ஆகியோரின் ஆள்கொணர்வு மனு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நீதிவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

இதன்போது சாட்சியம் வழங்குவதற்காக அழைக்கப்பட்ட முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச, மன்றில் முன்னிலையாகவில்லை. அவர் சார்பில் சட்டத்தரணி [illegible] அமரசிங்க முற்பட்டார்.

சாட்சிக்கு வழங்கப்பட்ட அழைப்புக்கட்டளைக்கு இடைக்காலத் தடை வழங்கி மேன்முறையீட்டு நீதிமன்றம் கட்டளை வழங்கியுள்ளது என்று குறிப்பிட்டு அந்தக் கட்டளையின் சான்றுப்படுத்திய பிரதியை மன்றில் முன்வைத்தார்.

'லலித், குகன் ஆகியோர் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்சவின் சாட்சியம் மிகமுக்கியமானது. எனினும் அவர் இந்த மன்றில் முன்னிலையாவார் என்று கடந்த இரண்டு தவணைகளில் அவரது சட்டத்தரணிகள் உறுதியளித்துள்ளனர். தற்போது அவர் இந்த மன்றில் முன்னிலையாவதற்கு பாதுகாப்பு இல்லை என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் சென்று கட்டளை பெற்றுள்ளார். அவர் வேட்பாளராகவோ, அரச தலைவராக இருந்தால் கூட இந்த மன்றின் கட்டளைக்கு மதிப்பளிக்கவேண்டும். யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாவதற்கு அவருக்குப் பாதுகாப்பு இல்லாவிடின் மன்றிடம் விண்ணப்பம் செய்து மேலதிக பாதுகாப்பைப் பெற்றுக்கொண்டிருக்க முடியும். இனி எந்தவொரு தேவைக்காகவும் அவர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தால் அதுதொடர்பில் கவனம் செலுத்தப்படவேண்டும், என்று மனுதாரர்களது சட்டத்தரணி மன்றுரைத்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்றின் கட்டளைக்கு கட்டுப்பட்டு நடக்கவேண்டிய கடப்பாடு கீழ் நீதிமன்றங்களுக்கு உண்டு. அதனால் மனுதாரர்களது விண்ணப்பத்துக்கு இந்த மன்றினால் கட்டளை ஆக்க முடியாது. அதனால் இந்தச் சாட்சியிடம் (முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச) சாட்சியம் பெறுவதை மேன்முறையீட்டு நீதிமன்றின் இறுதிக் கட்டளை கிடைக்கும் வரை ஒத்திவைக்கிறது. மேன்முறையீட்டு நீதிமன்றின் கட்டளை தொடர்பில் சாட்சியின் (கோத்தபாய ராஜபக்சவின்) சட்டத்தரணி மன்றுக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

அடுத்த சாட்சியை அழைக்க மன்று கட்டளையிடுகிறது. அதன்படி டயலொக் நிறுவனத்தால் வழங்கப்பட்ட தரவுகள் தொடர்பில் விளக்கமளிக்க அந்த நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவர் முன்னிலையாகுமாறு அழைப்புக் கட்டளை பிறப்பிக்கப்படுகிறது, என்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் உத்தரவிட்டார்.

(ஒ.5.37)

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் தியாகராஜா



கொக்குவில் மேற்கு, சொர்ண வடலியைச் சேர்ந்த வைத்திலிங்கம் தியாகராஜா நேற்று (27.09.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா அருமைத்துரை

(முன்னாள் முகாமையாளர் - சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம்)



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா அருமைத்துரை அவர்கள் நேற்று (27.09.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் நீதிமலர் அவர்களின் அன்புக் கணவரும் காந்திமதி (நிறமதி- சுவிஸ்), சுரேஸ்குமார் (ஆசிரியர், யா/ உடுவில் புதுமடம் றோ.க.த.க.பாடசாலை) காலஞ்சென்ற ஹரிகரன் (நந்தன்) மற்றும் நளினி (வளர்- பிரான்ஸ்), கிரிஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஞானேஸ்வரன் (பிரான்ஸ்), மதியுகன் (தாதி உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் மாமனாரும் தசானி, தசான், தர்மிஷன், டக்சிகா, டானுசா, ரிஷாந், யானுஷா, ஆஹீர்ஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும், அன்னம்மா, கனகசபை ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (30.09.2019) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11.00 மணிக்கு தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் தெற்கு, இணுவில்
021 438 5807
(16/17)
தகவல்: பா.மதியுகன் (மருமகன்)
077 935 3563

## திருமதி இராஜரட்ணம் சுசீலா

(சுதேச மருத்துவர் - சுஜீவா வைத்தியசாலை)



அனுராதபுரம் மகாகளத்தாவையைப் பிறப்பிடமாகவும் முல்லைத்தீவு, பாலிநகர், வவுனிக்குளத்தை வசிப்பிடமாகவும் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி (சுஜீவா வைத்தியசாலை) தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராஜரட்ணம் சுசீலா நேற்று (27.09.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அனுராதபுரம் மாகளத்தாவையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் மேனுகாமி தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான K.O உக்குறால தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் அனுராதபுரத்தில் ஆயுள்வேத சர்வாங்க மற்றும் விசகடி வைத்தியத்தில் தேர்ந்து அரச பதவி பெற்ற 24 ஆவது பாரம்பரிய மருத்துவரும் பாலிநகர், வவுனிக்குளம் என்னும் இடத்தில் சுதேச வைத்தியத்தை மேற்கொண்டவருமான காலஞ்சென்ற Dr. (K.O) க.ஓ . இராஜரட்ணத்தின் ஆருயிர் மனைவியும் தனபாலசிங்கம், பூமணி, குணசுந்தரி, சறோஜா, யோகநாதன், நேசராணி, இரஞ்சினி (அருட்சகோதரி), நிசாந்தி, கல்யாணி, காலஞ்சென்றவர்களான ஜேசுதாசன், கணேசன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் ரஞ்சினியின் மைத்துனியும் Dr. சந்திரமாலா (சுஜீவா வைத்தியசாலை, சித்த ஆயுள்வேதம்), காந்திமாலா ஆகியோரின் அன்புத்தாயாரும் Dr. ஜெயலன் (மருத்துவப்பதிவாளர்- பிறப்பு இறப்பு பதிவகம் யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ்நகர்மேற்கு), விஜயசூரியா (பசும்பொன் நகையகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிந்துஜன் (A/L உயிரியல் பிரிவு), திருஷாந் (A/L கலைப் பிரிவு), கல்கிஜன் (ஆண்டு 3) சென்ஜோன்ஸ் கல்லூரி மாணவர்களினதும் தனுப்பிரியா (O/L) யாழ். இந்துமகளிர் கல்லூரி ) மற்றும் யுகன்யா (வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்

அன்னாரின் இறுதிச்சடங்குகள் யாழ்ப்பாணத்தில் நாச்சிமார் கோவிலுக்கு அருகாமையிலுள்ள இல்லத்தில் 29.09.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு நடைபெற்று மு.ப 10.00 மணிக்கு சுஜீவா வைத்தியசாலை, பாலிநகர், வவுனிக்குளம் என்னும் முகவரியிலுள்ள இல்லத்திற்கு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு அங்கு பகல் 12.00 மணிமுதல் 2.00 மணிவரை அஞ்சலிக்கு வைக்கப்பட்டு பாலிநகர் வவுனிக்குளம் இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 03 . 06 . 1961

மறைவு 09 . 10 . 2018



**அமரர் பொன்னையா குமாரகுலசிங்கம்**

ஓராண்டு என்ன ஓர் ஆயிரம் ஆண்டு சென்றாலும் நீங்கள் தான் எங்கள் தெய்வம் அப்பா! ஆயிரம் உறவுகள் இருந்தால் என்ன நீங்கள் தான் எங்கள் தெய்வம் அப்பா!
நித்தம் நித்தம் உங்கள் நினைவுகளுடன்

என்றும் உங்கள் நினைவுகளுடன்

சரசாலை வடக்கு, சாவகச்சேரி. (AC/0490)(11.17) **குடும்பத்தினர்.**

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**பாமதி அமிர்தகுமார்**
(ஆசிரியை, அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்)

தோற்றம் 13 - 09 - 1970

மறைவு 28 - 09 - 2014

பார் மறந்து நீயும் சென்று
பாமதியே ஆண்டுகள் ஐந்தாச்சு
காலனவன் கைப்பிடியில்
கண்ணீரைத் தந்துவிட்டு விண்ணோடு நீபோனாய்
ஆற்றும் வழி தேடுகின்றோம்
ஆறவில்லை எங்கள் மனம்
ஆறாத் துயர் கொண்டு
அழுகின்றோம் உனை எண்ணி
சாந்தி ! சாந்தி ! சாந்தி !

உன் நினைவால் வாடும் :
பொன்னாலை தெற்கு, சுழிபுரம். (0570)(04.17) **குடும்பத்தினர்.**

### உடனடி வேலைவாய்ப்பு

யாழ் நகரில் பிரபல்யமான கம்பனிக்கு உதவியாளர்கள், ஆலோசகர்கள், பணியாளர்கள் உடன் தேவை.
O/L தகைமை ஆண்,பெண் (CS28341)(11.17)
T.P :- 077 146 9540

### வாடகைக்கு

K.K.S வீதி, உப்புமடச் சந்தி கோண்டாவிலில் 1700 சதுர அடி கொண்ட கட்டடம் வாடகைக்கு உண்டு. நிறுவனங்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும். (CS/28330)(11.17)
**077 696 4269**

### யாழ் அம்மா பெண்கள் விடுதி

கல்வி கற்கும் பெண் பிள்ளைகளுக்கான உணவுடனும் சலக வசதிகளுடனும் கூடிய தங்குமிட வசதி யாழ்ப்பாணம் மனோகரா சந்திக்கு அருகில் NSB வங்கிக்கு முன்பாக உண்டு.
**076 616 3321, 076 919 8259**

### சாரதி தேவை

1) கனரக வாகன சாரதி - **Heavy Vehicle**
2) ரக்ரர் சாரதி - **Tractor Driver**

தொடர்புக்கு :- 075 918 3940
(திங்கள் முதல் - சனி வரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை5.00 மணிவரை மட்டும் தொடர்பு கொள்ளவும்) (CS/28335)(11.17)

### தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள தையலகத்திற்கு பெண்களுக்கான ஆடை தைப்பதற்கு பெண்கள் தேவை.
**077 172 7274** (CS/28321)(11.17)

### ES Printers

357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com
021 492 7471, 021 492 7472

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 08 - 12 - 1942

உதிர்வு 30 - 08 - 2019



கடந்த 30.08.2019 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் கந்தன் செல்வராசா**

அவர்களின் நித்தியஜீவன் அடையும்படியாக பிரார்த்தனை நிகழ்வு நாளை (29.09.2019) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
எமது குடும்பத் தலைவரை நாம் இழந்து தவித்து நின்றவேளை எமக்கு ஆறுதல் தந்து பலவழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

முகமாலை பச்சிலைப்பள்ளி, பளை (825) **குடும்பத்தினர்** 0765250347

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**கணபதி பாலசிங்கம்**



தோற்றம் 12-06-1957

மறைவு 15-09-2017

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து
அன்போடும் பண்போடும் பாசத்தோடும் பேணிப் பாதுகாத்து
எம்மை நல்வழி நடத்தி இன்று வானுறையும்
தெய்வமாகிவிட்டீர்கள்
காலங்கள் பல கடந்தாலும்
எங்கள் உயிருள்ளவரை எங்கள்
நினைவில் என்றும் நிலைத்திருப்பீர்கள்
சங்கானை கூடத்து மனோன்மணி அம்பாள்
பாதக் கமலங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழ். (00692) மனைவி **வசந்தா**

## தசாக கிருஹயஜ்ஞ அழைப்பு

நிகழும் விகாரி வருஷம் புரட்டாதி மாதம் 3 ஆம் நாள் (20.09.2019) வெள்ளிக்கிழமை தேய்பிறை சஷ்டித் திதியில் சிவலோகப் பிராப்தியடைந்த எமது தந்தை

**அமரர் பிரம்மஶ்ரீ குமாரசாமி குருக்கள் நித்தியானந்தசர்மா**

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

புரட்டாதி 12 ஆம் நாள் (29.09.2019) ஞாயிற்றுக் கிழமை பகல் - தாசகம்
புரட்டாதி 13 ஆம் நாள் (30.09.2019) திங்கட்கிழமை ஏகோதிஷ்டம் பகல் - மாசிதம்
புரட்டாதி 14 ஆம் நாள் (01.10.2019)செவ்வாய்க்கிழமை பகல் - சபிண்டீகரணம்
புரட்டாதி 15 ஆம் நாள் (02.10.2019) புதன்கிழமை மதியம் - கிருஹயஜ்ஞம் (சமாராதனை)

மேற்படி கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சங்குவேலி சிவஞானப் பிள்ளையார் கோயிலடி, மானிப்பாய். (CS/31349)(11.17) **குடும்பத்தினர்.** 077 6279395

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள்,கருவாட்டுக்கடைகள் என்பன குத்தகைக்கு/ வாடகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல் - 2020

கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித்திகதி :- 11.10.2019 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி :- 11.10.2019 வெள்ளிக்கிழமை நண்பகல் 01.00 மணிவரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 11.10.2019 வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணி


| இல | குத்தகைவிபரம் | மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித்தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்கமுடியாதது) |
|---|---|---|---|---|---|
| | **மல்லாகம் உப அலுவலகம்** | | | | |
| 01 | அளவெட்டி மலைவேம்படிச்சந்தை | - | 49,500.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | அளவெட்டிமலைவேம்படி கோழிக்கடை இல - 06 | 1,000.00 | 49,500.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | அளவெட்டிமலைவேம்படி ஆட்டிறைச்சிக்கடை இல-07 | 1,000.00 | 24,350.00 | 1,000.00 | 1,000.00 |
| 04 | அளவெட்டி மலைவேம்படி கருவாட்டுக்கடை | 1,000.00 | 8,870.00 | 1,000.00 | 1,000.00 |
| 05 | மல்லாகம் பொதுச்சந்தை | ...... | 121,200.00 | 1,000.00 | 1,000.00 |
| 06 | மல்லாகம் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,250.00 | 726,000.00 | 10,000.00 | 1,000.00 |
| 07 | மல்லாகம் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 2,250.00 | 100,200.00 | 1,000.00 | 1,000.00 |
| 08 | மல்லாகம் பொதுச்சந்தை கோழிக்கடை | 2,250.00 | 585,600.00 | 10,000.00 | 1,000.00 |
| 09 | இரால்மடம் சந்தை | ...... | 10,000.00 | 1000.00 | 1000.00 |
| 10 | இரால்மடம் சந்தை கோழிக்கடை | பிரதேசசபையால் தீர்மானிக்கப்படும் தொகை | 10,000.00 | 1000.00 | 1000.00 |
| 11 | இரால்மடம் சந்தை மாட்டிறைச்சிக் கடை | பிரதேசசபையால் தீர்மானிக்கப்படும் தொகை | 10,000.00 | 1000.00 | 1000.00 |
| 12 | கும்பலை மாட்டிறைச்சிக்கடை | 1,250.00 | 661,300.00 | 10,000.00 | 1,000.00 |
| 13 | கும்பலைச்சந்தை | ...... | 202,000.00 | 1,000.00 | 1,000.00 |
| | **தெல்லிப்பளை உப அலுவலகம்** | | | | |
| 01 | கூத்தன்சீமா சந்தை | ...... | 12,800.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | கூத்தன்சீமா சந்தைகோழிக்கடை | 1,050.00 | 49,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | கூத்தன்சீமா சந்தைகருவாட்டுக்கடை | பிரதேசசபையால் தீர்மானிக்கப்படும் தொகை | 8,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 04 | கனேஸ்வரம் சந்தை | ...... | 40000.00 | 1000.00 | 1000.00 |
| | **மயிலிட்டி உப அலுவலகம்** | | | | |
| 01 | வீமன்காமம் பொதுச்சந்தை | ...... | 297,000.00 | 1000.00 | 1000.00 |
| 02 | வீமன்காமம் பொதுச்சந்தை கோழிக்கடை | 1,050.00 | 629,200.00 | 10,000.00 | 1,000.00 |
| 03 | வீமன்காமம் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,050.00 | 170,500.00 | 1,000.00 | 1,000.00 |
| 04 | வீமன்காமம் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 1,050.00 | 20,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 05 | வீமன்காமம் பொதுச்சந்தை கருவாட்டுக்கடை | பிரதேசசபையால் தீர்மானிக்கப்படும் தொகை | 9,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 06 | குரும்பசிட்டி சந்தை | ...... | 10,000.00 | 1000.00 | 1000.00 |
| 07 | குரும்பசிட்டி கோழிக்கடை | பிரதேசசபையால் தீர்மானிக்கப்படும் தொகை | 20,000.00 | 1000.00 | 1000.00 |
| 08 | குரும்பசிட்டி மாட்டிறைச்சிக்கடை | பிரதேசசபையால் தீர்மானிக்கப்படும் தொகை | 25,000.00 | 1000.00 | 1000.00 |

குறிப்பு :
- மாதவாடகை யாவும் விலைமதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.
- கேள்விப்பத்திரம் கோருபவர்கள் ஆள் அடையாள அட்டையுடன் அதன் போட்டோப் பிரதியையும் கொண்டுவருதல் வேண்டும்.
- இறைச்சிக்கடை விண்ணப்பம் பெறுபவர்கள் முன்பு கடை நடாத்திய பிரதேசசபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லை என்பதை உறுதிப்படுத்திய கடிதம் சமர்ப்பிக்க வேண்டும்.
- போதிய காரணங்களால் கேள்வியை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் கேள்விச்சபைக்கு உண்டு.
- கேள்விப் படிவம் பூரணப்படுத்தப்பட்டு அரக்கு முத்திரையிட்ட கடிதஉறையில் குறித்த தினத்திற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ சேர்ப்பதுடன் கேள்விப் படிவத்தின் ஒருபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர் அலுவலகம் யாழ்ப்பாணம்" அவர்களுக்கும் அனுப்புதல் வேண்டும்.
- ஏனைய மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்திலும், மல்லாகம், தெல்லிப்பளை, மயிலிட்டி உப அலுவலகங்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பபடிவங்களை மேற்படி உபஅலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
- மல்லாகம் சந்தை, அளவெட்டி மலைவேம்படிசந்தை, கூத்தன்சீமா சந்தை, கும்பலைச் சந்தை, வீமன்காமம் சந்தைகளிலிருந்து 500M தூரத்திற்கு உட்பட்ட கடைகளிலோ அல்லது வேறு எவ்விடத்திலும் மரக்கறி விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது.
- மல்லாகம் சந்தை, அளவெட்டி மலைவேம்படிசந்தை, கூத்தன்சீமா சந்தை, கும்பலைச் சந்தை, வீமன்காமம் சந்தைகளிலிருந்து 500M தூரத்திற்கு உட்பட்ட கடைகளிலோ அல்லது வேறு எவ்விடத்திலும் கோழிஇறைச்சி கடலுணவு விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது.
- சந்தையைகுத்தகைக்குஎடுப்பவரால் சந்தையில் மேற்கொள்ளப்படும் அறவீடுகளுக்குபற்றுச்சீட்டுவழங்கப்[illegible] வேண்டும்.

28.09.2019 [illegible] தவிசாளர், வலிகாமம் வடக்குபிரதேசசபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி).

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணில் 13 . 09 . 1937



விண்ணில் 29 . 08 . 2019

## அமரர் ஆறுமுகம் சுப்பிரநாதன்

(இளைப்பாறிய ஸ்ரீலங்கா விமானப்படை - தீயணைப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி - சீனக்குடா)

கடந்த 29.08.2019 அன்று இறையடி சேர்ந்த எமது அணையா விளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை (29.09.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அந் நிகழ்வில் கலந்துகொள்வதுடன், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்னாரது அன்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

அன்னாரது பிரிவுத்துயரில் நேரடியாக பங்கு கொண்டவர்களுக்கும், தொலைபேசி, தந்தி, கடிதம், சமூகவலைத்தளங்கள், ஊடாக துயர் பகிர்ந்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், வெளியிட்டோருக்கும், அஞ்சலி உரை நிகழ்த்தியவர்களுக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**செட்டியார் மடம்,**
**அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.**

**குடும்பத்தினர்.**

(cs. 28302) (13.17)

---

**NOTICE**

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

**OPERATIONAL TECHNICAL SECRETARIAT (OTS)**
**WORLD BANK FUNDED ACCELARATING HIGHER EDUCATION EXPANSION AND DEVELOPMENT (AHEAD) OPERATION**
**WALK - IN - INTERVIEW**

**Post OF Technical Assistant (Full Time)- On Contract basis - 01 Vacancy**

**Post OF Project Assistant (Full Time)- On Contract basis - 02 Vacancies**

Walk in Interview for the above positions - on Contract Basis will be held on 04.10.2019 from 9.00 am to 11.00 am, at the mini Board Room, Administration Block of the University of Jaffna.

Eligible Candidates are requested to be present for an interview with self - prepared application in the prescribed format available in the University website along with relevant original certificates on the date and the time mentioned above.

For further details please refer the University of Jaffna website **www.jfn.ac.lk**

**Registrar.**

(0570)(4.17)

---

# அந்தியேட்டி, ஆன்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



27.08.2019 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

## அமரர் சுப்பையா இராசையா

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 26.09.2019 வியாழக் கிழமை கீரிமலை புனிததீர்த்தக்கரையில் நடைபெற்றன, ஆன்மசாந்திப் பிரார்த்தனை நாளை (29.09.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு தாவடி மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள **குபேர மஹால் மண்டபத்திலும்** (சுதுமலை அம்மன் கோயில் அருகாமை) நடைபெறும். ஆன்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இல.117, கோயில் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

(CS 28123)(14.17)

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**


---

# மரண அறிவித்தல்

## செல்லத்துரை நடேசபிள்ளை

**(அல்லைப்பிட்டி இனிச்சபுளியடி முருகன் ஆலய தர்மகர்த்தாவும் மட்டக்களப்பு ஈஸ்வரி சினிமா தியேட்டர், செங்கலடி ஸ்ரீ முருகன் தங்க நகை, யாழ்ப்பாணம் தங்க முருகன் நகை முன்னாள் உரிமையாளரும்)**

| தோற்றம் : . | மறைவு |
|---|---|
| 21.03.1936 | 26.09.2019 |



அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், 130, இராசாவின் தோட்டம் நல்லூரை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை நடேசபிள்ளை 26.09.2019 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை (உடையார்) - சொர்ணம்மா தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்ற சிதம்பரநாதர் - சொர்ணம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், மங்கையக்கரசியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான தவவிநாயகம் (விதானையார்), தையல்நாயகி, வேலாயுதப்பிள்ளை, சிவயோகலக்ஷ்மி, நடேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கஜந்தினி (லண்டன்),சுதாஜினி (பிரான்ஸ்), துஷ்யந்தன் (பிரான்ஸ்), கஜநேசன் (லண்டன்), தமலினி (லண்டன்), பிரியதர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரபாகர், சிவகுமார், சங்கீதா, சியாமலா, விஜயானந் ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருஷ்ணாம்பாள், காலஞ்சென்ற ஞானசம்பந்தர் மற்றும் இராசம்மா, காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி (தபால் அதிபர், அல்லைப்பிட்டி), சச்சிதானந்தம், கந்தையா (சிறாப்பர், வேலணை), செல்வலக்ஷ்மி மற்றும் புவனேஸ்வரி, சுயம்புலிங்கம், திருநாவுக்கரசு ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, இராமநாதன் மற்றும் சீவரெட்ணம், ஜெயசிறி, பராசக்தி ஆகியோரின் அன்புச் சகலனும்,நேத்திரா, கஜீஸ், வைஷ்ணவன், தாரிக்கா, தர்சனா, கர்சினி, சபரிகரிஸ், சாம்பவி, வர்ஷன், யஸ்விக்கா, சங்கீத் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக நேற்றுமுன்தினம் (26.09.2019) வியாழக் கிழமையிலிருந்து இன்று (28.09.2019) சனிக்கிழமை வரை 130, இராசாவின் தோட்டம், நல்லூர் என்னும் முகவரியில் வைக்கப்பட்டு நாளை (29.09.2019) ஞாயிற்றுக் கிழமை அல்லைப்பிட்டி 2 ஆம் வட்டாரத்திலுள்ள அவரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லைப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS/28323)(11,17)

**தகவல்: குடும்பத்தினர்.**


**077 634 2489, 021 222 5921, 077 134 5980**

ராசி அதிர்ஷ்டம்
திகதி 27.09.2019 | வெற்றி வாரம் 2630 | வர்ணம் கடும் நீலம்
கும்பம்
வெற்றி இலக்கங்கள் 08 09 11 32
சனிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 921, 638/=
28.09.2019ம் திகதி சனிக் கிழமை இளம் நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
SMS: DLB<space>LOT<space>LW 1919 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1047
சீட்டிழுப்பு திகதி 2019.09.26 வியாழக்கிழமை
L 01 15 54 72
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 76,747,924/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 744
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 54,972,430/-
சீட்டிழுப்பு திகதி: 2019.09.27
34 41 46 58 J
விசேட வெற்றி இல. 3730

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 283
சீட்டிழுப்பு திகதி 27.09.2019 சிகப்பு
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 10 12 63
விதி எண் 08
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 44, 568, 412/=
02.10.2019ம் திகதி புதன் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk




## சிங்கள...

மூலம் வழங்கிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் இங்கு ஒரு கேள்வி எழுப்புகிறேன். இந்த நாடு யாருடையது? இந்த நாட்டின் உத்தியோகபூர்வ மொழி எது? இந்த நாடு 2 ஆயிரத்து 500 வருடங்களுக்கு முன்னரும் இருந்தது. இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் மதங்கள் தோற்றம் பெறும் முன்னரே, இந்த நாடு இருந்தது. இந்தக் கலாசாரத்தை நாம் தான் தற்போதுவரை கொண்டு வந்துள்ளோம். ஆனால், எமக்கு இப்போது சிங்களம் பேச முடியாதுள்ளது.

தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சிங்களம் தெரியாதமையால், எமக்கும் எமது மொழியை பேச முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதுதொடர்பாக நாம் மிகவும் கவலையடைகிறோம். இதனை தமிழர்களும், முஸ்லிம்களும் உணர்ந்து கொள்ள வேண்டும். இந்த நாட்டில் வாழ வேண்டுமெனில், முதலில் சிங்கள மொழியை கற்றுக்கொள்ளுங்கள் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நாட்டின் தலைவராக வருபவர், தேசிய பாதுகாப்பை பலப்படுத்தும் நபராக இருக்க வேண்டும் என்பதோடு, தெற்கிலுள்ள சட்ட திட்டங்களை வடக்கு கிழக்கிலும் நடைமுறைப்படுத்தக்கூடிய ஒருவராகவும், வடக்கும் கிழக்கும் இலங்கையின் பகுதி என்பதை நிரூபிக்கும் ஒருவராகவும் இருக்கவேண்டும். இதன் ஊடாக மட்டுமே இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்த முடியும். இந்த நாட்டில் அனைவருக்கும் ஒரு சட்டம் தான் இருக்க வேண்டும்.

இவ்வாறான ஒருவர் தான் நாட்டுக்கு தலைமையேற்க வேண்டும். நாம் அண்மையில் முல்லைத்தீவுக்கு சென்றிருந்த போது, எமக்கு தமிழ் நாட்டுக்கு சென்ற ஓர் உணர்வு ஏற்பட்டது.

வடக்கு ஒன்றும் தமிழ் நாட்டின் ஒரு பகுதி அல்ல. அங்கும் எமது நாட்டின் சட்டத்திட்டங்கள் செல்லுபடியாகும். அங்கு, அரசமைப்பு மதிக்கப்படவில்லை. இதனால், அங்கு எம்மால் நீதியை எதிர்ப்பார்க்க முடியாது.

இவற்றையெல்லாம் மாற்றியமைக்கும் ஒரு தலைவர் வர வேண்டும். இதனை நாம் இப்படியே விட்டுவிட்டால், எதிர்காலத்தில் பெரிய பிரச்சினைகளுக்கு நாம் முகம் கொடுக்க வேண்டியேற்படும். இது சிங்கள- பௌத்த நாடாகும். இதனை ஏற்றுக் கொண்டவர்கள் மட்டும் இந்த நாட்டில் இருக்கலாம். ஏற்காதவர்கள், தங்களது உடமைகளுடன் தாராளமாக வேறு நாடுகளுக்கு செல்லாம் - என்றார். (ஒ,5)

## சஜித்...

ளுமன்ற ஆட்சியிலும் உடனடியாக மாற்றம் வரும். இவ்வாறு சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைவரும், முன்னாள் அரச தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக சஜித் பிரேமதாச நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பன்னாட்டு செய்திச் சேவையொன்றின் கொழும்புச் செய்தியாளருக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சி பிளவுபடக்கூடாது எனக் கருதி சஜித் பிரேமதாசவை அரச தலைவர் வேட்பாளராக ரணில் களமிறக்கினாலும் அவர் தேர்தலில் தோல்வியடைவது நிச்சயம். அரச தலைவர் தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச வெற்றியடைவது உறுதி. அரச தலைவர் தேர்தலில் எத்தனை வேட்பாளர்கள் களமிறங்கினாலும் அத்தனை வேட்பாளர்களையும் எமது கட்சி வேட்பாளர் கோத்தபாய தோற்கடிப்பார். சஜித், கோத்தாவுக்கு சவால் அல்லர். அவர் கோத்தாவுக்குத் தூசி.

நவம்பர் 16ஆம் திகதி நள்ளிரவு மாபெரும் வெற்றிச் செய்தி நாட்டு மக்களுக்குக் காத்திருக்கின்றது. மறுநாள் 17ஆம் திகதி நாட்டின் அரச தலைவராக கோத்தபாய பதவியேற்பார். அன்றைய தினம் நாடாளுமன்ற ஆட்சியிலும் மாற்றம் நடக்கும்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இன்னமும் மோதல் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. சஜித் வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ளமையை அந்தக் கட்சிக்குள் பலர் விரும்பவே இல்லை. நவம்பர் 16ஆம் திகதியுடன் ஐக்கிய தேசியக் கட்சி முகவரியற்றுப் போய்விடும். அந்தக் கட்சிக்குள் அதிருப்தியில் உள்ள பலர் நவம்பர் 17ஆம் திகதி எம்முடன் கைகோர்க்கத் தயாராகவுள்ளனர் - என்றார். (ஒ,5,22)

## மன்றுக்கு...

முன்னிலை சோசலிசக் கட்சியின் பொதுச் செயலர் குமார் குணரட்ணம்.

யாழ்ப்பாணப் பொதுநூலக சிற்றுண்டிச்சாலைக் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

2011 ஆம் ஆண்டு கடத்தப்பட்டுக் காணாமலாக்கப்பட்ட மனித உரிமைச் செயற்பாட்டாளர்களான லலித் மற்றும் குகனின் வழக்கு விசாரணை யாழ்ப்பாண நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கில் சாட்சியமளிக்க கோத்தபாய ராஜபக்ச யாழ்ப்பாண நீதிமன்றுக்கு வருகைதரவேண்டியிருந்தது. ஆனால், அவர் வரவில்லை. கொழும்பு மேல் நீதிமன்றிலிருந்து ஒரு கட்டளை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச யாழ்ப்பாணம் வருவதற்கு பாதுகாப்பு இல்லை, என்று குறிப்பிட்ட கட்டளை யாழ்ப்பாண நீதிமன்றுக்கு அனுப்பிவைத்துள்ளார். அதன் காரணமாக அவர் யாழ்ப்பாண நீதிமன்றுக்கு நேற்று வரவில்லை.

பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக களமிறங்கவுள்ள கோத்தபாய ராஜபக்ச தேர்தல் பரப்புரைக்காக யாழ்ப்பாணத்துக்கு வரமுடியாத சூழ்நிலை காணப்படுகின்றது.

காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான ஒரு வழக்குக்கு வர முடியாது, பாதுகாப்பு இல்லை என்று கூறும் ஒருவர் அரசதலைவர் பரப்புரைக்கு எவ்வாறு வர முடியும்?. மே மாதம் தொடக்கம் விசாரணைக்கு வர முடியாதென்று கூறிவருகிறார். தனக்குப் பாதுகாப்பு போதாதென்றும் கட்டளையில் குறிப்பிட்டுள்ளார்.

### மகிந்த- கோத்தாவே பொறுப்பு

ஜனநாயகத்துக்கு எதிராக நடந்த மகிந்த ராஜபக்ச ஆட்சியால்தான் உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றொரு சம்பவமாகவே, காணாமலாக்கப்பட்ட மக்களின் உறவுகளைத் தேடித் தகவல் பெற்றவர்களும் காணாமலாக்கப்பட்டுள்ளனர். இதுவும் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயே இடம்பெற்றுள்ளது. காணாமலாக்கப்பட்டவர்களின் ஆவணங்கள் இராணுவத்திடமும் இராணுவத்துக்கு ஆதரவாகச் செயற்பட்ட குழுக்களிடமும் இருந்தன.

ஜனநாயகத்துக்கு எதிராகச் செயற்பட்ட ஒருவர் தான் அரச தலைவராகப் போட்டியிடுகின்றார். இந்த விடயம் தொடர்பில் தமிழ் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் - என்றார். (து-106)


## இனுவில் கந்தசுவாமிகோயில் கணக்காளர் தேவை

மேற்படி இனுவில் கந்தசுவாமி கோவிலில் கடமையாற்ற கணக்காளர் தேவையாக உள்ளது. சம்பளம் நேரில் தீர்மானிக்கப்படும். முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விவரங்களை அறிவதற்கு **077 360 4456** என்னும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். அல்லது **காலை 5 மணி தொடக்கம் 6.30 மணிக்குள்** பணிமனைக்கு வந்து சபைத் தலைவருடன் தொடர்பு கொள்ளவும். **05.10. 2019** இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

**தலைவர்**
**தர்மகர்த்தா சபை,**

(cs.28309) (13.17)

# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் கொடியேற்றத் திருவிழா





■ கந்தையா கனகசபை.

ஈழத் திருநாட்டின் சரித்திரப் பிரசித்தி பெற்ற விஷ்ணு ஆலயங்களில் ஒன்றான வடமராட்சி பகுதியிலே துன்னையம்பதியிலே கோயில் கொண்டு எழுந்தருளி அருளாட்சி புரிகின்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் விகாரி வருட 2019ஆம் ஆண்டின் கொடியேற்றத் திருவிழா தமிழ் புரட்டாதி 9ஆம் திகதி சனிக்கிழமையான இன்று வெகு சிறப்பாக பக்திபூர்வமாக இடம்பெறுகின்றது.

இன்று ஆரம்பமாகிய திருவிழா தொடர்ந்து 17 தினங்கள் இடம்பெற்று அன்று இடம்பெறுகின்ற கேணித் திருவிழா நடைபெற்று கொடியிறக்கத் திருவிழாவுடன் இனிதே நிறைவுபெறும். கொடியேற்ற நாளிலிருந்து 7ஆம் திருவிழா வரை சுவாமி உள்வீதி வலம் வந்து காட்சிகொடுத்து எதிர்வரும் 5ஆம் திகதிலிருந்து 14ஆம் திகதி வரை சுவாமி வெளிவீதி உலா வந்து பக்தர்களுக்கு காட்சி கொடுப்பார்.

அந்த வகையில் எதிர்வரும் 5ஆம் திகதி குருக்கட்டு விநாயகர் திருவிழாவும் தொடர்ந்து 6ஆம் திகதி வெண்ணெய்த் திருவிழாவும் 7ஆம் திகதி துகில் திருவிழாவும் 8ஆம் திகதி பாம்புத் திருவிழாவும் 9ஆம் திகதி ஹம்சன் போர்த் திருவிழாவும் 10ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும் 11ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் 12ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 13ஆம் திகதி சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும் 14ஆம் திகதி கேணித் திருவிழாவும் இடம்பெற்று அன்று இடம்பெறுகின்ற கொடியிறக்கத் திருவிழாவுடன் மகோற்சவ திருவிழா இனிதே நிறைவுபெறும். சுவாமி வெளிவீதி வந்து காட்சி தரும் வேளையில் கற்கோவளம் அறநெறிப் பாடசாலை மாணவர்களால் அந்த அந்தநாள் உற்சவத்தை சித்திரிக்கும் முறையில் ஆற்றுப்படுத்தும் நிகழ்வுகள் இடம்பெறுவதைக் காணலாம்.

இந்த ஆலயத்தைச் சுற்றியுள்ள கிராம மக்களாகிய கற்கோவளம், புலோலி துன்னாலையூர் வாசிகள் இவ்வாலயத்தின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து பாரம்பரிய வழக்கத்தைப் பின்பற்றி நீண்டகாலமாக மகோற்சவ உபயம் செய்கின்ற நிலை இங்கு காணப்படுகின்றது.

மற்றைய ஆலயங்களிலே மூலஸ்தானத்திலே விக்கிரகங்கள் அமைந்திருக்கும். ஆனால் இங்கு மூலஸ்தா னத்தில் சுயம்பு வடிவமான ஸ்ரீ சுதர்சன சக்கரமே அமைந்துள்ளது இந்த ஆலயத்தின் சிறப்பு அம்சமாகும். ஸ்ரீ விஸ்ணு சகஸ்ர நாமத்தை பாராயணம் செய்வதும் அதைக் கேட்பதுகே நாம் எடுத்த மனிதப் பிறவியின் செய்த பல்வினைகளைப் போக்கி வைகுந்த பிராப்தம் தருவதாகும்.

வல்லிபுர ஆழ்வாரின் மேற்குப் புறம் அமைந்துள்ள குருக்கட்டு சித்தி விநாயகர் ஆலயத்தக்கும் வல்லிபுர ஆழ்வாருடைய மகோற்சவத்துக்கும் பாரம்பரிய தொடர்புகள் உள்ளதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

வல்லிபுர ஆழ்வாரின் கொடியேற்றத் திருவிழாவுக்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் குருக்கட்டு விநாயகரின் ஆலய முன்றிலில் கொடியற்றி விநாயகருக்கு சிறப்பு பூசை வழிபாடுகள் செய்து விநாயகர் பக்தர்கள் புடைசூழ வீதிவலமாக வல்லிபுர மாயவன் ஆலயம் சென்று வருவதும் உற்சவ காலங்களில் வல்லிபுர மாயவன் குருக்கட்டு விநாயகர் ஆலயம் சென்றுவருவதும் தொன்றுதொட்டு உள்ள ஆலய மரபாக பேணப்படுகின்றது.

இன்றைய கொடியேற்ற நன்னாளில் வடபகுதியில் இருந்தும் இலங்கை பலபாகங்களில் இருந்தும் லட்சக்கணக்கான பக்த கோடிகள் கலந்து கொண்டு இருக்கின்றார்கள். எங்கு பார்த்தாலும் ஆலய வளாகத்தில் 'அரோகரா' கோசம் வானைப் பிளக்கின்றது. அந்தணர்களின் வேதபராயண ஒலி மறுபுறம். பக்தர்கள் தங்கள் நேர்த்திக் கடன்களைத் தீர்ப்பதற்காக ஆண் அடியவர்கள் காவடி எடுத்தும், அங்கப் பிரதிஷ்டை செய்தும் பெண் அடியவர்கள் அடி அழித்தும் கற்பூரச் சட்டி ஏந்தியும் தங்கள் கடன்க்ளை செலுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அடியார்களுக்கு தாகசாந்தி வழங்குவதற்காக ஆங்காங்கே தாகசாந்தி நிலையங்கள் அமைக்கப்பெற்றும் பசியைப் போக்க அன்னதான மடங்களிலே அன்னதானம் வழங்கவும் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சுகாதாரத்தைப் பேண சுகாதாரப் பகுதியினர் சிறப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதுடன் களவுகளை ஒழிக்க பொலிஸாரும் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

அந்த வகையில் வல்லிபுல மாயவனின் கொடியேற்றத்தை காண வரும் பக்தர்களுக்கு வல்லிபுர ஆழ்வார் வல்வினை அகற்றி நாட்டில் சாந்தி, சமாதானம் நிலவ அருள்பாலித்து எம் நாட்டில் உள்ள அனைவரும் இன்புற்று வாழ்ந்து இந்த மண்ணில் மனிதப் பிறவி எடுத்ததன் நற்பயனை அனுபவித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ திருவருள் பாலிப்பாராக. ■

# அடிமையாகாதே... அடிமையாக்காதே!

கண் விழித்துப் படிக்கும் அருமைப் பிள்ளைக்கு தேநீர் கோப்பையைக் கையில் கொடுத்துவிட்டு, தேநீர் குடித்ததும் கோப்பையை கையில் வாங்கிப் போகும் பெற்றோர்கள் எதிர்காலத் தலைமுறையை உருவாக்குகிறார்களா? இல்லை உருக்குலைக்கிறார்களா என்றால், உருக்குலைக்கிறார்கள் என்பதே என் கருத்து.

தன் வேலைகளைத் தானே பார்க்காதவனே தலைவன், மேலாளர், மேம்பட்டவன், மேஸ்திரி என்கிற அபிப்பிராயம், அடிமைப் புத்தி, பலவீனம். வளர்ந்த நாடுகளில் இந்த அடிமைத்தனம் இல்லை. முன்னேறிய நாடுகளின் விடுதி அறைகளில் தவறாமல் "தேநீர் தயாரிப்பவர் இருப்பார்' இருக்கும்.

அவரவர் காலைத் தேநீரை அவரவர் தயாரித்துக் கொள்ள வேண்டும். தனக்கான தேநீரைத் தயாரிக்கிற மாதிரியே தனக்கான வாழ்க்கையையும் அவர் அவரே தயாரித்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் அங்கே இருக்கிறது. அளவுக்குமேல் பிறரைச் சார்ந்திருக்கும் அடிமைத்தனத்தை விட்டு வெளியில் வர வேண்டும்.

கொஞ்சம் யோசியுங்கள்... ஒரு தனிமனிதனின் வருகைக்கும் வழி அனுப்புதலுக்கும் நூற்றுக்க ணக்கான தனிமனிதர்கள், அதுவும் இளைஞர்கள் தங்கள் பொன்னான நேரத்தை வீணாக்கிக் காத்திருக்க வேண்டுமா?. இதுதான் பகுத்தறிவா..?. வேலை வெட்டி இருந்தால் இளைஞர்கள் இப்படி நேரத்தை வீணாக்குவார்களா?.

என் இனிய நண்பர்களே..! எவருக்கும் ஜே போடாதீர்கள். பெட்டி தூக்காதீர்கள். அடிமைகளாகிச் சுயமரியாதையை இழக்காதீர்கள். பிறருக்கு அடிமையாகும் நிலையை வெறுக்கிறேன். பிறரை அடிமையாக்கும் தலைமையை அறவே வெறுக்கிறேன். பிறருக்கு அடிமையாவது தவறு. பிறரை அடிமையாக்குவது பெரும் தவறு.

ஜோர்ஜ் வொஷிங்டன் அமெரிக்காவின் முதல் அரச தலைவர். அவர் தலைமையில் அமெரிக்காவில் போர் நடந்து கொண்டிருந்த சமயம். பத்துப் பதினைந்து போர் வீரர்கள் ஓர் உத்திரத்தைப் படாதபாடு பட்டு நகர்த்திக் கொண்டிருந்தார்கள். அவர்கள் குழுவின் தலைவன் குதிரையில் அமர்ந்தபடி அவர்களை அதட்டி உருட்டி வேலைவாங்கிக் கொண்டிருந்தான். அவர்கள் ஒரு குறிப்பிட்ட உயரத்துக்கு அந்த உத்திரத்தை நகர்த்த முடியாதபடி அதிகச் சிரமப்பட்டார்கள். வேகமாக அதட்டினான் அந்தக் குழுவின் தலைவன்.

அப்போது அங்கு குதிரையில் வந்த வீரன் ஒருவன் தலைவனைப் பார்த்து, "அவர்கள் இவ்வளவு கஷ்டப்படுகிறார்களே... நீயும் அவர்களோடு சேர்ந்து அதை நகர்த்தக் கூடாதா?" என்று கேட்டான். குழுத் தலைவன், "நான் யார் தெரியுமா? அவர்களின் தலைவன்... அவர்களோடு சமமாக நான் வேலை செய்ய முடியுமா?" என்று உறுமினான்.

குதிரையில் வந்தவன் இறங்கி, வீரர்களுக்கு உதவி, உத்திரத்தை நகர்த்தி அதன் இடத்தில் வைத்துவிட்டுப் பிறகு தனது குதிரையில் ஏறி அமர்ந்தான். அந்தக் குழுவின் தலைவனைப் பார்த்து, "இனி இப்படிக் கடினமான வேலை ஏதாவது இருந்தால் எனக்குச் சொல்லி அனுப்புங்கள். அவசியம் நான் வந்து உதவுகிறேன்" என்று உரக்கச் சொன்னான்.

"நீ யார்? உனக்கு எப்படிச் சொல்லி அனுப்புவது? உன் இருப்பிடம் எது?" என்று அலட்சியமாகக் குழுத் தலைவன் கேட்டான். "நானா... ஜோர்ஜ் வொஷிங்டன். உங்கள் தலைமைத் தளபதி" என்று அழுத்தமாகக் கூறிவிட்டுக் குதிரையைத் தூண்டிச் சிட்டாய்ப் பறந்தார் ஜோர்ஜ் வொஷிங்டன். அந்த நாட்டு வெற்றியின் ரகசியம் புரிகிறதா? அடிமையாக ஆசைப்படும் மக்கள் நிலமை அபத்தமானது! அடிமையாக்க ஆசைப்படும் தலைமை ஆபத்தானது! சுயமரியாதையுடன் வாழுங்கள். கௌரவம் நிச்சயம்... கௌரவமான வெற்றி சர்வ நிச்சயம்!

சுகி சிவம்

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# இரு தலைக் கொள்ளி எறும்பாகத் தமிழர்கள்

ஒரு வழியாக அடுத்த அரச தலைவர் தேர்தலில் எந்த வேட்பாளர்களுக்கு இடையில் முதன்மையான போட்டி இருக்கப்போகிறது என்பது முடிவாகிவிட்டது. ஐக்கிய தேசியக்கட்சிதனது வேட்பாளரைஉத்தியோகபூர்வமாக அறிவித்த நிலையில் கோத்தபாய மற்றும் சஜித் பிரேமதாசவுக்கு இடையில் அந்தப் போட்டி இருக்கும் என்பதைச் சொல்வதற்கு பெரிய அறிவு தேவையில்லை. இலங்கையின் அரசியல் வரலாறு கொஞ்சம் தெரிந்திருந்தால் போதுமானது.

ஜே.வி.பி. உள்பட இன்னும் பலர் போட்டிக் களத்தில் இருந்தாலும் இந்த இரு வேட்பாளர்கள் இடையில்தான் போட்டி இருக்கும் என்பது தெரிந்த ஒன்றுதான். இந்த நிலையை மாற்றக்கூடிய மூன்றாவது தரப்பு ஒன்று உருவாகாத வரையில் இருதரப்பு போட்டி என்பதில் மாற்று இருப்பதற்கான வாய்ப்புக்கள் வெகு குறைவே!

ஐ.தே.கவின் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட கையோடு, பிளவுபடாதஒன்றிணைந்தநாட்டுக்குள்அதியுச்சஅதிகாரப் பகிர்வுடன்தீர்வை வழங்கநடவடிக்கைஎடுப்பேன்என்று வாக்குறுதியளித்திருக்கிறார் சஜித் பிரேமதாச. இந்த விடயத்தை அவர் இதற்கு முன்னரும் பல தடவைகள் கூறிவருகின்றார். ஒன்றிணைந்த நாடு என்று இப்போது அவர் கூறினாலும் ஒற்றையாட்சியை விட்டுக்கொடுக்க முடியாது என்கிறநிலைப்பாடேஅவருடையதுஎன்பதைப்பறைசாற்றக்கூடிய பல காணொலிகள் இணையங்களில் விரவிக் கிடக்கின்றன.

தமிழ்மக்களின்பிரச்சினைக்குத்தீர்வுகாணப்படவேண்டும் என்பதுநியாயமானதுஎன்பதைஏற்கும்அவர், அந்தத்தீர்வு சிங்கள, பௌத்த மக்களை கிலேசம் கொள்ள வைக்காத வகையில்ஒற்றையாட்சிக்குள்தான்காணப்படவேண்டும் என்றே வலியுறுத்தி வந்திருக்கிறார். எனவே இன்றைய ஆட்சியில் உருவாக்கப்பட்ட புதிய அரசமைப்புக்கான வரைபைநிறைவேற்றுவதுஅவருக்குசிக்கலுக்குரியதொன்றாக இருக்காது. அந்த வரைவு அவர் கூறுவதைப் போன்று இலங்கையின்ஒற்றையாட்சிப்பண்பைச்சிங்களவர்களிடம் பாதுகாத்தபடியே சில முன்னேற்றகரமான அம்சங்களையும் தாங்கி நிற்கின்றது என்பது அதற்குக் காரணம்.

அதேநேரம், அவரது நேற்றைய கருத்தில் உள்ள மற்றொரு விடயம் தமிழ் மக்களை கிலி கொள்ள வைக்கிறது. பன்னாட்டு உடன்படிக்கைக்கோ அல்லது உள்நாட்டு உடன்படிக்கைக்கோ நான் அடிபணிய மாட்டேன் என்கிறார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இன்றைய ஆட்சியாளர்கள்ஏற்றுக்கொண்டுள்ளமனிதஉரிமைகள்தொடர்பான விடயங்களை இது சுட்டிக்காட்டுவதாக இருக்கின்றது. அப்படியிருந்தால் போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான எந்த நீதி விசாரணைகளும் மேற்கொள்ளப்படுவதற்கான வாய்ப்புக்கள் கிட்டப்போவதில்லை.

அதுபோன்றே உள்நாட்டு உடன்படிக்கை என்பதின் கீழ் புதிய அரசமைப்பு தொடர்பாக எட்டப்பட்ட இணக்கப்பாடுகளும்கூட அடங்கிப் போக முடியும். படையினர் வசம் உள்ள காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமற்போனோர்தொடர்பானவிவகாரங்கள்என்பவற்றில் தமிழர் தரப்புடன் இன்றைய ஆட்சித் தலைவர்கள் கண்ட இணக்கப்பாடுகளும்கூட அந்தவகையறாக்களுக்கு அடக்கப்பட்டு புறந்தள்ளப்படும் ஆபத்தும்கூட இருக்கிறது.

எனவே ஒரு புறத்தில் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்திற்கு மேல்சிந்திக்கக்கூட மறுக்கும் கோத்தபாய ராஜபக்ச, மறுபுறத்தில் பன்னாட்டு, உள்நாட்டு உடன்படிக்கைகள் எதனையும்மதிக்கமாட்டேன்என்றுகூறும்சஜித்பிரேமதாச என்றஇருதலைக்கொள்ளிக்குமத்தியில்மாட்டிக்கொண்ட எறும்புதான்தமிழர்கள். இவர்கள்இருவருக்கும்இடையில் யாரையாவது தெரிவு செய்ய வேண்டிய கட்டாயத்தில்தமிழர்கள். தமிழர்கள்முன்பாகஎப்போதுமேஇருக்கும்தெரிவு எது சிறந்தது என்பதாக அல்லாமல் எது அதிக பாதமில்லாததாகஇருக்கும்என்பதாகவேஇருப்பதுபெருந்துன்பியல். இந்த அரசியல் இழிநிலையை மாற்றக்கூடிய ராஜதந்திரம் வாய்ந்ததலைமைதமிழர்களுக்குக்கிட்டாதது அதைவிடத் துன்பியல்.

# மத்திய கிழக்கில் பற்றியெரியும் தீ

சவூதி எண்ணெய் கிணற்றில் நடந்த ஆளில்லா வானூர்தித் தாக்குதலில் எண்ணெய் கிணறு 2 வாரங்களாகத் தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. மிகப்பெரிய எண்ணெய் கிணறு என்பதால் உலகமே பதற்றத்துடன் பார்த்துக் கொண்டிருக்கிறது. யார் இந்தத் தாக்குதலை நடத்தியது என்ற கேள்வியும் கூடவே எழுந்துள்ளது. ஏமனில் செயற்பட்டு வரும் ஹவுத்தி தீவிரவாதிகள், தாங்கள் தான் தாக்குதலை நடத்தியதாகவும் இதுபோல் இன்னும் பல தாக்குதல்கள் காத்திருக்கின்றன என்றும் கூறியுள்ளனர். ஆனால் அமெரிக்க புலனாய்வு அமைப்புகள் ஈரானின் தென்மேற்கு பகுதியில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் ஆளில்லா வானூர்திகள் மட்டுமல்லாது ஏவுகணைகளும் இந்த தாக்குதலில் பயன் படுத்தப்பட்டிருக்கலாம் என்றும் கூறியுள்ளன. ஹவுத்தி தீவிரவாதிகளுக்கு ஆயுதங்களை விநியோகம் செய்து வரும் ஈரான் இந்த குற்றச்சாட்டை மறுத்துள்ளது. இந்த தாக்குதலைக் காரணம் காட்டி, அமெரிக்கா ஈரானை பழிவாங்க நினைப்பதாக ஈரான் கூறியுள்ளது.

### நோக்கம் நிறைவேறியது

எதை எதிர்பார்த்து சவுதி எண்ணெய் வயல் மீது தாக்குதல் நடந்ததோ அது நடந்துவிட்டது. கச்சா எண்ணெய் சந்தை பதற்றம் அடைந்தது. உற்பத்தி பெரிதும் குறைந்துவிடும் என்ற எதிர்பார்ப்பில் கச்சா எண்ணெய் விலை ஏறியது. ஆரம்பத்தில் 15 சதவீதம் உயர்ந்த விலை, படிப்படியாகக் குறையத் தொடங்கியுள்ளது. ஆசிய நாடுகள் தங்கள் தேவையில் 70 சதவீதத்தை சவூதியில் இருந்துதான் இறக்குமதி செய்கின்றன.



சவூதியின் உற்பத்தி எந்த அளவுக்கு உயர்கிறதோ அதைப் பொறுத்துத்தான் பன்னாட்டுச் சந்தையில் கச்சா எண்ணெயின் விலையும் இருக்கும். தாக்குதலுக்கு உள்ளான எண்ணெய் கிணற்றில் தீ அணைக்கப்பட்டு சகஜநிலை திரும்பிக் கொண்டிருப்பதால், சவூதி அரேபியாவும் அதன் கூட்டணி நாடுகளும், கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடுகளும் நிம்மதி அடைந்துள்ளன.

மத்திய கிழக்கு நாடுகளில் சிரியாவுக்கு போட்டியாக, ஏமன் நாடும் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. ஏமன் நாட்டில் 2011ஆம் ஆண்டில் பிரச்சினை தொடங்கியது. கடந்த 2015ஆம் ஆண்டில் சவூதி ஆதரவு அரசு பதவியேற்றதைத் தொடர்ந்து, ஈரான் ஆதரவில் செயல்படும் ஹவுத்தி தீவிரவாதிகளுக்கும் அரசுக்கும் இடையே தொடர்ந்து மோதல் நடைபெற்று வருகிறது.

ஊட்டச்சத்து பற்றாக்குறை, நோய்களால் தினமும் நூற்றுக்கணக்கான ஏமன் மக்கள் இறந்து கொண்டிருக்கின்றனர். 2.40 கோடி மக்களில் ஏறக் குறைய 80 சதவீதம் மக்களுக்கு உணவு, உடை போன்ற அடிப்படை உதவிகள் தேவைப்படுகின்றன. 20 லட்சம் குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ள ஏமனில், எந்த நேரமும் உணவுப் பஞ்சம் ஏற்படலாம் என ஐக்கிய நாடுகள் சபையும் பன்னாட்டு உதவி அமைப்புகளும் எச்சரித்துள்ளன.

### ஈரானுக்கு எதிரான நகர்வுக்கு வித்திடக்கூடிய தாக்குதல் இது

செங்கடலையும் ஏதேன் வளைகுடாவையும் இணைக்கும் ஜலசந்தியில் ஏமன் அமைந்துள்ளது. அது அரசியல் ரீதியாகவும் அமைப்பு ரீதியாகவும் மிகவும் முக்கியமான பகுதியாகும். சவுதியின் அரம்கோ நிறுவனம் தாக்கப்பட்டவுடன், பல ஐரோப்பிய நாடுகள் முதலில் கவலைப்பட்டது பெரும்பாலான எண்ணெய் கப்பல்கள் செல்லும் இந்தப் பாதையை பாதுகாப்பது பற்றிதான்.

ஈரானின் ஷியா பிரிவுக்கும் சவூதி அரேபியாவின் சன்னி பிரிவினருக்கும் இடையில் நடக்கும் மோதலில் ஏமனில் ஆட்சியில் இருக்கும் ஆட்சியாளர்களை சவுதி ஆதரிப்பதை ஹவுத்தி தீவிரவாதிகள் விரும்பவில்லை. இதன் காரணமாக, சவூதிக்கு எதிராக சவுதி எண்ணெய் வயல்கள் மீது ஹவுத்தி தீவிரவாதிகள் தங்கள் தாக்குதல்களை தீவிரப்ப டுத்தலாம் என அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் கவலையில் ஆழ்ந்துள்ளன. இந்த தாக்குதல்களுக்கும் தங்களுக்கும் சம்பந்தம் இல்லை என வழக்கம்போல் ஈரான் மறுக்கலாம். ஆனால் ஈரானின் துணை இல்லாமல் இவ்வளவு மோசமான தாக்குதல் நடக்க வாய்ப்பில்லை என்ற முடிவுக்கு அமெரிக்கா வரும் வாய்ப்புள்ளது.

ஏமனில் ஆட்சியாளர்களுக்கு எதிரான போராளிகளுக்கு ராணுவ உதவி செய்யும் நாடுகள் நெருப்போடு விளையாடுகின்றன என்றுதான் சொல்ல வேண்டும். முதலில் தினமும் நரக வேதனை அனுபவித்துவரும் அப்பாவி ஏமன் மக்களுக்கு எந்த விதத்திலும் தீர்வு கிடைக்கப் போவதில்லை.

இதே நிலை தொடரும்போது, அல் குவைதா, ஐ.எஸ் உள்ளிட்ட தீவிரவாத அமைப்புகளும் அங்கு வேரூன்றி வளரத் தொடங்கும். வேலையில்லாத இளைஞர்களின் கையில் துப்பாக்கியைக் கொடுக்கும். இதை அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் அதன் கூட்டணி நாடுகளும் உணர்ந்து நடவடிக்கை எடுத்தால் அந்தப் பிராந்தியம் பிழைக்கும்.



# கீழடியில் திமிறும் காளை

உலகெங்கும் உள்ள தமிழ்ச் சமூகத்தின் கவனத்தை ஈர்த்திருக்கிறது, சென்ற வாரத்தில் தமிழக அரசின் தொல்லியல் துறை வெளியிட்ட கீழடி தொடர்பான அறிக்கை. 'கீழடியில் கிடைத்த கட்டுமான அமைப்புகள் முதிர்ச்சி பெற்ற சமூகத்தின் அடையாளம். எழுத்தறிவும், சிறந்த கைவினைத் தொழில்நுட்பமும், உள்நாடு மற்றும் வெளிநாடு வணிக வளமும் கொண்ட இந்த நாகரிகத்தின் காலம் கிமு 600' என்று அது கூறுகிறது. அதாவது, கீழடியின் வயது 2600 என்று கூறும் அந்த அறிக்கை, அந்தக் காலகட்டத்திலேயே எழுத்தறிவு பெற்ற சமூகமாக தமிழ்ச் சமூகம் இருந்ததையும் விரிவான ஆதாரங்களோடு நிறுவ முயல்கிறது.

ஆனால், தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை மேற்கண்ட முயற்சியின் விளைவு இது என்பதையும், கீழடியை அணுகும் விதத்தில் இனியேனும் மத்திய அரசு சிறப்புக் கவனம் அளிக்க வேண்டும் என்பதையும் இங்கு நாம் அழுத்திச் சொல்ல வேண்டியிருக்கிறது.

**மூன்று கட்ட ஆய்வுகள்**

நான்காண்டுகளாக கீழடியில் ஆய்வு நடந்திருக்கிறது. மத்திய தொல்லியல் துறை முதல் மூன்றாண்டுகள் ஆய்வுகளை நடத்தியது. அதில் முதல் இரண்டு ஆண்டுகள் ஆய்வுகளை நடத்திய அமர்நாத் இராமகிருஷ்ணன் குழு 102 குழிகள் அகழ்ந்தது. அவற்றில் கிடைத்த சான்றுகளின் அடிப்படையில், 2017 பிப்ரவரியில் இடைக்கால அறிக்கை கொடுத்தார் அமர்நாத் இராமகிருஷ்ணன். 'தமிழகத்தில் முதன்முறையாக நகர நாகரிகத்துக்கான விரிவான கட்டுமானங்கள் கிடைத்திருக்கின்றன' என்று அவர் குறிப்பிட்டார்.

விரைவிலேயே அவர் பணியிடம் மாற்றப்பட்டார். மூன்றாவது ஆண்டில் ஆய்வுகளை நடத்திய ஸ்ரீராமன், வெறும் 10 குழிகளை மட்டுமே அகழ்ந்தார். 'புதிய ஆதாரங்களோ, கட்டுமானத்தின் தொடர்ச்சியோ கிடைக்கவில்லை. புதிய சான்றுகளும் எதுவும் கிடைக்கவில்லை' என்று ஒரு பக்க அறிக்கையை மத்திய அரசுக்கு அவர் அனுப்பினார். அந்த அறிக்கையின் அடிப்படையில் கீழடி ஆய்வை முடித்துவிட்டு வெளியேறியது மத்திய தொல்லியல் துறை. இந்தக் கட்டத்திலிருந்துதான் நான்காம் ஆண்டில் சிவானந்தம் தலைமையில், தன்னுடைய அகழாய்வைத் தொடங்கியது தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை. 34 குழிகளில் நடத்தப்பட்ட இந்த அகழாய்வில் கிடைத்த சான்றுகளை உயரிய ஆய்வு நிறுவனங்கள் பார்வைக்கு அனுப்பி, அவர்கள் அளித்த மதிப்பீட்டின்படியே தன்னுடைய அறிக்கையை அது சமீபத்தில் சமர்ப்பித்தது.

ஒரு ஆண்டில் கிடைத்த சான்றுகளே மறு ஆண்டும் கிடைக்கும் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது. முதல் ஆண்டில் விரிவான ஆதாரங்கள் கிடைத்து, மறு ஆண்டில் எதுவும் கிடைக்காமலும் போகலாம். ஆய்வு என்பது இவை அனைத்தையும் உள்ளடக்கியதுதான். இன்னும் துல்லியமாகச் சொல்லப்போனால், சான்றுகள் என்று எது கருதப்படுகிறதோ அது கிடைத்த இடத்துக்கு எவ்வளவு முக்கியத்துவம் இருக்கிறதோ அதே அளவு சம முக்கியத்துவம் பெற்றதுதான் கிடைக்காத இடமும். சான்றுகள் கிடைத்த இடத்துக்கும் கிடைக்காத இடத்துக்கும் உள்ள வேறுபாடுகளைப் பற்றி தொல்லியல் அறிஞர்கள் விவாதிக்கட்டும். நாம் எழுப்ப வேண்டிய கேள்வி, இந்த அறிக்கைகள் அடிப்படையில் அரசு எடுக்கும் முடிவுகள் தொடர்பில்தான்.

**சர்ச்சைகளும் முடிவுகளும்**

ஏற்கெனவே, கீழடி ஆய்வில் தீவிரமான ஆர்வம் காட்டிவந்த அமர்நாத் இராமகிருஷ்ணன் அங்கிருந்து பணிமாற்றம் செய்யப்பட்டது உள்ளூர் மக்களிடம் அதிருப்தியையும் சந்தேகத்தையும் உண்டாக்கிய நிலையில், புதிதாகப் பொறுப்பேற்ற ஸ்ரீராமன், கீழடி ஆய்வையே முடிக்கும் அளவுக்குக் கொடுத்த அறிக்கையையேனும் மத்திய அரசு கேள்விக்குட்படுத்தியிருக்கலாம். 'ஒரு வருடம் முழுக்கவுமே வெறும் 10 குழிகள் அளவுக்கு மட்டுமே அகழாய்வு நடத்த முடிந்ததா? ஓராண்டில் இந்த ஆய்வுக்காகக் கொடுக்கப்பட்ட பணத்தில் மூன்றில் ஒரு பங்கைக்கூட நீங்கள் ஏன் செலவிடவில்லை? இன்னும் கொஞ்சம் முயன்றுபார்க்கலாமா?' என்றுகூடக் கேட்காமல் ஸ்ரீராமன் கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் அப்படியே கீழடியைக் கைவிட்டது மத்திய அரசு.

இப்போது மாநிலத் தொல்லியல் துறை நடத்தியிருக்கும் ஆய்வு கீழடியின் முக்கியத்துவத்தை ஒட்டுமொத்த நாட்டுக்கும் உணர்த்தியிருக்கும் சூழலிலேனும், கீழடியை இனி கூடுதல் முக்கியத்துவத்துடன் அணுக முற்பட வேண்டும். முழு ஆய்வையும் முடிக்காமல் ஒரு அதிகாரி கொடுக்கும் அறிக்கையின் அடிப்படையில் ஆய்வை முடித்துக்கொள்ளும் போக்கைக் கைவிட வேண்டும். கீழடியில் உள்ள தொல்லியல் மேடு என்பது தனித்த ஒன்றல்ல, 110 ஏக்கர் கொண்ட அம்மேட்டுக்குப் பக்கத்தில் 90 ஏக்கரில் இன்னொரு மேடு உள்ளது. கீழடியைச் சுற்றி கொந்தகை, மணலூர், அகரம் ஆகிய கிராமங்களும் இதே அளவு தொல்லியல் எச்சங்களோடு உள்ளவை என்று கருதப்படுபவை.

இவை அனைத்தும் ஒரே குவிமைய நிலப்பரப்பு என்பது இங்கு நாம் கவனிக்க வேண்டியதாகும். ஒரு பெரும் நீர்நிலையைச் சுற்றிய நிலவியல் அமைப்பாக இது இருந்திருக்கலாம். வைகையின் நீரைக் கால்வாய் வழியாக இரண்டு கிமீ தூரம் பிரித்து வந்து, நீர் தேக்கி வேளாண்மையில் ஈடுபட்டவர்களாக அங்கு வாழ்ந்தவர்கள் இருந்திருக்கலாம். ஆனால், இவையெல்லாம் தொடர் ஆய்வுகளில் நிரூபிக்கப்பட வேண்டியவை.

**இரு கோரிக்கைகள்**

ஆகவே, கீழடியைச் சுற்றியுள்ள இப்பகுதியைப் பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கும் பணி முதன்மையானது. உத்தர பிரதேசத்தில் பாக்பத்தில் உள்ள சனவுலி கிராமத்தில் 28.67 ஏக்கர் நிலத்தைப் பாதுகாக்கப்பட்ட நிலமாக சில நாள்களுக்கு முன் மத்திய தொல்லியல் துறை அறிவித்துள்ளதை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும். அங்கு கடந்த ஆண்டு மத்திய தொல்லியல் துறை நடத்திய அகழாய்வில் பழங்காலச் சவப்பெட்டிகளும் கல்லறைகளும் கிடைத்துள்ளன. அவற்றின் காலத்தைக் கணிக்கக் காலப் பகுப்பாய்வுக்கு மாதிரிகள் அனுப்பப்பட்டுள்ளன.

ஆனால், அவற்றின் முடிவுகள் வருவதற்கு முன்பே அவ்விடத்தைப் பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவித்திருக்கிறது மத்திய தொல்லியல் துறை. ஆனால், கடந்த ஐந்து ஆண்டுகளாக 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொல்லியல் பொருள்களும் கட்டுமானச் சான்றுகளும் கண்டுபிடிக்கப்பட்டு, ஒன்றுக்கும் மேற்பட்ட முறை காலப் பகுப்பாய்வுக்கு மாதிரிகளை அனுப்பி, கால நிர்ணயம் செய்யப்பட்ட கீழடியின் ஆய்வுக்குரிய நிலம் இன்னும் பாதுகாக்கப்பட்ட நிலமாக அறிவிக்கப்படவில்லை.

அடுத்து, கீழடியில் பன்னாட்டுத் தரத்தில் ஒரு அருங்காட்சியகமும் அமைக்கப்பட வேண்டும். கீழடியில் ஆய்வு தொடங்கப்பட்ட அதே காலகட்டத்தில், அகழாய்வு தொடங்கப்பட்டதும் தலைமை அமைச்சர் மோடியின் சொந்த நகரமான குஜராத்தின் வட் நகரில் இதுவரை கிடைத்த பொருள்களைக் கொண்டு, பன்னாட்டுத் தரத்தில் மெய்நிகர் அருங்காட்சியகம் அமைக்க ஒப்பந்தப்புள்ளியை மத்திய தொல்லியல் துறை கோரியுள்ளதை இங்கு சுட்டிக்காட்டலாம். மத்திய அரசிடம் இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்துவது மாநில அரசின் கடமையும்கூட.

கீழடியில் கிடைத்த எலும்பை டெக்கான் கல்லூரிக்குப் பகுப்பாய்வுக்கு அனுப்பியதில், அது திமிலுடைய காளையின் எலும்பு என ஆய்வு முடிவுகள் கூறுவதாகச் சொல்கிறது தமிழக தொல்லியல் துறை வெளியிட்டுள்ள அறிக்கை. வைகை நதியிலிருந்து கீழடியின் வழியே மேலேறும் திமிலுடைய காளை தமிழின் குறியீடு!

இந்து தமிழ் திசை

## ஆசிரியருக்கான கடிதம்

# நீராவியடி விவகாரத்தில் ஆளுநரின் நிலைப்பாடு என்ன?

நீராவியடிப் பிள்ளையார் ஆலய விவகாரம் நாளுக்கு நாள் பதற்றமடைந்து வருகிறது. ஆலயத்தை ஆக்கிரமித்து விகாரை அமைத்த பௌத்த பிக்குவின் உடல் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு மாறாக எரியூட்டப்பட்டதை அடுத்து சட்டத்தரணிகள் தொடர்ந்து பணிப் புறக்கணிப்புக்களில் ஈடுபட்டு வருகின்றனர். வவுனியா, முல்லைத்தீவு என்று பரவலாகப் போராட்டங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

இந்த நிலையில் ஆளுநர் சுரேன் ராகவன் இந்த விடயத்தில் வலுவான கண்டனத்தை வெளியிடாமல் இருப்பது கண்டிக்கத் தக்கது. இந்த விடயத்தில் அவர் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் விதமாக அறிக்கையொன்றை வெளியிட வேண்டும்.

தமிழுக்கு விழாவெடுத்து வள்ளுவனுக்கு முத்திரை வெளியிட்ட ஆளுநர் தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு என்ன சொல்லப்போகின்றார் என்பதை வடக்கு ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றது.

**ஆர்.லயனல், ஆனைக்கோட்டை**

---

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு, அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

# இறுதி ஊர்வலத்தின்போது பட்டாசு வெடிப்பதற்குத் தடை

சாவகச்சேரி,செப்.28

சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு இறுதிக்கிரியைக்காக சடலத்தைக் கொண்டு செல்லும்போது, நகரப்பகுதியில் பட்டாசு வெடிக்க வைத்தால், மயானத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார்.

சடலத்தை இறுதிக் கிரியைக்கு மயானத்துக்குக் கொண்டு செல்பவர்கள், நகரசபையில் அனுமதி பெறும்போது, நகரப்பகுதியில் பட்டாசு வெடிக்க வைக்கக்கூடாது என்ற நிபந்தனையை ஏற்றே அனுமதி பெறுகின்றனர். எனினும் அந்த நிபந்தனையை மீறி நகரப் பகுதியில் பட்டாசுவெடிக்க வைக்கின்றனர். இது தொடர்பில் சபையின் உறுப்பினர்கள் முறை யிட்டுள்ளதால், இறுதி ஊர்வலம் செல்லும் வேளையில் சந்தியில் பட்டாசு வெடிக்க வைத்தால் மயானத்துக்குள் சடலத்தை இறுதிக் கிரியைக்கு கொண்டு செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.

அத்துடன் நகரப்பகுதியில் பட்டாசு வெடிக்க வைப்பது தடை செய்யப்பட்டுள்ள நிலையில் தடையை மீறுபவர்களை நீதிமன்றில் நிறுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார். (சு-9)



சிறுவர் பாதுகாப்புத் திட்டங்களில் முன்மாதிரி

# தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்குப் பாராட்டு

தென்மராட்சி, செப்.28

தென்மராட்சி பிரதேசத்தில் நாவற்குழி மேற்கு கிராம அலுவலர் பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிறுவர் பாதுகாப்பு மற்றும்.சமூகப் பணித் திட்டங்களை யுனிசெப் நிறுவன உயர் அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டதுடன், பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்பாடுகளுக்கும் பாராட்டுத் தெரிவித்தனர்.

ஏனைய பிரதேச செயலகங்களிலும் இதனை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் அதிகாரிகள் கேட்டுக் கொண்டனர்.

குறிப்பிட்ட கிராம அலுவலர் பிரிவில் சிறுவர், பெண்கள் தொடர்பாக இனங்காணப்பட்ட பிரச்சினைகளை உரிய அதிகாரிகள் மூலம் தீர்த்து வைப்பதற்கெனப் பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு திணைக்களத்திலும் உள்ள அதிகாரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கென 40 பேர் கொண்ட குழுவினர் நியமிக்கப்பட்டு, திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றனர். அங்கு சிறுவர் மற்றும் பெண்களுக்குக் காணப்பட்ட பிரச்சினைகள் இனங்காணப்பட்டு, அவற்றுக்கான தீர்வுகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

மாவட்ட, மாகாண, தேசிய நிலைகளில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் யுனிசெப் அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்ததையடுத்து, அவர்கள் குழுவினரைப் பாராட்டியதுடன், இந்த நடைமுறையை ஏனைய பிரதேச செயலகங்களுக்கும் எடுத்துச் செல்லவுள்ளனர் என்றும் தெரிவித்தனர். (சு-9)

# தென்மராட்சி பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு மும்முரம்

தென்மராட்சி,செப்.28

மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்றிட்டங்கள் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக டெங்குத் தொற்றுக்கு அதிகமானோர் பாதிப்புக்கு உள்ளான பிரதேசங்களில் டெங்குப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கொடிகாமம், பருத்தித்துறை சாலையில் உள்ள குடியிருப்புகள் உட்பட 60க்கு மேற்பட்ட இடங்களில் கடந்த புதன்கிழமை டெங்குப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. 7 குடியிருப்புகளில் டெங்கு நுளம்பின் குடம்பிகள் (லாவா) காணப்பட்டுள்ளன. இவர்களில் மூவருக்கு 15 தினங்கள் காலக்கெடு வழங்கி சிவப்பு அறிவித்தல் ஒட்டியுள்ளனர். ஏனையவர்களில் இருவருக்கு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

சுகாதார அமைச்சின் டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவால், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு அதி அபாய டெங்கு பிரதேசமாக அறிவித்துள்ளதையடுத்து, சிறப்பு டெங்குப் பரிசோதனைக்குப் புறம்பாகப் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தமது பிரதேசங்களில் பொலிஸார் மற்றும் பிரதேச டெங்கு குழுவினருடன் இணைந்து குடியிருப்புகள் வழிபாட்டுத் தலங்கள், வணிக நிலையங்கள், கட்டட நிர்மாணத் தலங்கள் உள்ளிட்ட பகுதிகளில் டெங்குப் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கொடிகாமம் பொது சுகாதாரப் பரிசோதகர் தலைமையிலான டெங்கு குழுவினர் பொலிஸாருடன் இணைந்து கொடிகாமம், பருத்தித்துறை சாலையில் உள்ள இடங்களில் டெங்குப் பரிசோதனைகளை மேற்கொண்டனர். (சு-9)



# பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.28

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு நிகழ்வு கடந்த புதன்கிழமை பாடசாலை யோகர் சுவாமிகள் மண்டபத்தில் முற்பகல் 9 மணியளவில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் கணபதிப்பிள்ளை தவகீஸ் வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சோமசுந்தரம் சேனாதிராசா யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட், யாழ்ப்பாண வலய திட்டமிடல் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஞானசம்பந்தபிள்ளை ஞானசுந்தரம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன. (ஐ)

# தென்மராட்சியில் படகுச் சவாரிப் போட்டி

கொடிகாமம்,செப்.28

தென்மராட்சியில் கடல் சுற்றுலாத் துறையில் அதிக பங்களிப்பை வழங்கும் பொருட்டு கேரதீவு பனையடிக் கடற்பரப்பில் படகுச் சவாரிப் போட்டி நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றது.

ஈசன் மரீனா நிறுவனத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரிப் பிரதேச சபை உபதவிசாளர் செ. மயூரனின் நெறிப்படுத்தலில் இந்தப் போட்டி நடைபெற்றது.

நிகழ்வில் விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க. வாமதேவன், உபதவிசாளர் செ.மயூரன், பிரதேச சபை உறுப்பினர்களான சு. கேதீஸ்வரன், திருமதி க.லூர்து மேரி, கைதடி சனசமூக நிலைய ஒன்றியத் தலைவர் இ.கந்தசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கச்சாய் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், கோகிலாக்கண்டி மகா விஷ்ணு கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், பாசையூர் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், நாவாந்துறை கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், தனங்களப்பு கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், கொழும்புத்துறை கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் போட்டியில் பங்கு பற்றினர்.

இதில் முதலாம் இடத்தை நாவாந்துறை கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தின் கீ. கனிசியஸ் அணியும், இரண்டாம் இடத்தை பாசையூர் கடற்றொழிலாளர் சங்கத்தின் 'எ.நீகன்' அணியும், மூன்றாமிடத்தை நாவாந்துறை கடற்றொழில் சங்கத்தின் சா. குணசீலன் அணியும் பெற்றுக்கொண்டன. (ஐ-159)









# சட்ட ஆட்சியை நிலைநாட்டுங்கள்

## வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

வவுனியா, செப். 28

இலங்கையில் சட்ட ஆட்சியை நிலைநாட்டவும், சிறுபான்மையினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் கோரி வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. வடக்கு- கிழக்கு சிவில் அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியா புதிய பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்றுமுற்பகல் 10 மணியளவில் குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் பௌத்த தேரர்கள் நடந்துகொண்ட விதத்துக்குப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர். முல்லைதீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் மகாவலி 'எல்' வலயத்தில் தமிழர்களின் காணிகள் ஆக்கிரமிக்கப்படுவதற்கும் கண்டனம் தெரிவித்தனர்.

திருகோணமலை கன்னியா வெந்நீரூற்றில் பௌத்தர்களின் ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் குறித்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா அலுவலகத்தில் மனுக் கையளிக்கப்பட்டது. (த-110)

# மன்னார் மாவட்டச் செயலகம் முன்பாக கண்டனப் போராட்டம்

மன்னார், செப். 28

நீதிமன்றத்தின் தடையுத்தரவை மீறி செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் பிக்குவின் சடலத்தைத் தகனம் செய்தமை மற்றும் சட்டத்தரணி, பொதுமக்கள் ஆகியோரைத் தாக்கிய சம்பவங்களைக் கண்டித்து மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாகப் போராட்டம் நடத்தப்பட்டது.

மன்னார் மாவட்ட சமூக மேம்பாட்டுக்கான அமைப்பின் ஏற்பாட்டில் முற்பகல் 10 மணியளவில் போராட்டம் நடத்தப்பட்டது. அதில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். மன்னார் நீதிமன்ற சட்டத்தரணிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய தீர்த்தக் கரைப் பகுதியில் பிக்குவின் சடலம் தகனம் செய்யப்பட்டமை, நீதிமன்றக் கட்டளையை உதாசீனம் செய்தமை, சட்டத்தரணி, பொது மக்கள் தாக்கப்பட்டமை ஆகியவற்றை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கண்டித்தனர். குறித்த சம்பவங்களுடன் தொடர்புடையவர்களைக் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்தக்கோரியும் அவர்கள் போராட்டத்தில் வலியுறுத்தினர்.


ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, மன்னார் நீதிவான் மன்ற சட்டத்தரணிகள் உட்பட வடக்கிலுள்ள நீதிமன்றங்களில் கடமையுரியும் சட்டத்தரணிகள் நேற்று நான்காவது நாளாகவும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர். (த-56)



# உயிர் வாழ்வதற்குரிய உரிமையை உறுதி செய்க

## வடக்கில் போராட்டங்கள்



யாழ்ப்பாணம், செப். 28

"உயிர் வாழ்வதற்கான உரிமையை, அடிப்படை உரிமையாக உறுதிப்படுத்தவேண்டும்" என்று வலியுறுத்தி யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் நேற்றுப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.




நீராவியடிப் பிள்ளையார் ஆலய சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் நீதிமன்றத் தீர்ப்பை மதிக்காது பிக்குவின் உடல் கடந்த திங்கட்கிழமை தகனம் செய்யப்பட்டது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வடக்கின் பல்வேறு பகுதிகளில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பல அமைப்புகளும் கண்டனங்களை வெளியிட்டு வருகின்றன. அதனடிப்படையில் இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம் மையப் பேருந்து நிலையத்தின் முன்பாகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"உள்ளூர் நீதி என்பதுகண் துடைப்பு, தமிழ் மக்களுக்கு நீதி துறையிலும் பாதுகாப்பு இல்லை. நல்லாட்சியே உனது நல்லிணக்கம் எங்கே?, சமாதானம் எங்கே?" போன்ற வாசகங்களைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தாங்கியிருந்தனர்.

**கிளிநொச்சி**

"உயிர் வாழ்வதற்கான வாழ்வுரிமை இலங்கை அரசமைப்பில் சட்டமாக்கப்பட வேண்டும்" என்ற கோரிக்கையை முன்வைத்து கிளிநொச்சியில் கையொப்பம் சேகரிக்கப்பட்டது. கிளிநொச்சி சந்தை உள்ளிட்ட பல பகுதிகளிலும் பொதுமக்களிடம் கையொப்பங்கள் சேகரிக்கப்பட்டன. மக்களுக்குத் துண்ட றிக்கைகளும் வழங்கப்பட்டன.

குறித்த விடயத்தை வெளிப்படுத்தும் வகையில் கவனவீர்ப்புப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

**மன்னார்**

நாடளாவிய ரீதியில் அனைத்து இன,மத,மொழி மக்களுக்கும் உயிர் வாழ்வதற்கான அடிப்படை உரிமையை உறுதி செய்யுமாறு கோரி மன்னார் நகரில் போராட்டம் இடம்பெற்றது.

"பன்னாட்டு ரீதியில் நடைமுறையில் உள்ள உயிர் வாழ்வதற்கான உரிமை தொடர்பான சட்டங்களைத் தேசிய ரீதியில் நடைமுறைப்படுத்துவதுடன், அபிவிருத்தி . அனைத்து மக்களுக்கும் பொதுவாக நிகழ வேண்டும் , முறையற்ற கருத்திட்டங்களால் மக்களின் வாழ்வதற்கான உரிமை இல்லாது செய்யப்படுமாயின் அது தொடர்பாக அரசு சிந்திக்க வேண்டும்'' போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கையெழுத்தும் சேகரிக்கப்பட்டது.



முல்லைத்தீவு, நீராவியடி விவகாரத்தில் நீதிமன்றத் தீர்ப்பை அவமதித்துச் செயற்பட்டமைக்கும் எதிர்ப்பைத் தெரிவித்ததுடன், இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். (க-7,ரி1,35,56)

# நீராவியடிச் சம்பவங்களைக் கண்டித்துப் போராட்டம்

## ஏ-9 வீதியில் நடத்தப்பட்டது




கிளிநொச்சி, செப். 28

முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் கோவிலடியில் இடம்பெற்ற சம்பவங்களைக் கண்டித்து கிளிநொச்சியில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

கிளிநொச்சி ஏ-9 வீதியில் அமைந்துள்ள பழைய மாவட்ட செயலகம் முன்பாக முற்பகல் 10.30 மணியளவில் இது இடம்பெற்றது. முல்லைச் சம்பவங்களைக் கண்டிக்கும் வகையில் சுலோகங்கள் ஏந்தியிருந்த மக்கள் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். பெண்கள் வாழ்வுரிமை இயக்கம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட சிவில் அமைப்புக்கள் இணைந்து வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் குறித்த போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர். (த-35)

# முல்லைச் சம்பவத்தை கண்டித்துத் தீர்மானம்

*பிரதேச சபையில் நிறைவேற்றம்*

கொடிகாமம், செப். 28

முல்லைத்தீவு, நீராவியடிப் பிள்ளையார் கோவில் சூழலில் நடந்த அடாத்தான நடவடிக்கைகளுக்கு சாவகச்சேரிப் பிரதேச சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அவற்றைத்தடுக்கநடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

சாவகச்சேரிப் பிரதேச சபை அமர்வு நேற்றுமுன்தினம் முற்பகல்10 மணிக்குத் தவிசாளா தலைமையில் நடைபெற்றது.

தவிசாளர்தனதுதலைமையுரையில், முல்லைத்தீவில் நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் அண்மையில் இந்து மக்களின் மனதைப் புண்படுத்தும் வகையில் செயற்பாடுகள் அமைந்துள்ளன. ஒவ்வொரு சமயத்துக்கும் ஒவ்வொரு சமய சம்பிரதாயங்கள் இருக்கின்றன.

நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்திலே தீர்த்தக் கேணியருகேபிக்குவின்சடலத்தைத்தகனம்செய்தமை தமிழ் மக்களாலும் இந்துக்களாலும் ஏற்றுக் கொள்ள முடியாதது. எல்லா மதங்களும் அன்பு ஆதரவுள்ள நிலையில் பிக்குவின் உடலை புனித ஆலயத்தின் தீர்த்தக்கரையில்தகனம்செய்யப்பட்டதைஎதிர்காலத்தில் சைவ சமயத்துக்கும் தமிழருக்குமான 'அச்சுறுத்தலாகவே பார்க்கவேண்டியுள்ளது.

சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியவர்கள் கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தது மட்டுமல்ல நீதிமன்ற உத்தரவுக்கமைய நிகழ்வை நெறிப்படுத்திக் கொண்டிருக்கின்ற சட்டத்தரணி மீது தாக்கியமை சட்டத்துக்கு விடுத்த சவாலாகவேயுள்ளது.

இவற்றைக் கண்டித்து இது தொடர்பான கண்டனத் தீர்மானம்நிறைவேற்றவேண்டும்என்றுதெரிவித்தார்.

முல்லைத்தீவில்அடாத்தாகபிக்குஉள்ளிட்டதரப்பினர் நடந்துகொண்ட சம்பவங்களைக் கண்டித்தும் சட்டத்தரணிதாக்கப்பட்டதைக் கண்டித்தும் உறுப்பினர் வை.ஜெகதாஸ் தீர்மானம் முன்வைத்தார்.

நீதிமன்ற உத்தரவைமீறி பிக்குவின் உடலைத் தகனம் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துவதற்கு அங்கு திரண்டிருந்த தமிழ் மக்களுடன் இணைந்து முயற்சித்தபோது சட்டத்தரணி சுகாஸ் உட்பட நால்வர் பிக்குகளால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர் என்பது உட்பட விடயங்களைக் கண்டனத் தீர்மானமாக வாசித்தார்.

இறுதியில் இத்தகைய செயற்பாடுகளைத் தடுக்க நடவடிக்கைஎடுக்கவேண்டும்என்றுசபையில்தீர்மானம் எடுக்கப்பட்டது. (த-159)

# அட்டூழியங்களுக்கு நடவடிக்கை எடு!

## ஆளுநர் அலுவலகம் முன் போராட்டம்

யாழ்ப்பாணம், செப். 28

முல்லைத்தீவு செம்மலை நீராவியடிப் பிள்ளையார் கோவில் தீர்த்தக்கேணிக்கு அருகில் பௌத்த பிக்குவின் சடலம் தகனம் செய்யப்பட்டமையைக் கண்டித்தும் உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு வலியுறுத்தியும் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.





வடக்கு- கிழக்கு சிவில் அமைப்புக்களும் பொது மக்களும் இணைந்து நேற்றுகாலை 10 மணியளவில் இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் நடத்தினர். இதன்போது "அரசே இன அடக்குமுறையை நிறுத்து. அரசே இனங்களுக்கிடையில் பாரபட்சம் காட்டாதே. நீதி ஆழ்கிறதா? அநீதி ஆழ்கிறதா?" என்பன போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளைத் தாங்கியவாறு கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது நீதிமன்றத் தீர்ப்பை மீறியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வலியுறுத்தினர். போராட்டத்தின் தொடர்ச்சியாக யாழ்ப்பாணம், நல்லூர் ஆலயச் சுற்றாடலிலுள்ள ஐ.நா அலுவலகத்தில் மனுக் கையளிக்கப்பட்டது. (த-ரி1,105)

# அட்டூழியங்களுக்கு எதிராக அம்பாறையிலும் போராட்டம்

மட்டக்களப்பு, செப். 28

முல்லைத்தீவு, செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய விவகாரத்தில் இடம்பெற்ற வேண்டத்தகாத சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் பௌத்த பிக்குகளுக்கு எதிராகவும் அம்பாறை, காரைதீவு பகுதியில் நேற்றுக் கண்டனப் பேரணி இடம்பெற்றது.



வடக்கு - கிழக்கு சிவில் அமைப்புக்களும் பொதுமக்களும் இணைந்து பேரணியில் ஈடுபட்டனர்.

பேரணியில் கலந்துகொண்டிருந்த மக்கள் "சட்ட ஆட்சியை உறுதிப்படுத்து. அனைத்துவிதமான பாரபட்சங்களையும்ஒழிக்குக. சிறுபான்மையினர் மீதான முறைகேடுகளை நிறுத்துக" போன்ற கோரிக்கைகளை முன்னிறுத்தி கோசங்களை எழுப்பினர்.

" நீராவியடியில் செத்தது நீதி. நீதிமன்றத் தீர்ப்புக்குக் கட்டுப்படுங்கள், சட்ட ஆட்சியை நிலைநிறுத்துங்கள்" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர்.

காரைதீவு சுவாமி விபுலாநந்தர் சதுக்கத்திலிருந்து பேரணி காரைதீவு பிரதேச செயலகம் வரை சென்று மீண்டும் சுவாமி விபுலாநந்தர் சதுக்கத்தை வந்தடைந்தது. அம்பாறை மாவட்ட மனித உரிமைகள் இணைப்பாளர் ஏ.எல். இஸ்ஸதீனிடம் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கோரிய மனுக் கையளிக்கப்பட்டது. பேரணியில் வடக்கு - கிழக்கு சிவில் அமைப்பினர், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். (த)

# தியாகதீபம் திலீபனுக்கு நினைவேந்தல்நிகழ்வுகள்



வவுனியா,செப்.28

தியாக தீபம் திலீபனின் 32ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வவுனியாவில் நேற்றுமுன்தினம் மாலை 6.35 மணியளவில் இடம்பெற்றது.

அநீதிக்கும், அடக்குமுறைக்கும் எதிரான அமையத்தின் ஏற்பாட்டில் வவுனியா நகரசபை பொங்கு தமிழ் நினைவு தூபி முன்றில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

திலீபனின் உருவப்படம் வைக்கப்பட்டு மலர்தூபி, தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தினர். நிகழ்வில் சமூக செயற்பாட்டா ளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-ரி4)



மன்னார்,செப்.28

தியாக தீபம் திலீபனின் 3ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தமிழரசு கட்சியின் மன்னார் கிளையின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் கட்சி அலுவலகத்தில் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றது.

மன்னார் நகரசபை உப தவிசாளர் ஜான்சன் தலைமையில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வின் போது தியாக தீபம் திலீபனின் படத்துக்குப் பொதுச்சுடர் மற்றும் மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

நிகழ்வில் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.டெனீஸ்வரன், தமிழரசுகட்சியின் இளைஞர் அணி உபதலைவர் சட்டத்தரணி எஸ்.டினேஸன், சட்டத்தரணி றொமோள்சன், நகரசபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-60)

# தீலிபனின் நினைவுநாளில் பல்வேறு உதவிகள்



மருதங்கேணி,செப்.28

தியாக தீபன் தீலீபனின் 32ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வறிய மற்றும் சிறப்புத் தேவையுடையோருக்கு உதவிகள், வழங்கப்பட்டன.

நெல்லியடி மைக்கல் நேசக்கரமும் மைக்கல் விளையாட்டு கழகமும் இணைந்து இந்த நிகழ்வை நேற்றுமுன்தினம் கழக மைதானத்தில் நடத்தின.

தீலிபனின் திருவுருவப் படத்துக்கு ஈகைச் சடர் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து ஓமந்தை, வவுனியாவைச் சேர்ந்த சிறப்புத் தேவையுடைய ஒருவருக்கு முச்சக்கர தானியங்கி இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக 75 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

அத்துடன் மணியங்குளம், ஸ்கந்தபுரத்தைச் சேர்ந்த ஒருவருக்கு ஈருருளியும், அல்வாய் கிழக்கை சேர்ந்த ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபா மாதாந்தக் கொடுப்பனவும் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ-160)

# லலித், குகனை தேடிக்கொடு யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்பு

*யாழ்ப்பாணம், செப்.28*

*“காணாமல் ஆக்கப்பட்ட லலித், குகன் எங்கே? அவர்களைத் தேடு, கடத்தியவர் கோத்தபாய, கொலைகாரனைக் காப்பாற்றும் நீதிமன்ற நடைமுறையைக் கண்டிப்போம்” என்று யாழ்ப்பாணம் நகரில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.*

முன்னிலை சோசலிச கட்சியின் ஏற்பாட்டில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. முன்னிலை சோசலிச கட்சியின் செயல்பாட்டாளர்களான லலித் , குகன் ஆகியோர் காணாமல் ஆக்கப்பட்டு 8 ஆண்டுகள் கடந்த நிலையில், அவர்கள் எங்கே? எனக்கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தின்போது, “கொடு கொடு தேடிக் கொடு லலித் , குகனைத் தேடிக்கொடு . வருடம் எட்டு நீதி இல்லை. எங்கே நீதி? எங்கே நீதி ?, கடத்தினவர் கோத்தபாய ஒழிந்து திரியும் கோத்தபாய , நீதிமன்றத்திடம் நாங்கள் கேட்கின்றோம் ஏன் காக்கின்றீர் கோத்தபாயவை?. கொலைகாரனைக் காப்பாற்றும் நீதிமன்ற நடையைக் கண்டிப்போம்” எனப் பதாதைகளை தாங்கியவாறு கோசங்களையும் எழுப்பினர்.

லலித், குகன் காணாமல் ஆக்கப்பட்டது தொடர்பான வழக்கு யாழ். நீதிவான் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்த நிலையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.




**பின்னணி**

கடந்த 2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி, பன்னாட்டு மனித உரிமைகள் தினத்தன்று யாழ்ப்பாண நகரில் நடைபெற விருந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டத்தை ஒழுங்கமைப்பதில் ஈடுபட்டிருந்த லலித்குமார், வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் ஆவரங்காலில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டனர். இவ்விடயம் தொடர்பாக அவர்களின் உறவினர்களால் ஆள்கொணர்வு மனு கடந்த 2012ஆம் ஆண்டு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த மனு மீதான விசாரணையின் போது, இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்துக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனையடுத்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் 2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் 19ஆம் திகதி விசாரணைகள் ஆரம்பமாகின.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித்குமார, குகன் முருகானந்தனின் மனைவி, லலித்குமார் வீரராஜின் தந்தையார் ஆகியோர் ஆரம்பத்தில் சாட்சியமளித்திருந்தனர். அதனைத் தொடர்ந்து முன்னாள் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல உள்ளிட்ட சிலர் சாட்சியமளித்திருந்தனர். இதேவேளை குறித்த வழக்கில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவை யாழ்.நீதிவான் நீதிமன்றம் சாட்சியம் அளிப்பதற்காக அழைப்பாணை விடுத்திருந்தது. சாட்சி சில தவணைகள் நீதிமன்றில் முன்னிலையாக வில்லை.

கோத்தபாய சிங்கப்பூர் மருத்துவமனையில் இருதய சத்திரசிகிச்சை பெற்று அங்கு ஓய்வு எடுத்து வருகிறார். அதனால் அவர் இந்த மன்றில் முன்னிலையாகி சாட்சியமளிக்க தவணை ஒன்றை வழங்குமாறு அவரது சட்டத்தரணி மன்றுரைத்தார்.

அதனால் வழக்கு விசாரணையை செப்ரெம்பர் 27ஆம் திகதி வரை ஒத்திவைத்து நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த நிலையில் யாழ். நீதிவான் நீதிமன்றில் கோத்தபாய ராஜபக்ச முன்னிலையாவதைத் தடுத்து, கட்டளையிடுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றில் அவரது சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

மனு மீதான விசாரணையின்போது யாழ்.நீதிவான் நீதிமன்றம் விடுத்த அழைப்பாணைக்கு இடைக்கால தடை விதித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் சில தினங்களுக்கு முன்னர் கட்டளை வழங்கியிருந்தது. (க-105)

## மழலைகள் மகிழ்களம்

அளவெட்டி,செப்.28

யாழ்ப்பாணம் ஆலங்குழாய் கலைவாணி முன்பள்ளியின் மழலைகள் மகிழ்களம் நாளை ஞாயிற்றுக்கிழமை நிலைய மைதானத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு தலைவர் சி.கஜன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் மு.செல்வஸ்தன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் க.கார்த்திகேயன் ,யாழ்ப்பாணம் உயர்தொழில்நுட்பக் கல்லூரி வருகை தரும் விரிவுரையாளர் வே.யோகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-63)

## நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம்,செப்.28

ஈழத்தமிழ்ப் பேரறிஞர் வித்துவான் வேந்தனாரின் நூற்றாண்டு விழா இன்று யாழ்ப்பாணம் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் மாலை 4 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை நடைபெறவுள்ளது. வித்துவான் வேந்தனார்,ஈழத் தமிழ் இலக்கியவுலகில், 1940 1966 ஆண்டுக் காலப் பகுதியில் , முன்னணி இலக்கியவாதியாக விளங்கியவர்.

அந்த வகையில் இன்று உலகெங்கும் அவருக்கான நூற்றாண்டு விழாக்களும் , நூல்கள் வெளியீட்டு நிகழ்வுகளும் நடத்தப்பட்டு வருகின்றன. (ஐ)

## பழைய மாணவர்கள் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,செப்.28

யாழ்ப்பாணம், வயாவிளான் மத்திய கல்லூரி பழைய மாணவர்கள் ஒன்றுகூடல் இன்று சனிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் வே.த.ஜயந்தன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் விருந்தினர்களாக கணக்காளர் இ.ரஞ்சினி, விவசாயத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் ச.சதீஸ்கரன், மூத்த விரிவுரையாளர் வ.பாலமுருகன், முல்லைத்தீவு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி. சி.ராஜமல்லிகை, மருத்துவர் க.கார்த்திகேயன் உட்படப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் பழைய மாணவர்கள் அனைவரும் இணைந்து தமது பசுமை நினைவுகளை மீட்டிப் பார்க்குமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## சாராயப் போத்தல்களுடன் மருத்துவமனைக்கு சென்றவர்கைது

சாவகச்சேரி,செப்.28

மருத்துவமனைக்குள் சாராயப் போத்தல்கள் கொண்டுசென்றகுற்றச்சாட்டில் நோயாளியின் உதவியாளரை பாதுகாப்பு அலுவலகர் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளியுடன் உதவியாக தங்கியிருந்தவர் ஒருவர் வெளியில் சென்றுவந்தபோதுபாதுகாப்பு அலுவலகர் அவரைச் சோதனை செய்தார்.

இதன்போது அவரிடம் இரண்டு கால் போத்தல்கள்சாராயம்இருப்பதாக தெரிவித்து சந்தேக நபரை மருத்துவமனைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தார்.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு எச்சரிக்கைசெய்துவிடுத்துள்ளார் எனத்தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# சிவனடியார்களை வெளியேற்றிய கன்னியா செயலுக்கும் கண்டனம்

கொடிகாமம், செப். 28

திருகோணமலை, கன்னியா சிவன் ஆலயத் தரிசனத்துக்குச் சென்ற சிவனடியார்களை வழிபடாது வெளியேற்றியமையைக் கண்டித்தும் சாவகச்சேரிப் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபை அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

உறுப்பினர் வை.ஜெகதாஸ் தீர்மானத்தை முன்வத்தார்.

நாட்டில்சாந்தி, சமாதானம் இனங்களுக்கிடையே பேதங்கள் நீங்கி ஒற்றுமை வளர இறையருள் வேண்டிபுனிததலங்கள்தோறும் சிவலிங்கம்தாங்கியஊர்திசகிதம் தரிசன, பாதயாத்திரை2016ஆம் ஆண்டிலிருந்துமட்டக்களப்புக்கு இடம்பெறுகின்றது. இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமய தொண்டர் சபையினர் இதைச் செயற்படுத்துகின்றனர்.

கடந்த12ஆம்திகதியாழ்ப்பாணம் நல்லூர் கந்தன் ஆலயத்திலிருந்து வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்புகொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரர் ஆலயம் வரைபாதயாத்திரைவீதியோரமாகவுள்ளஆலயதரிசனங்களுடன் வவுனியாதிருகோணமலையூடாகப்பயணித்தது.

கடந்த 13ஆம் திகதி கன்னியா சிவன் ஆலய தரிசனத்துக்குச் சென்றபோது சிவனடியார்களை ஏன்? எதற்கு? வந்தீர்கள் என்று கேளாது எமது கருத்துக்களைச் செவிசாய்க்காது, திருகோணமலை பொலிஸ் நிலைய தலைமை அதிகாரி உள்ளிட்ட குழுவினர், இராணுவத்தினர் மற்றும் புலனாய்வுத் துறையினர் சகிதம் குழுவினரைக் கன்னியாவை விட்டு வெளியேற்றினர். சிவலிங்கப்பெருமானைத்தாங்கி வந்த வாகனத்தின் திறப்பையும் களவாடியுள்ளனர். அதைக்கேட்டபோதுதமக்குத்தெரியாதுஎன்று கைவிரித்துள்ளனர்.

சிவனடியார்களை அச்சுறுத்தும் வகையில் ஒளிப்படம் எடுத்தனர். கன்னியா வெந்நீரூற்றிலுள்ள வரலாற்றுச்சிறப்புமிக்கபிள்ளையார் மற்றும் சிவன் ஆலய வழிபாட்டுக்குத்தடையேற்படுத்தினர். ஒருசில சிவனடியார்களை சத்தமின்றிதேவாரம்ஒன்றும்படிக்கக் கூடாது என்று அச்சுறுத்தியுள்ளனர். இவ்வாறான செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று தீர்மானத்தில் தெரிவித்தார்.

இதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்றும் கோரினார். அது சபையால் ஏற்றுத் தீர்மானமாக அறிவிக்கப்பட்டது. (த-159)

# பிக்குகளையும் காடையர்களையும் சட்டத்தின் முன்பாக நிறுத்துங்கள்

## சைவபரிபாலன சபை அரசிடம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப். 28

முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தின் புனிதத்தைக் கெடுத்த சகல பிக்குகளையும் காடையர்களையும் சட்டத்தின் முன் நிறுத்தி அவர்களுக்குத் தக்க தண்டனை பெற்றுக்கொடுப்பதோடு இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை இலங்கை அரசும் பாதுகாப்புத் தரப்பினரும் எடுக்க வேண்டும். இவ்வாறு சைவபரிபாலன சபை கேட்டுக்கொண்டுள்ளது.

இது பற்றி சபை அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலய தீர்த்தக் கேணிக்கருகில் நீதிமன்ற உத்தரவையும் மீறி பிக்குவின் சடலம் தகனம் செய்யப்பட்டதை சைவபரிபாலன சபை வன்மையாகக் கண்டிக்கிறது. ஏற்கனவே சிறையிலிருந்து பொது மன்னிப்பின் கீழ் நாட்டின் தலைவரால் விடுவிக்கப்பட்ட ஞானசாரதேரரும் அவருடன் இணைந்த மிலேச்சத்தனமான பிக்குகளும் பேருந்துகளில் அழைத்துவரப்பட்ட காடையர்களும் சட்டத்தை நிலைநாட்ட வேண்டிய பொலிஸாரின் முழுமையான ஆசியுடன் பிக்குவின் சடலத்தை புனிதமான தீர்த்த கேணியருகில் தகனம் செய்துள்ளனர்.

இது சைவ மக்களின் நெஞ்சங்களைப் பெரிதும் புண்படுத்தியிருக்கிறது. பௌத்த மதம் அன்பு, கருணை, இரக்கம், அகிம்சை சகிப்புத்தன்மை போன்ற நற்பண்புகள் பற்றிப் போதிக்கின்றதே தவிர பிற சமயங்களைகொச்சைப்படுத்தவோ அல்லது காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகளால் அழிக்கவோ கூறவில்லை. மகாவம்சத்தில் வன்முறைகளுக்கும் அடாவடித்தனங்களுக்கும் இடமேயில்லை. மகாவம்சத்தில் கூறப்பட்ட நற்பண்புகளைப் பௌத்த பாமர மக்களிடம் கொண்டு சேர்த்து அவர்களையும் நல்ல மனிதர்களாக்கி வையகத்தில் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவதே பௌத்த துறவிகளின் முக்கிய பணி. பௌத்த துறவிகள் காவியுடைதரித்து வன்முறைகளில் ஈடுபடுவது பௌத்த சமயத்துக்கு அவர்கள் செய்யும் துரோகம். இவர்கள் உண்மையான பௌத்தர்களா? வயிறு வளர்க்கவும், சுகபோக வாழ்வு வாழவும்தான் காவியுடை தரித்தார்களா? என்று எண்ணத்தோன்றுகிறது. சட்டத்தையும் ஒழுக்கத்தையும் நிலைநாட்ட வேண்டிய பொலிஸாரே வாய் மூடி மௌனிகளாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்களென்றால் இலங்கையின் நீதித்துறையும் செத்துவிட்டதா? அண்மைக்காலமாக சைவ சமயத்துக்கு ஏனைய பிற சமயங்களால் திட்டமிட்டு இடையூறுகள் விளைவிக்கப்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மதத்துவேசங்கள் மத நிந்தனைகள், மதமாற்றங்கள் போன்ற மனித குலத்துக்கே பொருத்தப்பாடற்ற செயற்பாடுகளை எந்தவொரு சமயமும் ஏற்கவில்லை. - என்றுள்ளது. (த)

# எமது இந்துக் கோவில் உனக்கு சவக்காலையா?

## காணாமலாக்கப்பட்டோரின் சங்கம் கேட்கிறது

வவுனியா, செப். 28

பிக்குவின் உடலைத் தகனம்செய்வதற்கு இந்துக்கோவில் என்ன சவக்காலையா, என்று வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

வவுனியாவில் நேற்று முன்தினம் நடந்த ஊடக சந்திப்பில் சங்கத்தின் பிரதிநிதிகள் மேலும் தெரிவித்ததாவது:

"அரச மரம் இருக்கின்ற இடமெல்லாம் புத்தர் சிலை அமைத்துவிட்டு தமது இடம் என்று சொல்கிறார்கள். இதேபோன்று நாமும் தென்பகுதிக்குச் சென்று இந்துக் கோவிலை அமைத்து விட்டு எமது பூர்விக இடமென்றால் அதனை அரசோ பௌத்தர்களோ ஏற்றுக்கொள்ளவார்களா? இதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். தமிழர்கள் இந்த நாட்டு மக்களில்லையா? பௌத்தர்கள் மாத்திரமா இங்கு வாழலாம்?.

நீதி அனைவருக்கும் சமம். ஆனால் இங்கு சட்டத்தரணிக்குக்கூட தாக்குதல் நடத்தும் அவல நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. எனவே நீராவியடிச் சம்பவத்தில் சட்டத்தையும், நீதித்துறையையும் அவமதித்த தேரர்களுக்குத் தண்டனைவழங்கப்படவேண்டும். தமிழர்களான நாம் ஒன்றுபட்டு எமக்கான உரிமையை வென்றெடுக்கவேண்டும்.

### வாக்களிக்கும் மனநிலையில்லை

நாட்டில் அரசதலைவர் தேர்தல் இடம்பெறவிருக்கின்றது. புதிதாக அரசதலைவராக எவர் வந்தாலும் காணாமலாக்கப்பட்டவர்கள் இல்லை என்றே பதில் கூறுவார்கள். அதுவே யதார்த்தம். எனவே நாம் யாரையும் ஆதரிக்கும் நிலைப்பாட்டில் இல்லை. எனினும் எமது பிள்ளைகளின் நிலையை அறியும் வரை நாம் தொடர்ந்து போராடிக்கொண்டேயிருப்போம். எதிர்வரும் முதலாம் திகதி பன்னாட்டு சிறுவர்தினம் அன்றைய நாள் வடக்கு கிழக்கின் 8 மாவட்டங்களிலும் கவனவீர்ப்புப் போராட்டங்கள் நடத்தத் தீர்மானித்துள்ளோம் என்று தெரிவித்தனர். (த-110)

# முல்லைச்சம்பவங்களுக்கு சண்முக சேனா கண்டனம்

யாழப்பாணம், செப். 28

முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலயச் சுற்று வட்டாரத்தில் நடைபெற்ற விரும்பத்தகாத செயற்பாடுகளை சிறி சண்முக சேனா அமைப்பு மிக வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது பற்றி மல்லாகத்திலுள்ள அந்த அமைப்பு அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

போரால் பாதிக்கப்பட்டிருக்கும் எமது மக்களுக்கு அனைத்து வழிகளிலும் ஒத்தாசையுடன் செயற்பட வேண்டிய தரப்புக்கள், வேண்டுமென்றே இன உணர்வுகளைத் தூண்டிச் சட்டங்களையும் நீதிமன்ற உத்தரவுகளையும் புறந்தள்ளி அடாவடியில் ஈடுபட்டமை அவருவருப்பான செயல். மனித நாகரிக வரலாற்றில் வெட்கித் தலைகுனிய வேண்டிய கறை படிந்த நாளாக அமைந்துள்ளது.

அண்மைய நாள்களாக இந்து மக்களின் வாழ்வுரிமையும் அவர்களின் பண்பாட்டு உரிமைகளும் திட்டமிடப்பட்ட வகையில் பறிக்கப்படுகின்றன. இந்துக்களின் மனங்களை வேண்டுமென்றே புண்படுத்துவதும் தொடர் கதையாக இருப்பது கண்டனத்துக்குரியது.

சட்டமும் நீதியும் அனைத்து இலங்கையர்களுக்கும் பொதுவானவை என்பதை நிரூபிப்பதற்கு, அரசு இது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் மீண்டும் நிகழாமல் இருப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இதை எமது அமைப்பு மிக அழுத்தமாகத் தெரிவித்துக்கொள்கின்றது. - என்றுள்ளது. (த)



# பொதுநலவாய பிரதிநிதிகளுக்கு நீராவியடி விடயம் எடுத்துரைப்பு

## செல்வம் எம்.பி. தெரிவித்துள்ளார்

மன்னார், செப். 28

நீராவியடிப் பிள்ளையார் முன்றலில் நடந்தேறிய நீதிக்குப் புறம்பான செயல், சட்டம் ஒழுங்கை காப்பாற்ற வேண்டியவர்கள் அதை மீறி இருக்கின்றமை தொடர்பில் பொது நலவாய கூட்டத்தொடரில் கலந்துகொண்டுள்ள அனைத்துப் பிரதிநிதிகளின் கவனத்துக்கும் கொண்டுசென்றுள்ளேன் என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொது நலவாய நாடுகளின் கூட்டத்தொடர் இந்தமுறை உகண்டா நாட்டிலே நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத் தொடரில் அவர்களோடு தனிப்பட்ட ரீதியில் இலங்கையில் நடந்து கொண்டிருக்கின்ற இனப்பிரச்சினை சம்பந்தமான விடயங்களை தமிழ் மக்களுக்கு எதிராக நடந்த, நடைபெறுக் கொண்டிருக்கும், நீதித்துறையின் மீதான தவறான அடாவடி நடவடிக்கைகள் பற்றியும் நேரடியாக அவர்களுக்கு நிலைமையை எடுத்து விளக்கக்கூடிய அரிய சந்தர்ப்பமாக நான் இதை பயன்படுத்தியுள்ளேன்.

எமது மக்களுடைய பிரச்சினைகள், இன்னும் முடிவுக்கு வராத பிரச்சினைகள் மற்றும் தற்போது நீராவியடிப் பிள்ளையார் முன்றலில் நடந்தேறிய நீதிக்குப் புறம்பான செயல், சட்டம் ஒழுங்கை காப்பாற்ற வேண்டியவர்கள் அதை மீறி இருக்கின்றமை என்பதை மிகத்தெளிவாக ஒவ்வொரு தலைவர்களிடமும் பிரதிநிதிகளிடம் தனிப்பட்ட ரீதியில் எடுத்துக் கூறியுள்ளேன் என்று தெரிவித்தார். (த-56)

# பிக்குகளே தீர்ப்பை மீறுகையில் மக்கள் அவற்றை ஏற்பார்களா?

யாழ்ப்பாணம், செப். 28

பௌத்தமதப் போதனைகள் நாட்டில் கேள்விக் குறியாகியுள்ளன.

நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற சம்பவம் பௌத்த மதத்தைப் பின்பற்றும் புத்த மதத் துறவிகள் எவ்வாறு இப்படியெல்லாம் நடந்துகொகின்றார்கள் என்றகேள்வி எழுகின்றது. நீதிமன்ற நடவடிக்கைகளை மதத் துறவிகளே மீறும் போது மக்கள் எவ்வாறு நீதிமன்றின் தீர்ப்பை ஏற்றுக் கொள்வார்கள்?.

இவ்வாறுதமிழர்விடுதலைக்கூட்டணியின் செயலர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி கேள்வியெழுப்பியுள்ளார்.

இது பற்றி அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அன்பு, அகிம்சை, கருணை என்ற புத்த மதத்தின் கோட்பாடு தகர்த்து எறியப்பட்டுள்ளது.

பௌத்த மத போதனைகளை மக்களுக்கு எடுத்துக் கூறி, நாட்டையும் மக்களையும் வழிநடத்தவேண்டிய புத்ததுறவிகள் இவ்வாறு நடந்துகொள்வது, புத்தமதத்துக்கே சவாலான விடயம். புத்தபகவான் சித்தார்த்தராக இருந்தபோது எதையெல்லாம் வெறுத்து புத்தராக மாறினாரோ, அதையெல்லாம் கையில் எடுத்துக்கொண்டு, பௌத்த தர்மத்தை மக்களுக்குஎடுத்துக் கூற வேண்டியவர்கள் அநாகரிகமாக புத்தரின் போதனைக்கு எதிராகதிரண்டுள்ளார்கள். இது நாட்டிற்கும், நாட்டுமக்களுக்கும் நல்லதல்ல. தன் மதத்தின் மீது அளவற்ற பற்றுள்ளவர்கள் மாற்று மதத்தினரின் மனதை காயப்படுத்தமாட்டார்கள். அவ்வாறு காயப்படுத்துபவர்கள் நிச்சயமாக தாங்கள் மதம் சார்ந்த கோட்பாடுகளுக்கு அமைய நடக்கமாட்டார்கள் என்றுள்ளது. (த)

# சட்டத்தை மதிக்காத ஒருவர்கூட நீதியின்முன் நிறுத்தப்படவில்லை

*அவர்கள் புனிதத்தையும் கெடுத்துள்ளனர் என்று மன்னார் மாவட்ட இந்து குருமார் பேரவை கண்டனம்*

மன்னார், செப். 28

சட்டத்தை மதிக்காதவர்கள் இன்னும் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. சட்டத்துக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் எங்களுடைய புனிதத்தின் தன்மையைக் கெடுத்துள்ளனர் என்று மன்னார் மாவட்ட இந்து குருமார் பேரவையின் தலைவர் சிவசிறி மஹா தர்மகுமார குருக்கள் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்றுமுன்தினம் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

செம்மலைச் சம்பவம் இந்து மக்கள் மத்தியிலே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அண்மையில் செம்மலையில் இடம்பெற்ற சம்பவம் எமது சமூகத்தை மிகக் கேவலமான நிலைக்கு இட்டுச் சென்றிருப்பதாகவே கருதுகின்றேன். நீதிமன்ற கட்டளையை மீறி அடாவடித்தனமாக சட்டத்தரணிகள் தாக்கப்பட்டுள்ளனர். சட்டத்தை மதிக்காதவர்கள் இன்னும் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை.

சட்டத்துக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் எங்களுடைய புனித தன்மையைக் கெடுத்துள்ளனர். சைவ சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு என சில மத அனுட்டனங்கள், மத வழிபாடுகள் உள்ளன.

அவற்றைத் திட்டமிட்டுச் சீரழிப்பது போல புனித தீர்த்தக்கரை அருகே பிக்குவின் சடலம் தகனம் செய்யப்பட்டுள்ளது. இவற்றுக்கு மன்னார் மாவட்ட இந்துக்குருமார் பேரவை சார்பாகவும், மன்னார் மாவட்ட இந்து மகா சபை சார்பாகவும், இந்து ஆலயங்களின் ஒன்றியம் சார்பாகவும் கண்டனம் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தமிழர்கள் இங்கு வாழத்தகுதியற்றவர்களா? எங்களை நாடு கடத்துங்கள். ஊடகசந்திப்பில் இந்து ஆலயத்தின் தலைவர் மருத்துவர் மூ.கதிர்காமநாதன், மன்னார் மாவட்ட இந்து மகா சபைத் தலைவர் இ. இராமகிருஸ்ணண்· ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (த-56)

## சட்டங்களைக் கடைப்பிடிக்காவிடில் நாடு ராணுவ ஆட்சிக்குள் சிக்கும்

*நீராவியடிச் சம்பவங்களைக் கண்டித்து*
*மன்னார் மாவட்ட இந்து மகா சபைத் தலைவர் இடித்துரைப்பு*

தலைமன்னார், செப். 28

இலங்கையில் சட்டதிட்டங்களை மீறிய செயற்பாடுகள் தொடருமானால், ஜனநாயகம் மறைக்கப்பட்டு இராணுவ ஆட்சியாக மாறக்கூடிய நிலைமை உருவாகலாம் என்று மன்னார் மாவட்ட இந்து மகா சபைத் தலைவரும், திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபைச் செயலருமான சி.இராமகிருஷ்ணன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட இந்து மத பேரவை நேற்றுமுன்தினம் செய்தியாளர் சந்திப்பு நடத்தியது. அதில், முல்லைத்தீவு செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் நடத்தப்பட்ட சட்டவிரோத செயற்பாடு தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை அனைவரும் ஒன்றுபட்டு வாழ வேண்டிய நாடு. நாடாளுமன்றில் அனைவரும் இணைந்தே சட்டங்களை உருவாக்குகின்றனர். அந்தச் சட்டங்களை நீதித் துறையினர் நடைமுறைப்படுத்துகின்றனர். இப்படியிருக்க நீராவியடிப் பிள்ளையார் ஆலயப் பகுதியில் நடத்தப்பட்ட செயற்பாடு மிக அடாவடித்தனமானது. இந்தச் செயற்பாடு தொடருமானால் ஜனநாயகம் மறைக்கப்பட்டு இராணுவ ஆட்சியாக மாறக்கூடிய நிலைமையும் உருவாகலாம். நாட்டில் பல்லின மதங்கள் இருந்தாலும் அனைவரும் நல்லினக்கத்துடன் ஒற்றுமையாகவே வாழவிரும்புகின்றனர். ஆனால் நீராவியடிப் பிள்ளையார் கோவில் பகுதியில் நடத்தப்பட்ட செயல் மிகப் பாரதூரமானது.

இந்து சமயத்தில் பல கட்டுப்பாடுகள் அனுஷ்டானங்கள் செய்யப்பட வேண்டிய கிரியைகள் வேறுவிதமானவை. இந்து சமய ஆலயங்களுக்குள் இந்து மத குருக்களாக இருந்தாலென்ன வேறு யாராக இருந்தாலும் அவர்களின் உடல்களை கோவிலுக்குள் எடுத்துச் செல்வதில்லை.

இவ்வாறிருக்க நீராவியடிப் பிள்ளையார் ஆலயப் பகுதியில் நடத்தப்பட்ட செயல் பழமை வாய்ந்த தீர்த்தக் குளத்தில் வைத்து பௌத்த பிக்குவை தகனம் செய்தது இந்துக்களை கவலைப்படுத்தும் செயலாகவே இருக்கின்றது. இது நாட்டில் நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் செயலாகவும் இந்துக்களைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கையாகவுமே அமைகின்றது.

ஒரு சமய நிகழ்வு இடம்பெற வேண்டுமானால் அந்த இடத்தில் கணிசமான அந்த மத மக்கள் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாது பழமைவாய்ந்த இந்து ஆலயம் இருக்க அந்த இடத்தை பலாத்காரமாக கைப்பற்றுவது ஏற்றுக்கொள்ள முடியாதது.

பிக்குகள் அரச காணியைப் பெற்று விகாரைகளை அமைத்திருக்கலாம். இறந்த பிக்குவை அந்த இடத்தில் தகனம் செய்திருக்கலாம். இதற்கு எந்தத் தடையும் இருந்திருக்காது. மாறாக சட்டத்தை மீறி செயல்பட்டது ஒரு அநியாயமான செயல்பாடு.

ஆகவே மதங்களுக்கிடையே, இனங்களுக்கிடையே நல்லுறவு ஏற்பட சட்டத்திட்டங்கள் நீதித்துறை நன்கு செயற்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

(த-60)

## மருதங்கேணிக்கு புதிய செயலர் நியமிப்பு

மருதங்கேணி,செப். 28

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலராக குமாரசாமி பிரபாகரமூர்த்தி நியமிக்கப்பட்டு கடந்த புதன்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். மருதங்கேணிப் பிரதேச செயலராக கடமை யாற்றிய க.கனகேஸ்வரன் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக செயலராக நியமிக்கப்பட்டதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.(ஐ-9)



## ஈருருளிகள் கையளிப்பு



வவுனியா,செப்.28

வசதியற்ற குடும்பங்களைச் சேர்ந்த ஆறு மாணவர்களுக்கு ஈருருளிகள் வழங்கிவைக்கப்பட்டன.

வவுனியாவில் அஞ்சலா உதவும் கரங்கள் அமைப்பின் ஏற்பாட்டில் புலம் பெயர் உறவுகளால் இந்த உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

கற்றல் நடவடிக்கையை ஊக்குவிக்கும் முகமாக மரக்காரம்பளை, பனிக்கர்நீராவியடி, பனிக்கர் மகிழங்குளம், பாலமோட்டை, மாதர்பனிக்கர் மகிழங்கும் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ)

## வீதியின் குறுக்கே வீழ்ந்தது பெரியமரம்

போக்குவரத்து பாதிப்பு

மன்னார்,செப்.28

சீரற்ற கால நிலை காரணமாக பெரிய மரம் ஒன்று வீதியின் நடுவே முறிந்து வீழ்ந்ததில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மன்னார் மதவாச்சி முதன்மை வீதியில் 56 மைல் கல் பகுதியில் உள்ள மரமே கடந்த புதன்கிழமை காலை இவ்வாறு முறிந்து வீழ்ந்தது. இதனால் பாதை ஊடாக போக்குவரத்தை மேற்கொண்ட வாகனங்கள், மணல்கள் ஏற்றி சென்ற டிப்பர்கள் உட்பட அனைத்தும் சுமார் இரண்டு மணித்தியாளங்களுக்கு மேலாக வீதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இரண்டு மணி நேரத்தின் பின்னர் முறிந்த மரம் அகற்றப்பட்டு போக்குவரத்து இயல்புநிலைக்குதிரும்பியதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-56,213)





## மன்னார் மாவட்ட மக்களின் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு

36 வருடங்கள் சேவையில் பிரஜைகள் குழு நடவடிக்கை

மன்னார்,செப்.28

மன்னார் மாவட்டத்தில் 36 வருடங்களாக இயங்கி வரும் மன்னார் மாவட்டப் பிரஜைகள் குழு, பொது மக்களின் பல பிரச்சினைகளைத் தீர்ப்பதில், பல சவால்களை எதிர் நோக்கி தீர்வைக் கண்டுள்ளது என்று அதன் தலைவர் அருட்பணி.அ.ஞானப்பிரகாசம் அடிகளார் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தின் பிரஜைகள் குழுவின் பொதுக் கூட்டம், மன்னார் கலையருவி மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. அதில் அவர் தெரிவித்ததாவது:

இலங்கயிலேயே மன்னார் மாவட்டத்தில் மட்டும் தான் பிரஜைகள் குழு தொடர்ந்து செயலாற்றி வருகிறது. அந்த வகையில் மன்னார் மாவட்டத்தில் பொது மக்களுக்குப் பல பிரச்சினைகள் தலைதூக்கி வருகின்ற போதும், அவற்றில் சிலவற்றைச் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு தீர்வு பெற்றுக் கொடுத்துள்ளோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், அடிக்கடி மின்சார தடை, கால்நடைக்கு மேய்ச்சல் நிலம் இல்லாது கால் நடை வளர்ப்போர் அவதி இது போன்ற சிக்கலான பிரச்சினைகளுக்கு எமது ஆளுநர் சபை கடும் பிரயத்தனம் மேற்கொண்டு வருகின்றது.

எந்தவித அரசியலும் கலக்காத, சகல மதத் தலைவர்களையும், மக்களையும் கொண்ட ஒரு அமைப்பாக எமது குழு இருப்பதால் எமது நாட்டில் மட்டுமல்ல, உலக அரங்கிலும் எமக்கென ஒரு இடம் கிடைத்துள்ளது. - என்றார். (க-6)



## புதையல் தோண்டுவதற்கு முயன்றனரென எண்மர் கைது

வவுனியா, செப். 28

வவுனியா இராசேந்திரகுளம் மயானத்தில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் உட்பட 8 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மயானப்பகுதியில் புதையல் தோண்டுகின்றனர் என்று கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அங்கு சென்று அவர்களைக் கைது செய்தோம் என்று நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்து முச்சக்கரவண்டி, இரண்டு மண்வெட்டிகள், பிக்கான், மண் அள்ளும் கருவி, பூசைப் பொருள்கள் போன்றன கைப்பற்றப்பட்டுள்ளன. கண்டியைச் சேர்ந்த 6 பேரும் வவுனியா விநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த 2 பேருமே கைது செய்யப்பட்டுள்ளனர். விசாரணையின் பின்னர் அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றுபொலிஸார்மேலும் தெரிவித்தனர். (த-ரி4)

## நவராத்திரி விரத சிறப்பு வழிபாடு

நவராத்திரி விரதத்தை முன்னிட்டு வட்டுக்கோட்டை, தெக்கணப்பாய் கண்ணகியம்மன் ஆலயத்தில்நாளைசிறப்பு வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. பிற்பகல் 3 மணிக்கு கும்ப பூசையுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் சிறப்பு வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விஜயதசமி அன்று முற்பகல் 11 மணிக்கு அபிசேகம் இடம்பெற்று பிற்பகல் 2.30 மணியளவில் கண்ணகி அம்மனின் வீதியுலாவைத்தொடர்ந்து சங்கரத்தை இலுப்பையடி வைரவர் ஆலயத்தில் மாலை 4 மணிக்கு வன்னிவாழைவெட்டு இடம்பெறும். தொடர்ந்து நவராத்திரி கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன என ஆலயப் பரிபாலன சபையும் தொண்டர் சபையும் அறிவித்துள்ளன. (ஐ)

# கோரிக்கை விடுத்து அலுத்து வீதியைச் சீரமைத்த மக்கள்!

சாவகச்சேரி, செப். 28

பொதுமக்கள் அதிகமாகப் பயன்படுத்தும் வீதியைச் சீரமைத்து வழங்குமாறு உரிய தரப்பினரிடம் பலதடவைகள் கோரிக்கை முன்வைத்தும் சீரமைக்காததால், பொதுமக்கள் இணைந்து கட்டட இடிபாடுகள் மற்றும் மணல் போன்றவற்றைப் பறித்து தற்காலிகமாகப் போக்குவரத்துச் செய்யக்கூடிய வகையில் வீதியைச் சீரமைத்துள்ளோம் என்று அங்குள்ளவர்கள் தெரிவித்தனர்.

கைதடிப் பாலத்திலிருந்து தச்சன் தோப்புக்கு வயல்களினூடாகச் செல்லும் வீதி போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு சேதமடைந்து காணப்பட்டது.

இந்த வீதியை யாழ்ப்பாணம் மற்றும் சாவகச்சேரிக்குச் செல்வதற்குக் குறுகிய வீதி என்பதால் பாடசாலை மாணவர்கள், அரச பணியாளர்கள், பொதுமக்கள் அதிகளவில் இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

சுமார் 600 மீற்றர் நீளமான பகுதி இவ்வாறு சீரமைக்கப்பட்டுள்ளது.

இதனைச் சீரமைத்து வழங்குமாறு சாவகச்சேரிப் பிரதேச சபை மற்றும் வீதி அபிவிருத்தித் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தென்மராட்சி பிரதேச செயலகம் போன்றனவற்றுக்கு முறையிட்டும் பயன் கிடைத்திருக்கவில்லை என்று அங்குள்ள மக்கள் தெரிவித்தனர். (த-9)



## காந்தன் முன்பள்ளிக்கு நன்கொடையாளர் உதவி

முல்லைத்தீவு,செப்.28

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச கைவேலி கிராமத்தில் அமைந்துள்ள காந்தன் முன்பள்ளியின் அபிவிருத்திக்கு, பிரான்ஸில் வசிக்கும் கல்விப் பொருளாதார அமைப்பின் செயற்பாட்டாளர் எட்மண்ட் பவுலுப் பிள்ளை ஜோசப் குடும்பத்தினர் ஒரு தொகை நிதிப் பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

கிராம மீன்பிடி அமைப்பு, விவசாய அமைப்பு, மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் மாகாணசபை போன்றவற்றின் நிதிப் பங்களிப்புடனும், கிராம இளையவர் சங்கம் மற்றும் விளையாட்டு கழகம் என்பவற்றின் உடல் உழைப்பு பங்களிப்புடனும் முன்பள்ளியின் வெளியக விளையாட்டு திடல் அமைக்கப்பட்டது.

முன்பள்ளி முகாமைத்துவ குழுவின் வழிகாட்டலின் கீழ், சத்துணவு தயாரிக்கும் சமையலறை மீளமைப்பு, பாதுகாப்புச் சுவர் அமைத்தல், வாசல் கதவை அமைத்தல் உள்ளிட்ட அபிவிருத்திகள் கல்வி பொருளாதார அமைப்பின் பங்களிப்பின் ஊடாக நிறைவேற்றி செய்யப்பட்டுள்ளன. (க-222)

## காட்டு யானை உயிரிழப்பு

முல்லைத்தீவு,செப்.28



வவுனியா நெடுங்கேணி மருதோடை பகுதியில் காட்டு யானை ஒன்று அண்மையில் உயிரிழந்தது.

கடந்த ஒரு வாரமாக மருதோடை கிராமத்துக்குள் திரிந்த யானையைப் பொது மக்கள் அவதானித்த போது யானையின் காலில் கயிறு இறுகப்பட்ட நிலையில் நோய்வாய்ப்பட்டு காணப்பட்டது.

இதனையடுத்து பொது மக்கள் வவுனியா மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்களத்துக்கு தெரியப்படுத்தினர்.

இந் நிலையில் குறித்த இடத்துக்கு வருகை தந்து அலுவலர்கள் யானைக்கு மயக்கவெடி வைத்து விழச்செய்து சிகிச்சை மேற்கொண்டனர்.

சிகிச்சை பயனின்றி யானை உயிரிழந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-70)

## வாய்க்கால் கழிவை அகற்றக் கோரிக்கை

முல்லைத்தீவு,செப்.28



முல்லைத்தீவு நீதிமன்றத்துக்கு முன்பாக வுள்ள வாய்க்காலில் கழிவு பொருள்கள் தேங்கி காணப்படுவதால் துர்நாற்றம் வீசுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். நீண்ட நாளாக அக்கழிவு பொருள்கள் அகற்றப்படாத நிலையில் தற்போது பெய்து வரும் மழையால் பிளாஸ்ரிக் பொருள்கள் தேங்கி காணப்படுகிறது. இதனால் மழைத் தண்ணீர் வெளியேறாது வெங்கு பரவும் அபாயமும் காணப்படுகிறது. இது தொடர்பில் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொண்டு இக்கால்வாயை சுத்தப்படுத்தித் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## நினைவு பகிர்வு கூட்டம்

யாழ்ப்பாணம்,செப்.28

அண்மையில் காலமான இடதுசாரி தொழிற்சங்க வாதியும், முன்னாள் அதிபருமான சா.தியாகலிங்கத்தின் நினைவுப் பகிர்வுக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டப முன் பகுதியில் மாலை 4 மணிக்கு சட்டத்தரணி ரெங்கன் தேவராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ)



## 46 பாடசாலைகளின் 2010 மாணவருக்கு பற்சுகாதார செயற்றிட்டம்

முல்லைத்தீவு,செப்.28

முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட 46 பாடசாலைகளைச் சேர்ந்த, தரம் ஒன்று மாணவர்களுக்குப் பற்சுகாதார செயற்றிட்டம் கடந்த புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது. கல்வி வளர்ச்சிக் அறக்கட்டளையின் ஏற்பாட்டில், ஆஸ்திரேலிய மருத்துவ நிதியத்தின் அனுசரணையில் வருடந்தோறும் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்றிட்டத்தின், மூன்றாவது செயற்றிட்டம் முல்லைத்தீவு வலயக் கல்வித் திணைக்களத்தின் தொழிற் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

இதன் போது 2010 மாணவர்களுக்கு பற்தூரிகைகள் மற்றும் பற்பசைகளும் வழங்கப்பட்டன.

கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் அலுவலர்கள், வலயக் கல்வித் திணைக்களத்தின் அதிகாரிகள், ஆசிரியர்கள் செயற்றிட்டத்தில் பங்கேற்றனர். (க-222)

## கஞ்சா கொண்டுசென்றனரென பேருந்தில் பயணித்தோர் கைது

வவுனியா, செப். 28

வவுனியாவில் 3.5 கிலோக்கிராம் கேரளக் கஞ்சாவை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை குறித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து மாத்தறை நோக்கிப் பயணித்த பேருந்தை வவுனியா புதிய பேருந்து நிலையம் முன்பாக போதை ஒழிப்புப் பிரிவுப் பொலிஸார் சோதனை செய்தனர். பயணப் பொதி ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு கிலோ 702 கிராம் கேரளா கஞ்சாவை மீட்டனர்.

பிறிதொருவரின் பயணப் பொதியிலிருந்து ஒரு கிலோ 802 கிராம் கேரளா கஞ்சாவும் கண்டறியப்பட்டது.

இதனையடுத்து கஞ்சாப் பொதிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

மாத்தறைப் பகுதியைச் சேர்ந்த 23 மற்றும் 27 வயதுடையவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் விசாரணையின்பின்னர்நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த)

# வன்முறைக் கலாசாரத்தால் சுதந்திர தேர்தலுக்கு சவால்

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, செப்.28

தேர்தல் வன்முறையில் ஈடுபடுவோருக்கு எதிராக உரிய சட்டத்திட்டங்கள் நடைமுறைப்ப டுத்துவதில் உள்ள சிக்கலும், தாமதமும் தான் சுதந்திரத் தேர்தலுக்கு சவாலாக உள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.



கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலுடன் வன்முறையும் ஒன்றித்து போயுள்ளமை, இலங்கையில் இன்று, நேற்று ஏற்பட்ட கலாசாரமல்ல.

1947, 1952, 1956, 1960, 1965, 1970, 1974 ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்ற தேர்தல்களில் இருந்து தொடர்ந்து வரும் ஒரு தேர்தல் கலாசாரமாகவே இந்த வன்முறை காணப்படுகிறது.

இந்த வன்முறையானது, வாக்குச் சாவடியில் துப்பாக்கிச் சூடு நடத்தும் அளவுக்கும், வாக்குப்பெட்டிகளைக் கொழுத்தும் அளவுக்கும் சென்றுள்ளமை கவலைக்குரிய விடயமாகும்.

உண்மையில், இவ்வாறான கலாசாரங்களைத் தடுக்க இலங்கையில் இன்னும் முறையான சட்டத்திட்டங்கள் இல்லை என்றே கூறவேண்டும்.

இலங்கையிலுள்ள சட்டங்கள், இவ்வாறான குற்றச்செயல்களை தேர்தல் குற்றமாகவும், சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய வழக்குத்தாக்கல் செய்யக்கூடிய குற்றமாகவும்தான் கருதுகின்றன. அதனால் இவ்வாறான குற்றச்செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக நீதிமன்றின் ஊடாக, தண்டனை கிடைப்பதும் குறைவாகவே இருக்கிறது. வாக்குப்பெட்டியை உடைத்த நபருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையே கிடைக்கிறது.

இதனால், வாக்குப்பெட்டியை உடைத்தவர் தண்டனையிலிருந்து தப்பித்து, மீண்டும் தேர்தலில் களமிறங்கி வெற்றிப் பெற்று, அதிகாரத்துக்கும் வரக்கூடிய நிலைமையே இங்கு காணப்படுகிறது

கள்ள வாக்குகளை இடுவோருக்கு எதிராகக்கூட கடுமையான சட்டத்திட்டங்கள் உள்ளன. ஆனால், தேர்தல் வன்முறையில் ஈடுபடுவோருக்கு எதிராக முறையான சட்டத்திட்டங்கள் நாட்டில் இல்லாதிருப்பது மிகவும் பாரதூரமானதொரு விடயமாகும்.

இவை தான் சுதந்திரமான தேர்தலுக்கு தடையாக இருக்கிறது. நீதியை நிலைநாட்ட எடுக்கும் காலமும், சட்டத்திட்டங்களை உரியவகையில் நடைமுறைப்படுத்துவதில் உள்ள நடைமுறை சிக்கலும்தான் இவற்றுக்கு எல்லாம் காரணமாகும்-என்றார். (எ)

# முதலாம் திகதியே அநுர குமார கட்டுப்பணத்தை செலுத்துவார்

கொழும்பு, செப்.28



எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் அநுரகுமார திசாநாயக்க எதிர்வரும் முதலாம் திகதியே தேர்தல்கள் செயலகத்தில் கட்டுப்பணத்தைச் செலுத்துவார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையில் தேசிய மக்கள் சக்தி கூட்டணியின்கீழ் அந்தக் கட்சியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தேர்தலில்களமிறங்குகின்றார்.

கடந்த 19ஆம் திகதி கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை கட்டுப்பணத்தை செலுத்துவதற்கான கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. தற்போதுவரை 8 வேட்பாளர்கள் மட்டுமே கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளனர். (எ)

# சஜித் வேட்பாளராக்கப்பட்டமை சிறுபான்மையினர்வெற்றியாம்

கொழும்பு, செப்.28



ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலானஐக்கிய தேசிய முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராகசஜித்பிரேமதாசஅறிவிக்கப்பட்டுள்ளமை சிறுபான்மையினக் கட்சிகளின் அழுத்தத்துக்கு கிடைத்த ஆரம்ப வெற்றியாகும். இந்த அரசதலைவர் தேர்தலில் சிறு பான்மையினக் கட்சிகளே பிரதான பாத்திரத்தை வகிக்கும் என்பது இதன்மூலம் உறுதியாகியுள்ளது.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணி யின் பிரதித் தலைவரும், இந்து சமய விவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் மாலை ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றியபோதேஅவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஐக்கியதேசியக்கட்சியின் அரசதலைவர் வேட்பாளராகசஜித்பிரேமதாசவை களமிறக்குவதற்கு அக்கட்சியின் உயர்பீடம் ஆரம்பத்தில் வெளிப்படையாக விருப்பத்தை வெளிப்படுத்தவில்லை. நாட்டு மக்கள் சஜித்தையே கோருகின்றனர் என்றும், அவரையே வெற்றி வேட்பாளராக போட்டியிடவைக்கவேண்டும் என்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி உட்பட சிறுபான்மையினக் கட்சிகள்வலியுறுத்தின.

இந்த நிலைப்பாட்டிலிருந்து எம்மைப் பின்வாங்க வைப்பதற்கு பல வழிகளிலும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால்கொண்டகொள்கையில் நாம் உறுதியாக நின்றோம். இறுதியில் இன்று வெற்றியும் பெற்றுள்ளோம். சஜித் நிச்சயம் வருவார் என எமது மக்களுக்கு உறுதி வழங்கினோம். அவர்தற்போது வந்துவிட்டார். இதன்பின்னணியில் எமது பங்களிப்பும் அளப்பரியது.

அரசின் பங்காளிகளாக அங்கம் வகித்தாலும் அவர்கள் சொல்வதற்கெல்லாம் தலையாட்டும் பாவைகள் அல்ல நாம் என்பதை மீண்டுமொரு முறை உறுதிப்படுத்தியுள்ளோம். எமக்கென தனித்துவமான கொள்கைகள், எண்ணங்கள் இருக்கின்றன. அவற்றை எந்தக் கொம்பனுக்காகவும்நாம்விட்டுக்கொடுக்கமாட்டோம்.

அரச தலைவர் தேர்தலின்போதுகூட சிறுபான்மையினக் கட்சிகளே பிரதான பாத்திரத்தை வகிக்கப் போகின்றன. எமது மக்களுக்காக எவற்றையெல்லாம் செய்யமுடியுமோ அவற்றையெல்லாம் வெற்றிகரமாக செய்து முடிக்க முயற்சிப்போம். என்றார். (எ)



# யானைகள் உயிரிழப்பு தொடர்பில் விசாரணை

கொழும்பு, செப்.28

ஹபரன, ஹிரிவதுன்ன பகுதியில் நான்கு யானைகள் சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்துள்ளமை தொடர்பாக வனவிலங்கு அதிகாரிகள் விசாரணை களை ஆரம்பித்துள்ளனர்.

ஹிரிவதுன்ன பகுதியிலுள்ள குளம் ஒன்றுக்கு அருகிலேயே இந்த யானைகள் உயிரிழந்த நிலையில் நேற்றுக்காலை கண்டுபிடிக்கப்பட்டன.

உயிரிழந்த நான்கு யானைகளுள் கர்ப்பிணி யானையொன்றும் உள்ளது என்று வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

# இடைத் தரிப்பிட துறைமுக வசதி உருவாக வேண்டியது அவசியம்

## அமைச்சர் சாகல தெரிவிப்பு

கொழும்பு, செப்.28

இந்தியா, சிங்கப்பூர் போன்ற நாடுகள் கொள்கலன் போக்குவரத்துக்கான இடைத் தரிப்பிட துறைமுக வசதிகளை வழங்குவதில் போட்டிப் போட்டுக்கொண்டு செயற்படுகின்றன. அவ்வாறான வசதிகளை வழங்குவதில் இலங்கையின் துறைமுகம் முன்னேற்றம் அடைய வேண்டுமானால் அவற்றின் செயற்திறனை அதிகரிக்க வேண்டும்.

இவ்வாறு துறை முகங்கள், கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

பன்னாட்டு சமுத்திரவியல்தினத்தை முன்னிட்டு நேற்று மஹாபொல துறைமுகங்கள் மற்றும் சமுத்திரவியல் கற்கை நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பாடசாலை மாணவர்களுக்கான தெளிவூட்டல் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இந்த வாரம் சமுத்திரவியல் வாரமாக அறிவிக்கப்படுகிறது. இந்த உலக துறைமுக தினத்தை முன்னிட்டு கப்பல் துறையில் பெண்களின் பங்களிப்பை அதிகரித்துக் கொள்ள வேண்டியது சிறப்புத் தேவையாக மாறியுள்ளது.



பெண்களை கப்பல் துறைக்குள் இணைத்துக்கொள்வதில் சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறோம். இவ்வாறு துறைமுகம் மற்றும் கப்பல் துறையில் பெண்களின் பங்களிப்பை ஊக்குவிப்பது குறித்து இன்று பல நாடுகளும் முக்கிய அவதானம் செலுத்தியுள்ளன.

துறைமுக மற்றும் கப்பல் துறைசார் தொழில்களில் பெண்களால் பங்குப்பற்ற முடியாது என்ற நிலைப்பாடே எமது சமுகத்தில் இருந்து வருகிறது. இலங்கை மாத்திரமல்ல பன்னாடுகளும் இன்று அந்த நிலைபாட்டிலேயே இருந்து வருகின்றன. இருப்பினும் எமது நாட்டில் இன்று துறைமுகம் மற்றும் கப்பல் துறை சார்ந்த தொழில்களில் அதிகளவான பெண்கள் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். என்றார். (எ)

# அடுத்துவரவுள்ள வாரங்களில் முக்கிய மாற்றங்கள் நடக்கும்!

## திஸ்ஸ அத்தநாயக்க கூறுகின்றார்



கொழும்பு, செப்.28

சஜித்பிரேமதாச அரசதலைவர்வேட்பாளரானால் இணைந்து செயற்பட முடியும் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் என்னிடம் கூறினர். அடுத்த மூன்று, நான்கு வாரங்களில் முக்கியமான மாற்றங்கள் பல நடக்கும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக்கட்சியின்முன்னாள்பொதுச் செயலாளர்திஸ்ஸ அத்தநாயக்க.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலராக இருந்த திஸ்ஸ அத்தநாயக்க 2015ஆம் ஆண்டுநடைபெற்ற அரசதலைவர்தேர்தலுக்குமுன்னர் மகிந்த ராஜபக்ச தரப்பினருடன் இணைந்தார். அந்தத் தேர்தலில் மகிந்த ராஜபக்ச தோல்வியடைந்தார். அதன்பின்னர் திஸ்ஸ அரசியலில் இருந்து ஒதுங்கி இருந்தார். தற்போது மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்று அவருக்கு. அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச அழைப்பு விடுத்திருந்தார். அதை ஏற்றுத் தற்போது திஸ்ஸ ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொண்டுள்ளார்.

அதன்பின்னர் நேற்றுக் கொழும்பில்நடத்தியசெய்தியாளர்சந்திப்பில் மேற்கண்டவாறுதெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவித்துள்ளதாவது:

சஜித் எனக்கு விடுத்த அழைப்புக்கு அமையகட்சியின்குறைபாடுகளை இனங்கண்டு கட்சியைக் கொண்டு செல்வதே எனது கடமை. அரசியல் காரணிகளுக்காக எம்மை விட்டு விலகிச் சென்றவர்களை மீண்டும் இணைப்பதே எனது கடமை. எனது கடமையை நான் சரியாகச் செய்து முடிப்பேன்.

இப்போது எமக்குள்ள பிரதான இலக்குஎன்னவென்றால்சஜித்பிரேமதாசாவை அரச தலைவர் ஆக்குவதே. அவர் இளம் தலைவர். அதனால் அவரால் சிறந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியும். அதை இலக்காகக் கொண்டே நாம் செயற்படவேண்டும். இப்போதுள்ள நேரத்தில் எமக்குள்ள வேலைத்திட்டம் என்னவென்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

ஐக்கியதேசியகட்சியைவிட்டுவெளியேறிய தயாசிறி ஜெயசேகர போன்றவர்களுக்கும் மற்றைய அனைவருக்கும் நான் அழைப்பு விடுக்கிறேன். அவர்களும் எம்முடன் கைகோர்க்க வேண்டும்.

சஜித் பிரேமதாச வேட்பாளரானால் இணைந்துசெயற்படமுடியும்எனக் கூறிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் என்னுடன் பேசினார்கள். அடுத்த மூன்று நான்கு வாரங்களிலும் முக்கியமான மாற்றங்கள் பல இடம்பெறும். இது அரசியல் கட்சி மாறுதல்கள் அல்ல, நாட்டுக்காக கைகோர்க்கும்நடவடிக்கைகள்முன்னெடுக்கப்படும்- என்றார். (எ)

# கோத்தபாயவைசிறையிலடைக்க முயல்வோர்சிறைசெல்லநேரிடும்

## எச்சரிக்கின்றார் மகிந்த

கொழும்பு, செப்.28

கோத்தபாய ராஜபக்சவுக்குச் சிறைச்சாலை உடையை அணிவிக்க விரும்புபவர்கள் எதிர்காலத்தில் அதை அணிய வேண்டிய நிலமை ஏற்படலாம் என்று எச்சரித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின்ஒன்றின் கூட்டத்தில் கருத்துத்தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்சவுக்கு சிறைச்சாலை உடையை அணிவிக்க விரும்புவர்கள் எதிர்காலத்தில் ஜம்பர் அணிய வேண்டிய நிலை ஏற்படலாம். அரசுஎதிரணியைப் பழிவாங்குவதுதொடர்பாகவே கவனம் செலுத்தி வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கியதேசிய கட்சியின் வேட்பாளர் சஜித்பிரேமதாச வெற்றிபெற்றால் கோத்தபாயராஜபக்சஜம்பர் அணிய வேண்டிய நிலையேற்படும் என ஐக்கியதேசியகட்சியின்நாடாளுமன்ற உறுப்பினர் ஹேசா விதானகே தெரிவித்திருந்தார். சஜித் பிரேமதாசவுக்கான ஆதரவை வெளிப்படுத்தும் விதத்தில்மத்துகமவில்நடந்தப் பட்டகூட்டத்தில்உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அரசதலைவர்தேர்தலில் சஜித் பிரேமதாச வெற்றி பெற்ற மறுநாளே சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளர்ஜம்பர்அணியவேண்டியிருக்கும். ஐக்கியதேசிய கட்சியின் அமைச்சர்கள் சிலர்செய்துகொண்ட இரகசிய உடன்படிக்கைகள் காரணமாகவே ராஜபக்சக்களை சிறையில் அடைக்கமுடியவில்லை. சஜித் அரச தலைவரானதும்அந்தயுகம்முடிவுக்கு வரும்என்றுஅவர்கூறியிருந்தார்.

அவரது கருத்துக்குப் பதிலளிக்கும்வகையிலேயே மகிந்தராஜபக்சமேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (எ)

# அரசநிறுவனங்களில்ஊழல்: இறுதி அறிக்கை கையளிப்பு

கொழும்பு, செப்.28

2015 ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதி முதல் 2018ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிவரையான காலப்பகுதிக்குள் அரசநிறுவனங்களில் இடம்பெற்றன என்று கருதப்படும் ஊழல் மோசடிகளை விசாரிப்பதற்காக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் அமைக்கப்பட்ட ஆணைக்குழு தனது இறுதி அறிக்கையை நேற்றுமுன்தினம் பிற்பகல் அரச தலவரிடம் கையளித்தது.

இந்தக்காலப்பகுதியில்அரசநிறுவனங்களில்இடம்பெற்றுள்ளன என்று கருதப்படும் ஊழல், மோசடிகள், நம்பிக்கை மோசடி, அரச உடைமைகளை தவறாக கையாளுதல், மோசடி மற்றும் அதிகார முறைகேடுகள், அரச வளங்கள்மற்றும்வரப்பிரசாதங்களைத்தவறானமுறையில் பயன்படுத்துதல் போன்ற மேற்குறிப்பிட்ட பிழையான நடவடிக்கைகளின் விளைவாக அரச சொத்துக்களுக்கும், வருமானத்துக்கும் பாதிப்புக்களை ஏற்படுத்தியமை தொடர்பாக அரசியல் பதவிகளை வகித்தவர்கள், இதுவரைபதவிவகித்துவருபவர்கள், அரசஊழியர்கள் மற்றும்நியாயாதிக்கசபைகளின்அதிகாரிகளாககடமையாற்றிய மற்றும் சேவையில் இருக்கும் நபர்களுக்கு எதிரானபெரும்குற்றச்சாட்டுக்கள்தொடர்பில்மக்களால் அளிக்கப்பட்ட முறைப்பாடுகள், தகவல்கள் மற்றும் ஏனைய விடயங்களைக் கருத்தில் கொண்டு பக்கச்சார்பற்ற விரிவான விசாரணை ஒன்றை மேற்கொள்வது இந்த ஆணைக்குழுவின் பொறுப்பாகும்.

இந்த அரச தலைவர் விசாரணை ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் உபாலிஅபேரத்னநியமிக்கப்பட்டிருந்தார். ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் சரோஜினி குசலா வீரவர்தன, ஓய்வுபெற்ற கணக்காய்வாளர் நாயகம் பஸ்துன் கோரலேஆராச்சிகேபேமதிலக, ஓய்வுபெற்றஅமைச்சரவைச் செயலாளர் லலித் ஆர்.த சில்வா, ஓய்வுபெற்ற பிரதிபொலிஸ்மா அதிபர் எம்.கே.டி.விஜேய அமரசிங்க ஆகியோரும் இந்தக்குழுவில்அங்கத்துவம்வகித்தனர்.

இந்த ஆணைக்குழு தனது விசாரணைகளை நிறைவு செய்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் இறுதிஅறிக்கையைத்தற்போதுகையளித்துள்ளது. (எ)

# அவன்கார்ட் விவகாரத்தில் நந்தனலியபலனகேகைது

கொழும்பு, செப்.28

அவன்கார்டின்கடல்பாதுகாப்பு பிரிவின் தலைவரும் அவன் கார்ட் மிதக்கும் ஆயுதக் வழக்கில் சந்தேக நபருமான ஓய்வு பெற்ற கடற்படை கொமடோர் விஸ்வஜித் நந்தனலியபலனகே கைது செய்யப்பட்டுள்ளார். அவர் நேற்று பண்டரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ்பேச்சாளர்கூறினார்.

சிங்கப்பூரில்இருந்துநாட்டுக்குத் திரும்பும்போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்என்றும்பொலிஸ் பேச்சாளர்ருவன்குணசேகர மேலும் குறிப்பிட்டார்.

அதேவேளை அவன்ட் கார்ட் நிறுவனத்திற்கு மிதக்கும் ஆயுதக் களஞ்சியசாலையை முன்னெடுத்துச்செல்வதற்குஅனுமதி வழங்கியமை, துப்பாக்கிகட்டளைசட்டத்தின் கீழ் இழைக்கப்பட்ட குற்றம்ஙளைஅறிவித்துஅவன்ட் கார்ட் தலைவர் உட்பட 7 பேரைக்கைதுசெய்யசட்டமா அதிபர் கடந்த மாதம் உத்தரவு பிறப்பித்திருந்தார். (எ)

# 10 வயதுக் குழந்தை விபத்தில் உயிரிழப்பு

வாரியபொல அநுராதபுரம்பிரதான வீதியின் மினுவன்கெட்ட பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் 10 வயதான குழந்தை ஒன்றுஉயிரிழந்துள்ளது. இந்த விபத்துநேற்றும்னதினம் பிற்பகல் 5.20 மணி அளவில் இடம்பெற்றுள்ளது.

உந்துருளிஒன்றுடன்ஸ்கேமர்ரகவாகனம்ஒன்றுமோதியதால் இந்த விபத்துசம்பவித்துள்ளது. விபத்தில்படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளைச் செலுத்திய பெண் வாரியபொல மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். காயமடைந்தபெண்பின்னர்மேலதிகசிகிச்சைகளுக்காக குருநாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

விபத்தில்அனுஸ்கபிதும்வீரசேகர என்ற10 வயது குழந்தையே உயிரிழந்துள்ளது. சடலம் தற்போது வாரியபொல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம்தொடர்பில்ஸ்கேமர்ரகவாகனத்தைசெலுத்திய சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று வாரியபொல பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# குடிசை அற்ற நகரமாக கொழும்பு மாற்றமுறும்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

கொழும்பு, 28

கொழும்பை குடிசைகள் அற்ற நகராக மாற்றுவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

மாத்தளையில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவித்துள்ளதாவது:

தற்போது மாணவர்கள் நாட்டை விட்டுவெளியேறுவதேபிரதானபிரச்சினையாக உள்ளது. குறிப்பிட்ட காலப்பகுதிக்குள்நாட்டின்தொழிற்படையில் 52 ஆயிரம் பேர் நாட்டை விட்டுச் சென்றுள்ளனர்.

நாட்டின் மக்கள் தொகையில் சுமார் 30 இலட்சம்பேர்தற்போதுவெளிநாடுகளில் வாழ்கின்றனர். அதற்கமைவாக தனது அமைச்சின் மூலம் "தங்கியிருப்பதற்குஉகந்தநாடு"என்றதொனிப் பொருளில் வேலைத்திட்டங்கள் இடம்பெறுகின்றன- என்றார் அவர்.

நாட்டில் நகரங்களை உருவாக்கும் போதுநகரங்களுக்குள்உள்ளேஅபிவிருத்திகள் இடம்பெற வேண்டும். வெள்ளக்கட்டுப்பாடு, கழிப்பறைகள், கழிவுநீர் கட்டுப்பாடு மற்றும் போக்குவரத்துமுறைஆகியவற்றைகவனத்தில் கொள்ள வேண்டும்.

பிரிட்டன் காலனித்துவ ஆட்சியின் பின்னர் கொழும்பு நகரை படிப்படியாககட்டியெழுப்பும்திட்டத்தைதற்போதையஅரசஆரம்பித்துள்ளது. ஆதற்கமைய எதிர்வரும் 2023 ஆம் ஆண்டில் கொழும்பை குடிசைகள் அற்ற நகராக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன-என்றார். (எ)

# சு.கட்சி - பொதுஜன பெரமுன விரைவில் இணையக் கூடும்

## சு.க. பரப்புரைச் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, செப்.28

ஐக்கிய தேசிய கட்சியுடன் ஏற்பட்ட முரண்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் கடந்த 2018 ஆம் ஆண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மகிந்த ராஜபக்சவை நியமித்தார். இருவருக்குமிடையில் அன்று காணப்பட்ட அதே புரிந்துணர்வு இன்றும் இருக்கிறது. சுதந்திர கட்சி சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி விரைவில் இணையும்.

இவ்வாறு சுதந்திர கட்சியின் பரப்புரைச் செயலாளர் ரஞ்சித் சியம்பலாபிட்டி தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறி லங்கா சுதந்திர கட்சி வரலாற்றில் அனைத்து சந்தர்ப்பங்களிலும் முற்போக்கான கொள்ளைகைகளுடனேயே செயற்பட்டு வந்திருக்கிறது. எதிர்காலத்திலும் அதே போன்றுதான் செயற்படும். கடந்த 2015ஆம் ஆண்டு நாட்டின் சிறந்ததொரு எதிர்காலத்துக்காக ஐக்கிய தேசியகட்சியுடன் இணைந்துதேசிய அரசு அமைக்கப்பட்டது. ஐ.தே.க அவற்றை மறந்து மாற்றுவழியில்செயற்பட ஆரம்பித்தது. எனவே 2018 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன , மகிந்த ராஜபக்சவை தலைமை அமைச்சராக நியமித்தார். எனினும் நீதிமன்ற தீர்ப்பு உள்ளிட்ட விடயங்களால் அவ்வாறு இணைந்து தொடர்ந்தும் செயற்பட முடியாமல் போனது.

அன்று ஒரு புரிதலுடனேயே அவ்வாறு இடம்பெற்றது. தற்போதும் இந்தத் தலைவர்களுக்கிடையிலும் அந்த புரிதல் இருக்கிறது. சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி மற்றும் சுதந்திர கட்சி என்பன விரைவில் இணையும் என்ற நம்பிக்கை இருக்கிறது- என்றார். (எ)

# அவன்கார்ட் கப்பல் வழக்கில் குற்றப்பத்திரிகை ஒப்படைப்பு

கொழும்பு, செப்.28

அவன்கார்ட் ஆயுதக் கடத்தல் வழக்குடன் தொடர்புடைய அவன்கார்ட் மெரிடைம் சர்விஸ் நிறுவனத்துக்கும், ரக்னா லங்கா நிறுவனங்களுக்கும் மற்றும் பிரதிவாதிகள் 9 பேருக்கும் எதிராக ட்ரயல் எட் பார் சிறப்பு நீதாய நீதிமன்றத்தால் நேற்று குற்றப்பத்திரிக்கை ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

ரத்னா லங்கா நிறுவனத்தின் தலைவராக இருந்த ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பாலித பியாசிறி பெர்னாண்டோ, அதன் தலைமை நிர்வாக அதிகாரியாக பணியாற்றிய மேஜர் ஜெனரல் கருணாரத்ன பண்டா அதிகாரி எகொடவெல, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் சிரேஷ்ட உதவி செயலாளர் சமன் திசாநாயக்க, கப்பலின் கேப்டனாக இருந்த யுக்ரேன் நாட்டவரான டென்னடி கிராப்ரோரெபிலிரோ, ரத்ன லங்கா நிறுவனத்தின் தலைவராக பணியாற்றிய விக்டர் சமரவீர, பாதுகாப்பு அமைச்சின் மூத்த உதவிச் செயலாளர் சுஜாதா தமயந்தி ஜயரத்ன, தொன் அல்பஸ் திலகரத்ன, விசுருஜித் நந்தன லியனகே, நிருபல் த கொஸ்தா, பொற்துரை பாலசுப்ரமணியம் ஹேமச்சந்திர ஆகியவர்களுக்கே இவ்வாறு குற்றப்பத்திரிகைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, காலி துறைமுகத்துக்கு அருகில்கடற்பரப்பில்மிதக்கும் ஆயுத கிடங்கு ஒன்றை பராமரித்து சென்ற சம்பவம் தொடர்பில் எவன்கார்ட் மெரிடைம் சர்விஸ் நிறுவனத்தின் தலைவர் நிஸ்ஸங்க யாபா சேனாதிபதி உள்ளிட்ட 13 பிரதிவாதிகளை நேற்று நீதிமன்றில்முன்னிலையாக வேண்டும் என்று தெரிவித்து கொழும்பு ட்ரயல் எட் பார் விசேட நீதாய நீதிமன்றம் அழைப்பாணை வெளியிட்டிருந்தது.

தம்மிக்க கனேபொல, ஆதித்ய படபெந்திகே மற்றும் மஞ்சுல திலகரத்ன ஆகியோருக்கு இந்த அழைப்பாணை வெளியிடப்பட்டிருந்தது. எவன்கார்ட் கப்பலினுள் உரிமம் இன்றி 813 தானியங்கி துப்பாக்கிகள் மற்றும் 2 இலட்சத்து 935 தோட்டக்களை வைத்திருத்தல் உள்ளிட்ட 7 ஆயிரத்து 573 குற்றச்சாட்டுக்களின் கீழ் சட்டமா அதிபரால் இவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

ரத்னா லங்கா நிறுவனம் மற்றும் எவன் கார்ட் மெரிடைம் சர்விஸ் நிறுவனம் ஆகியவை அந்த வழக்கின் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். இந்த வழக்கு இலங்கை நீதித்துறை வரலாற்றில் அதிகளவான குற்றப் பத்திரிகைகள் சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (எ)

# பசிலின் மனுவை நிராகரித்தது மேன்முறையீட்டு நீதிமன்றம்

கொழும்பு, செப்.28

தனக்கு எதிராக முன்வைக்கப்பட்ட முறைகேடு வழக்கை எதிர்த்து முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்தமேன்முறையீட்டுமனுநேற்று விசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்பட்டபோதே மேன்முறையீட்டு நீதிமன்றம் அவரது மனுவை நிராகரித்தது.

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச கடந்த அரச தலைவர் தேர்தலில், திவிநெகும திணைக்களத்துக்குரிய 36.5 மில்லியன்ரூபா அரச நிதியைப் பயன்படுத்தி, தேர்தல் பணிகளுக்காக கல்வனைசுப்படுத்தப்பட்ட இரும்புக் குழாய்களை வழங்கப்பட்டது என்று குற்றம் சாட்டப்பட்டது.

இந்தசம்பவம்தொடர்பாககொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க முன்னிலையில் விசாரணைகள் இடம்பெற்றன. ஆனால்நீதிபதி குலதுங்கதனக்குஎதிராகவிசாரித்த அரச தலைவர் ஆணைக்குழுவின் உறுப்பினராக இருந்ததால் நியாயமான விசாரணையை நடத்த முடியாது என்று குற்றம் சாட்டப்பட்ட தரப்பு வாதிட்டது.

வழக்கைவேறொருநீதிமன்றத்திற்கு மாற்றுவதற்கான கோரிக்கையை நியாயப்படுத்த போதுமான சமர்ப்பிப்புகள் இன்மையால் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச தாக்கல் செய்தமேன்முறையீட்டுமனுநிராகரிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ச மற்றும் திவிநெகும திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம், கித்சிறி ரணவக்கஆகியோருக்குஎதிராக, சட்டமா அதிபரால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (எ)

# எல்பிட்டியத் தேர்தல் சஜித்துக்கான சவால்

## இப்படிக் கூறுகின்றது பெரமுன

அரச தலைவர் தேர்தலை எதிர்க் கொள்வதற்கு முன்னர் ஐக்கிய தேசிய கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச எல்பிடிய பிரதேச சபை தேர்தலை வெற்றிக் கொள்ள வேண்டும். எல்பிடிய பிரேதசபை தேர்தல் சஜித் பிரேமதாசவுக்கு பலப் பரீட்சை.

இவ்வாறு சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் உள்ளுராட்சி மன்ற சபை சம்மேளன சபை தலைவர் உதயன அதுகோரல தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசிய கட்சி பெரும் போராட்டத்தில் மத்தியில் தற்போது தனது வேட்பாளரை அறிவித்துள்ளது. சபாநாயகர் கரு ஜயசூரிய ஆளும் தரப்பின் அரச தலைவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டால் ஒரு தரமான போட்டி காணப்படும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் தற்போது சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி வெற்றிப் பெறுவதற்கான சூழலே காணப்படுகின்றது . எமது வெற்றிக்கு ஐக்கிய தேசிய கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ ஒரு சவால் அல்ல. நல்லாட்சி அரசில் இடம் பெற்ற அனைத்து மோசடிகளில் இருந்தும் அவர் ஒருபோதும் விடுபட முடியாது.

ஐக்கிய தேசிய கட்சியின் முறையற்ற நிர்வாகத்தால் இன்று நாட்டு மக்கள் பெரும் அசௌகரியங்களையே எதிர்க் கொண்டுள்ளார்கள்- என்றார். (எ)

# ரணில் விக்கிரமசிங்க திறமையில்லாதவராம்

## திலங்க சுமதிபால கூறுகிறார்

கொழும்பு, செப்.28

ரணில் விக்ரமசிங்க செயற்திறமையற்ற தலைவர் என நாங்கள் தெரிவித்து வந்த கருத்தை ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு உறுதிப்படுத்தியுள்ளது.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளு மன்ற உறுப்பினர் திலங்க சுமத்திபால தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஊடக மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

ரணில் விக்ரமசிங்க நாட்டின் முதல் குடிமகனான அரச தலைவராக முடியாது என்பது நேற்றுடன் உறுதியாகியுள்ளது. அவர் அரச தலைவரானால் நாட்டின் ஒற்றையாட்சி, இறையாண்மைக்கு பாதிப்பு ஏற்படும் என்ற அச்சம் தற்போது மக்களுக்கு இல்லாமல் போயுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க எப்போதும் மேற்கத்திய நாடுகளின் கொள்கை மற்றும் அவர்களின் விருப்பத்துக்கு ஏற்றவகையில் தீர்மானங்களை நிறைவேற்றக்கூடியவராக இருந்து வந்திருக்கின்றார்.

கடந்த காலங்களில் அவர் மேற்கொண்ட தீர்மானங்கள் நாட்டுக்குப் பாதிப்பாகவே இருந்துள்ளன. அதனால் அவர் நாட்டின் அரச தலைவராக வரமாட்டார் என்பது தற்போது உறுதியாகி இருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது. இதுநாட்டுமக்களுக்கு கிடைத்து முதல் வெற்றியாகும் -என்றார். (எ)

# இடைநிறுத்தியுள்ள நியமனங்களை மீள வழங்க நடவடிக்கை எடுங்கள்

## நியமனம் பெற இருந்தவர்கள் கோரிக்கை

**யாழ்ப்பாணம், செப். 28**

**பயிலுநர்செயற்றிட்ட உதவியாளர்நியமனத்தை அரசதலைவர்தேர்தல் முடிவடையும் வரையில்இடைநிறுத்திவைக்குமாறுதேர்தல்கள்ஆணைக்குழுவின்தவிசாளர்மகிந்த தேசப் பிரிய 25 மாவட்டச் செயலர்களுக்கும் பணித்துள்ளார். இந்த நிலையில், குறித்த பணிப்புரையை மீளப்பெற்று தமக்கு நியமனம் வழங்குமாறு பயிலுநர்களாக தேர்வானவர்கள் யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் ஊடாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

நாடு முழுவதும் 7 ஆயிரம் பேருக்கு வழங்கப்பட்ட நியமனத்தையே இடைநிறுத்துமாறு ஆணைக்குழு பணித்துள்ளது.

நாடு முழுவதும் கிராம அலுவலர்களுக்கு உதவியாளர்களாகப் பணியாற்றும் வகையில் தேசிய ரீதியில் க.பொ.த உயர்தரத்துடன் பயிலுநர்களாக ஒப்பந்தப் பணியாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கென்று கடந்த ஜுன் மாதம் தொடக்கம்கொழும்பில்நேர்முகத் தேர்வுகள்நடைபெற்றிருந்தன." அதனடிப்படையிலேயே கடந்த 16ஆம் திகதி 7 ஆயிரம் பேருக்கு மேற்குறித்த நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

வடக்கு மாகாணத்துக்கு ஆயிரத்து440பேர்நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்களில்அதிகமானோர் யாழ்ப்பாணமாவட்டத்துக்கு(999 பேர்) நியமிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு 105பேரும், முல்லைத்தீவுமாவட்டத்துக்கு144பேரும்நியமிக்கப்பட்டுள்ளனர். மன்னார் மாவட்டத்துக்கு100பேரும்வவுனியாமாவட்டத்துக்கு 92பேரும்நியமிக்கப்பட்டுள்ளனர்.

பயிற்சிக்காலத்தில்மாதாந்தம்15 ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனவும் அந்தக் காலத்தில் ஊழியர் சேமலாபநிதிசெலுத்தப்படும்எனவும் வழங்கப்பட்ட நியமனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வழங்கப்பட்டநியமனத்தின்அடிப்படையில் புதிதாக நியமனம் கிடைத்தவர்கள் ஆவலோடு மாவட்டச் செயலகங்களில் தமக்கான கடமைகளை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

இந்தநிலையில், அவற்றை இடைநிறுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் பணிப்புரைவிடுத்துள்ளார்.

இருப்பினும்குறித்தநியமனத்தின் வகை, இதற்காக நேர்முகப் பரீட்சைஇடம்பெற்றகாலம், பெறப்பட்ட அனுமதிகள்என்பனதேர்தல் ஆணைக்குழுவின்கவனத்துக்கு மீண்டும் கொண்டுசெல்லப்பட்டது. அவற்றினடிப்படையில் குறித்த நியமனத்தை வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அனுமதிவழங்கவேண்டும்என்று யாழ்ப்பாணமாவட்டத்தில்தெரிவானோர் நேற்றுத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கவனத்துக்குக்கொண்டுசென்றனர். (த-105)

---

*அரச தலைவர் தேர்தலில் சு.க. தனி அணியா?*

# இறுதி முடிவுக்காக திங்களன்று கூட்டம்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மையச் செயற்குழு நாளை மறுதினம் திங்கட்கிழமை கூடவுள்ளது என்று அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் வீரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி போட்டியிடுமா அல்லது பிரதான வேட்பாளர்களில்ஒருவருக்குஆதரவளிக்குமா என்பது தொடர்பில் இன்னும் உத்தியோகபூர்வமாக எதுவும் அறிவிக்கப்படவில்லை. இந்த நிலையில், கூட்டணி அமைப்பது குறித்து சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் பேச்சுகளை முன்னெடுத்து வந்தாலும் சின்னத்தால் ஏற்பட்டுள்ள சர்ச்சை காரணமாக கலந்துரையாடல்கள் தேக்கமடைந்துள்ளன.

'மொட்டு' சின்னத்தைக் கைவிடுமாறு சுதந்திரக் கட்சியால் விடுக்கப்படும் கோரிக்கையை ஏற்பதற்கு பொதுமக்கள் முன்னணி மறுத்து வருகின்றது. இருதரப்புக்கும் இடையிலான இறுதிச் சுற்றுப் பேச்சு நாளை மறுதினம் காலை நடைபெறவுள்ளது. அதன்பின்னரே அரச தலைவர் தேர்தல் தொடர்பில் இறுதி முடிவெடுப்பதற்காக சுதந்திரக் கட்சியின் மையச் செயற்குழு கூடவுள்ளது. (ஒ,5,22)

# தமிழரின் பண்பாட்டுப் பெருவிழா கிளிநொச்சி மண்ணில் இன்று

கிளிநொச்சி மண்ணில் மாபெரும் தமிழர் பண்பாட்டுப் பெருவிழா இன்றுநடைபெறவுள்ளது. இதில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் சத்தியனாந்தன் தெரிவித்துள்ளார்.

பண்பாட்டுப் பெருவிழாவின் பேரணி கரைச்சிப் பிரதேசசபை முன்பாக இன்று மதியம் 1.30 ஆரம்பமாகும். கலைநிகழ்வுகள் பசுமைப் பூங்கா வளாகத்தில் இன்று பிற்பகல் 2.30மணிக்கு ஆரம்பமாகும்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது இனத்தின் அடையாளமானகலை, கலாசாரம், பண்பாடுகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இன்றைய இளைய சமூகத்திடம் உள்ளது.

நாங்கள் வரலாற்று அடையாளங்களைக்கொண்ட இனம், பல கலை, கலாசார, பண்பாட்டுஅம்சங்களைக் கொண்ட இனம். கடந்த ஆட்சிக்காலங்களில் திட்டமிட்டுச் சிதைக்கப்படும் எமது கலை கலாசாரப் பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாக்க இளையோர்முன்வரவேண்டும். 30 வருடங்கள் விடுதலைப் போராட்டகாலத்தில் கலை, கலாசாரங்களுக்குத் தனியான ஒரு பிரிவு உருவாக்கப்பட்டு கலை, கலாசார துறைகள் எவ்வாறு பாதுகாக்கப்பட்டனவோ அதே போல நாங்கள் கலை, கலாசாரங்களை முழுமையாகப் பாதுகாக்கவேண்டும். என்றுமேலும் தெரிவித்தார். (த-6)

---

## ஆண்டு நிறைவு

மன்னார், செப். 28

மன்னார் மறைமாவட்டத்தின் 475 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு நாளை தோட்டவெளி வேதசாட்சிகளின் இராக்கினி ஆலயத்தில் காலை 7.15 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

நிகழ்வுதொடர்பானசிறப்பு திருப்பலியும், நூல் வெளியீடும்அன்றையதினம்நடைபெறவுள்ளன. (ஜ-60)

# தபால் மூலவாக்களிப்பு அமைதியாக நடந்தது

கொழும்பு, செப். 28

எல்பிட்டியபிரதேசசபைக்கானதபால்மூலவாக்களிப்பு அமைதியான முறையில் இடம்பெற்றதாக காலி மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகர் சோமரத்ன விதானபத்திரன தெரிவித்தார்.

269 வாக்களிப்பு நிலையங்களில் தபால் மூல வாக்களிப்பு நடைபெறுகின்றது.

நேற்றுக்காலை 9 மணி முதல் அரசஊழியர்கள் வாக்களித்து வருவதாக காலி மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் குறிப்பிட்டார்.

எல்பிட்டியபிரதேசசபைதேர்தலில், தபால்மூலம்வாக்களிப்பதற்குஆயிரத்து192பேர்தகுதிபெற்றுள்ளனர். தபால் மூல வாக்களிப்பு நிலையங்களுக்கு தேவையானபாதுகாப்புநடவடிக்கைகள்முன்னெடுக்கப்பட்டுள்ளதாககாலிமாவட்டதேர்தல்தெரிவத்தாட்சிஅலுவலர் சோமரத்ன விதானபத்திரன கூறினார்.

நேற்றுதபால்மூலம்வாக்களிக்கமுடியாதவர்கள்எதிர்வரும் 4 ஆம் திகதி வாக்களிப்பதற்கு மேலதிக சந்தர்ப்பம்வழங்கப்பட்டுள்ளது. எல்பிட்டிய பிரதேசசபைதேர்தல் எதிர்வரும் 11 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ஒ,5)

---

## கருங்குழவிகள் தாக்குதலில் மருத்துவமனையில் இருவர் சேர்ப்பு

சாவகச்சேரி, செப். 28

கும்பலாகப்பறந்துவந்த கருங்குழவிகள் தேங்காய் உரித்துக் கொண்டிருந்த இளைஞனைத் தாக்கியுள்ளன. அவரைக் காப்பாற்றச் சென்ற இளைஞனின் பெரிய தாயாரையும் குழவிகள் தாக்கின.

இந்தச்சம்பவம்கொடிகாமம் எருவன் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்கள்வீட்டுக்குள்ஓடியபோதும் கருங்குழவிகள் வீட்டுக்குள்ளும் புகுந்து தாக்கின.

அவர்களின் அலறல்களைக்கேட்ட அயலவர்கள் நெருப்புப் பற்ற வைத்த ஓலைகளின் உதவியுடன் இளைஞரையும் அவரின் பெரிய தாயாரையும்மீட்டுமருத்துவமனையில் சேர்த்தனர்.

கொடிகாமம்எருவனைச் சேர்ந்த முருகமூர்த்தி பிரசாத் (வயது - 25) இ. சரஸ்வதிப்பிள்ளை (வயது-53)ஆகியோரே மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவருகின்றனர்என்றுதெரிவிக்கப்பட்டது. (த-9)

## பெருந்திருவிழா நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 28

யாழ்ப்பாணம்கோண்டாவில்கிழக்கு சிறிவல்லிபுரநாதர்கோவில்வருடாந்தப் பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன்ஆரம்பமாகிநடைபெறவுள்ளது.

தொடர்ந்து திருவிழா 10 நாள்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம்7ஆம்திகதிமுற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள்8 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும், இரவு7மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறும்.

தினமும்ஆன்மிகஉரை இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

## நான் நாட்டின்...

ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக சஜித் பிரேமதாச நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பன்னாட்டு செய்திச் சேவையொன்றின் கொழும்புச் செய்தியாளருக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சஜித் எனக்குச் சவால் அல்ல. ரணிலால் செய்ய முடியாமல் போனதையா சஜித் செய்யப் போகின்றார்? நாட்டு மக்கள் முட்டாள்கள் அல்ல. அவர்கள் இனியும் ஏமாறத் தயாரில்லை.

இந்தத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி திரைமறைவில் பல சூழ்ச்சிகளைச் செய்யக்கூடும். ஆனால், எதுவும் எடுபடாது. நாட்டு மக்கள் நிதானமாக இருக்கின்றார்கள்.

2015இல் ஆட்சி மாற்றம் இடம்பெற்ற பின்னர் இந்த நாட்டுக்கு எந்த விமோசனமும் கிடைக்கவில்லை. வறுமையின் பிடியில் பாமர மக்கள் சிக்கித் தவிக்கின்றார்கள். அரச ஊழியர்கள்கூட இன்று நடுவீதிக்கு வந்து அரசுக்கு எதிராகப் போராடுகின்றார்கள். சம்பளப் பிரச்சினையால் அவர்கள் தங்கள் பணிகளைப் புறக்கணித்து வருகின்றார்கள். ஆனால், அரசோ மௌனமாக இருக்கின்றது.

நாம் ஆட்சிக்கு வந்தவுடன் இந்த நிலமையை மாற்றியமைப்போம். நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வோம். வறுமையின் பிடியிலிருந்து நாட்டு மக்களை மீட்டெடுப்போம். எனவே, நாட்டு மக்கள் அனைவரும் நவம்பர் 16ஆம் திகதி எமக்கு ஆணை தர வேண்டும் - என்றார். (ஒ.5,22)

## நான்...

கான சான்றிதழை வழங்கியுள்ளார். இவ்வாறு முன்னாள் பாதுகாப்புச் செயலரும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளருமான கோத்தபாய ராஜபக்ச மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

என்னை எல்லோரும் கெட்ட மனிதன் என்று கூறுகின்றனர். ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியுடன் சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டது. சுமார் 30 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டது. ஆனால், ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி என்னுடன் இரண்டரை மணி நேரம் உரையாடினார். அதன் பின்னர் நான் கெட்ட மனிதன் இல்லை என்பதை அவர் கூறினார், என்றார் கோத்தபாய. (ஒ.5)

## வல்லரசுகளுடன்...

வித்தார்.

கொழும்பில் வெளிநாட்டு மற்றும் உள்ளூர் ஊடகவியலாளர்களுடனான கலந்துரையாடலிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுமக்கள் முன்னணி அரசின் கீழ், நாட்டுக்கு நன்மை பயக்காத விடத்து வெளிநாட்டு அரசுகளுடன் ஒப்பந்தங்கள் செய்யப்படமாட்டாது.

அயலுறவுக் கொள்கையைப் பொறுத்த வரை, நாங்கள் அணிசேராமல் இருப்போம். எங்களிடம் ஒரு சிறிய பொருளாதாரம் இருக்கலாம், ஆனால் நாம் சமமாகவும் மரியாதையுடனும் நடத்தப்பட வேண்டியவர்கள். நாங்கள் எல்லா வல்லரசுகளுடனும் மற்றும் எங்கள் எல்லா நண்பர்களுடனும் இணைந்து செயல்படுவோம், மேலும் எந்தவொரு வெளிநாடுகளுடனும் சுயாதீனமாகவும் பரஸ்பர நன்மை பயக்கும் வகையிலும் நாங்கள் கலந்துரையாட தயாராக இருப்போம்.

எந்தவொரு வெளிநாட்டு தேசத்துக்கும் அவர்கள் சரியான காரணத்தை தெரிவிக்காவிட்டால் நாங்கள் எமது கதவுகளை மூடிவிடமாட்டோம். நாங்கள் ஒரு புவிசார் அரசியல் சூழலில் வைக்கப்பட்டுள்ளோம் என்பது அறியப்பட்ட உண்மை. இதனால் பல நாடுகள் எம்மீது ஆர்வமாக உள்ளன. அபிவிருத்தி, நிதி மற்றும் அந்நிய நேரடி முதலீடு ஆகியவற்றில் ஆர்வமுள்ள ஒவ்வொருவரிடமும் நாங்கள் பேசுவோம். உண்மையில், எங்கள் அயலுறவுக் கொள்கை ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கும்- என்றார். (ஒ.5)

## பொலிஸார்...

பவங்கள் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் நீதிமன்றுக்கு ஓர் இடைக்கால அறிக்கையை நேற்றுத் தாக்கல் செய்துள்ளனர்.

நீராவியடிப் பிள்ளையார் ஆலயச் சூழலில் பிக்குவின் தகனக் கிரியை மேற்கொள்ள மேற்கொண்ட முயற்சியை தடைசெய்யுமாறு ஆலய நிர்வாகம் தொடுத்த வழக்கில் முன்னிலையான சட்டத்தரணிகள், வழக்கின் கட்டளையை எதிர் மனுதாரர்களின் சட்டத்தரணிகளின் அழைப்பின் பெயரில் தெரிவிக்கச் சென்றபோது அவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. மேலும், நீதிமன்றக் கட்டளையை மீறி ஆலய தீர்த்தக்கேணி பகுதியில் பிக்குவின் உடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த இரண்டு விடயங்களும் கடந்த திங்கட் கிழமை நடந்திருந்தன. இந்த நிலையில் 4 நாள்கள் கழித்து, நேற்றைய தினம் இடைக்கால அறிக்கை பொலிஸாரால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த இடைக்கால அறிக்கை நாளை மறுதினம் திங்கட் கிழமை எடுக்கப்படலாம் என்று தெரியவருகின்றது. (ஒ.5,105)

## தொடர்...

மித்துள்ளார்.

அவரச அமைச்சரவைக் கூட்டத்தை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று மாலை 6 மணிக்கு கூட்டினார். அதன் போதே அரச துறை ஊழியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க அமைச்சரவை உப குழுவை நியமித்தார்.

அமைச்சர்கள் மங்கள சமரவீர, வஜிர அபயவர்த்தன, ராஜித சேனரத்ன, ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் அசோக் அபயசிங்க ஆகிய ஐவர் கொண்ட அமைச்சரவை உப குழுவே நியமிக்கப்பட்டது.

இந்தக் குழு மிக விரைவாக ஆராய்ந்து சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வு காணும் வகையில் அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

அரச துறை ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளைத் தீர்க்கும் சிறப்பு ஆணைக்குழு ஒன்றை அரச தலைவர் நியமித்திருந்தார். அந்த ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைய சகல அரச உத்தியோகத்தர்களுக்கும் 3 ஆயிரம் ரூபா தொடக்கம் 24 ஆயிரம் ரூபா வரை சம்பள அதிகரிப்பு வரும் ஜனவரி முதல் வழங்கப்படும் என்று நிதி அமைச்சு அறிவித்திருந்தது. (ஒ.5)

## பாதிக்கப்ப...

பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அமைதிகாக்கும் படையினராக இலங்கை இராணுவத்தினர் வெளிநாடுகளுக்கு செல்வது இடைநிறுத்தப்பட்டிருப்பது பற்றிய ஐ.நாவின் அறிவிப்பு வந்திருப்பது நாட்டுக்கு ஒரு சோகமான நாள். இது அமைதிகாக்கும் பணிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று எச்சரிக்கைகள் விடுக்கப்பட்ட போதும் குற்றஞ்சாட்டப்பட்ட போர்க் குற்றவாளியான லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வாவை இராணுவத் தளபதியாக நியமிப்பதன் மூலம் தேர்தலுக்கான ஆதரவை பெற்றுக் கொள்ளும் மைத்திரியின் நகர்வுக்கு கிடைத்த பதிலடி இதுவாகும்.

'சவேந்திர சில்வாவின் நியமனமானது நாட்டுக்குள்ளே தாங்களே ஏற்படுத்திக் கொண்ட ஒரு துன்பியல் பாதிப்பாக இருந்தது. கடந்த கால குற்றங்களுக்கு உண்மையான குற்றவியல் பொறுப்புக்கூறலை நடைமுறைப்படுத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் உண்மை மற்றும் நீதியைப் பெற்றுக் கொடுக்கவும், தற்போதும் இடம் பெற்றுவரும் சித்திரவதைகளை இல்லாமற்செய்வதற்கு பாதுகாப்பு சேவையில் மறுசீரமைப்பை ஏற்படுத்தவும் இலங்கையானது பன்னாட்டுச் சமூகத்தின் உதவியைப் பெற்றுக்கொள்வதைக் காண விருப்புகின்றோம்' என்று சூக்கா தெரிவித்துள்ளார்.

இந்த இடைநிறுத்தம் பற்றி தெரியவருவது என்னவெனில் தற்போது பணியில் ஈடுபட்டுள்ள இலங்கை அமைதிகாக்கும் படைப் பிரிவுகள் தமது சுற்றுப்பயணம் முடியும் வரை அதே இடத்தில் இருக்கும் பின்னர் அவர்களுக்கான இடத்துக்கு வேறு ஒரு நாட்டில் இருந்து படையினர் கொண்டு வரப்படுவார்கள். ஆயினும் அமைதிகாப்பு நடவடிக்கைகளுக்கான ஐநாவின் திணைக்களம் ஐநாவின் நடவடிக்கைள் கடுமையாக ஆபத்துக்குள்ளாகும் பட்சத்தில் இந்த இடைநிறுத்தம் நலிதாக்கப்படலாம் என்ற ஒரு நிபந்தனையும் சேர்த்திருப்பது போல் தெரிகின்றது.

'இது எதனைக் கருதுகின்றது என்பது பற்றி ஐக்கிய நாடுகளிடமிருந்து மேலும் தெளிவுபடுத்தலை நாங்கள் எதிர்பார்துள்ளோம். இந்த முக்கியமான மனித உரிமைகள் விடயத்தில் ஐ.நா. ஏமாற்ற முயற்சித்தால் அது அமைதிகாக்கும் நடவடிக்கைகளுக்கான திணைக்களத்தின் நற்பெயரை பெரிதும் பாதிப்பதாக இருக்கும். பூச்சிய சகிப்புதன்மைக் கொள்கை பற்றி நீங்கள் கதைத்தால் அது பூச்சியமாக இருக்க வேண்டும் அத்துடன் அது உறுதியான முறையில் செய்யப்பட வேண்டும்' என்று சூக்கா குறிப்பிட்டுள்ளார். (ஒ.5)

## வல்லிபுர...

அருள்மிகு சிறி வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 17 தினங்கள் இடம்பெறும்.

7ஆம் திருவிழாவான 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 13ஆம் திருவிழாவான 10ஆம் திகதி வரை சிறப்பு உற்சவங்களான குருக்கட்டு தரிசனம், வெண்ணெய்த் திருவிழா, துகில் திருவிழா, பாம்புத் திருவிழா, ஹம்சன் போர்த் திருவிழா, வேட்டைத் திருவிழா ஆகிய சிறப்பு உற்சவங்கள் நடைபெறும்.

11ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு சப்பரத் திருவிழாவும், 12ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு தேர்த் திருவிழாவும், 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு வங்காள விரிகுடாக் கடலில் சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும், 14ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கேணித் தீர்த்தத் திருவிழாவும் மாலை 4 மணிக்கு களஞ்சல் திருவிழாவும் மாலை 6 மணிக்கு கொடி இறக்கமும் இடம்பெறுவதுடன் பெருந்திருவிழா நிறைவுபெறும்.

உற்சவ காலங்களில் ஆலய சூழலில் உள்ள அன்னதான மடங்களில் அன்னதானம் வழங்கப்படும். பக்தர்கள் சமயக் கோட்பாடுகளுடன் கலாசாரத்துக்கு அமைவான உடைகளுடன் தங்க ஆபரணங்கள் அணிவதைத் தவிர்த்து வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை மந்திகை ஊடாக வல்லிபுரக் கோயில், பருத்தித்துறை, தும்பளை ஊடாக வல்லிபுரக் கோவில், பருத்தித்துறை வல்லிபுரக் கோவில் ஊடாக யாழ்ப்பாணம் ஆகிய பாதைகளில் சிறப்பு பேருந்து சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. (ஒ.5,173)

## மிருசுவில்...

சபைக்குச் சொந்தமான பேருந்து, மிருசுவில் சேர்ச்க்கு முன்பாக நேற்ற இரவு 9.50 மணிக்கு தாக்கப்பட்டது.

சாரதியின் பக்கமாக உள்ள கண்ணாடி, செயினால் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டது. சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

உந்துருளியில் வேகமாக வந்த இருவரே இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தாக்குதல் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஒ.5,159)

## ஞானசாரரை...

துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஞானசாரதேரரும், மல்வத்த பௌத்த பீடமும் தமிழினத்தையும் இந்துமதம் முதலான ஏனைய மதங்களையும் மதத் தலங்களையும் எச்சரிப்பதையும் ஆக்கிரமிப்பதையும் அடக்கி ஆள முயற்சிப்பதையும் ஏற்றுக் கொள்ள முடியாது. பௌத்த மதத்துக்கு முன்;னுரிமை என்று ஏனைய மதங்களை அடக்கி ஆள, ஒழித்துவிட எடுக்கப்படும் முயற்சிகள் அரசமைப்பு ரீதியில் மதங்களின் சமத்துவத்தையும் மத நம்பிக்கையையும் பாதுகாக்க வேண்டுமென்பது அவசியமாகிவிட்டது.

இந்தியாவில் பல மதங்கள், பல இனங்;கள் ஏற்கப்படுவதை அரசமைப்பு ஊடாகப் பேணிப் பாதுகாப்பதை உறுதிப்படுத்தி நிற்கின்றது. இந்திய அரசமைப்பு மதசார்பற்ற நாடு என்றே பிரகடனப்படுத்தியுள்ளது. இலங்கையிலும் எந்த ஒரு மதத்துக்கும் முன்னுரிமை வழங்காமல் பல இனங்களையும், பல மத நம்பிக்கைகளையும் மத பீடங்களையும் கொண்டுள்ள அடிப்படை விதியை ஏற்று மதசார்பற்ற அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

மேலும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, ஞானசாரதேரரை மன்னிப்பளித்து விடுதலை செய்தமை ஊடாக அவர் மீண்டுமொருமுறை அரசியல் தவறிழைத்தமை நிரூபணமாகின்றது. நீதிமன்றத்தை அவமதித்தமை, சட்டத்தரணிகளை தாக்கியமை உள்ளிட்ட விடயங்களுக்காக ஞானசாரதேரர் உட்பட்ட சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்ய அரச தலைவர் மைத்திரிபால உத்தரவிட வேண்டும். அல்லது மத ரீதியாக, இன ரீதியாக, பிரதேச ரீதியாக இலங்கை பிளவுபட்டுவிடும். இந்த விளைவுகளுக்கு அரச தலைவரும், அரசுமே பொறுப்பு என்றுள்ளது. (ஒ.5)




இந்தோனேசியாவுடன் இணைக்கப்பட்டுள்ள பப்புவா மாகாணத்துக்குத் தன்னாட்சி உரிமை கோரி மாணவர்களால் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. இந்தப் போராட்டத்தில் ஏற்பட்ட வன்முறைகளால் 20 பேர் கொல்லப்பட்டனர். 70 பேர் காயமடைந்தனர். பூர்வீக பப்புவா வாசிகளுக்கும் இந்தோனேசிய மக்களின் கலாச்சாரம் மற்றும் வழிபாட்டு முறைகளுக்கும் ஒத்துப் போகவில்லை. இதனால் அவ்வப்போது ஏற்பட்டு வந்த உரசல்களே இந்தப் போராட்டத்துக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

# தேர்தலுக்காக உக்ரைனின் தலையீட்டைக் கோரினார்!

## ட்ரம்ப் மீது குற்றச்சாட்டு

வோஷிங்டன்,செப்.28

2020ஆம் ஆண்டில் அமெரிக்காவில் நடக்கவுள்ள அதிபர் தேர்தலில் உக்ரைனின் தலையீட்டை அமெரிக்க அதிபர் வரவேற்றதாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

அரசின் தவறுகளைச் சுட்டிக்காட்டுகின்ற அமெரிக்க 'விசில்ப்ளோயர்' ஒருவரே அறிக்கை ஒன்றில் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

புலனாய்வு அமைப்பைச் சேர்ந்த, தன்னை அடையாளப்படுத்தாத குறித்த அதிகாரியின் அறிக்கையை அமெரிக்காவின் காங்கிரஸ் கட்சி வெளியிட்டது. பின்னர் இந்த உளவு அறிக்கை பொதுவெளியில் வெளியிடப்பட்டது.

அந்த அறிக்கையில், 2020ஆம் ஆண்டு நடக்கவிருக்கின்ற அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் அதிபர் வேட்பாளராகக் கருதப்படும் ஜோ பைடன் மற்றும் அவரது மகன் ஹண்டர் மீது விசாரணையை முடுக்கி விடுமாறு




அதிபர் ட்ரம்ப் உக்ரைன் அதிபர் விளாடிமிர் ஸெலன்ஸ்கியை வலியுறுத்தியதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

ட்ரம்பின் இந்த நடவடிக்கையால் தேசியப் பாதுகாப்புக் கேள்விக் குறியாகியுள்ளதாக முறைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது. பல வாரங்கள் இது குறித்த சர்ச்சைகள் நீடித்த நிலையிலேயே இந்த அறிக்கைக்கான தடை நீக்கப்பட்டுக் குறித்த அறிக்கை வெளியிடப்பட்டது.

இதனையடுத்து ட்ரம்புக்கு எதிராக உரிமை மீறல் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆனால் ட்ரம்ப் தான் தவறு செய்யவில்லை என்றுகூறி இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.



# எனக்கு எதிராக விசாரணை நடத்துவது வேடிக்கையானது

## ட்ரம்ப் தெரிவிப்பு

வோஷிங்டன்,செப்.28

என்னைப் பதவியை விட்டு நீக்குவதற்காக அமெரிக்க நாடாளுமன்றம் விசாரணை நடத்துவது வேடிக்கையானது என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்தார்.

அமெரிக்காவில் அடுத்த ஆண்டு நடக்கவிருக்கின்ற அதிபர் தேர்தலில் குடியரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட உள்ள ட்ரம்பை எதிர்த்து ஜனநாயகக் கட்சியின் சார்பில் முன்னாள் துணை அதிபர் ஜோ பிடென் போட்டியிடுவார் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. இந்த நிலையில், ஜோ பிடெனுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில், உக்ரைனில் பணியாற்றிய அவரது மகனுக்கு எதிராக விசாரணை நடத்தவேண்டும் என்று உக்ரைனின் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கியை ட்ரம்ப் கேட்டுக்கொண்டதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இது பதவி ஏற்பின்போது அளித்த உறுதிமொழியை மீறிய ட்ரம்பின் செயல் என்று கூறி ட்ரம்பபை பதவி நீக்கம் செய்வதற்கான விசாரணையை அமெரிக்க நாடாளுமன்றத்தில் (பிரதிநிதிகள் சபை) ஜனநாயக கட்சி ஆரம்பித்தது. இந்த விசாரணையையே வேடிக்கையானது என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

# ஈரான் மீது அமெரிக்கா மீண்டும் ஒரு தடை

வோஷிங்டன்,செப்.28

ஈரான் அரசின் கீழுள்ள அனைத்து அரச உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்கள் அனைவரும் அமெரிக்காவுக்கு வருவதற்கு அமெரிக்க அதிபர் ட்ரம்பின் நிர்வாகம் தடை விதித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க அயலுறவுத் துறை அமைச்சர் மைக் போம்பியோ கூறும்போது, 'ஈரானின் அரச அதிகாரிகளுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் அமெரிக்கா வருவதற்குத் தடை விதிக்கப்படுகிறது. பல ஆண்டுகளாக ஈரானின் அதிகாரிகள் அமெரிக்காவின் கல்வி உட்படப் பல சலுகைகளை அனுப்பவித்தனர். ஈரானில் ஊழல் மற்றும் தவறான நிர்வாகத்தின் கீழ் அந்த நாட்டு மக்கள் பாதிக்கப்படும் நிலையில், உயர்வர்க்கத்தினர் அமெரிக்காவின் பலன்களை இனிப் பெற முடியாது' என்றார்.



### பின்னணி

அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பதவியேற்ற பிறகு, ஈரானுடனான அணு சக்தி ஒப்பந்தத்திலிருந்து விலகினார். ஆனால், அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்த பிற நாடுகள் ஈரானுக்கு ஆதரவு தெரிவித்தன. ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து வெளியேறியவுடன் அந்த நாட்டின் மீது பொருளாதரத் தடைகளை அமெரிக்கா விதித்து வருகிறது. இதனால் அமெரிக்கா ஈரான் இடையே முறுகல் நிலை தொடர்ந்து வருகிறது.

சமீபத்தில் சவூதி எண்ணெய் நிறுவனங்கள் தாக்கப்பட்டதன் பின்னணியில் ஈரான்தான் உள்ளது என்று அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

# திறந்த வெளியில் மலம் கழித்த சிறுவர்கள் அடித்துக் கொலை!

'தூய்மை இந்தியா'வில் கொடூரச் சம்பவம்





புதுடெல்லி,செப்.28

திறந்த வெளியில் மலம் கழித்துக் கொண்டிருந்த இரண்டு தலித் சிறுவர்களை அடித்துக் கொன்ற குற்றச்சாட்டில் இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தில் இருவர் கைது செய்யப்பட்டனர்.


இந்தக் கொடூரச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மத்திய பிரதேசத்தில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் திறந்த வெளியில் மலம் கழிப்பது இல்லாத கிராமம் என்று அரசால் அறிவிக்கப்பட்டிருந்த பாவ்கேடி கிராமத்தின் நடந்தது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

வீட்டில் கழிவறை வசதி இல்லாத நிலையில் ரோஷினி, அவினாஷ் ஆகிய பத்து வயதுடைய சிறுவர்கள் இருவர் வெளியிடத்தில் மலம் கழித்துள்ளனர். இதைக் கண்ட இரண்டு பேர் சிறுவர்களைத் தடிகளால் தாக்கியுள்ளனர். இதனால் அந்த இரண்டு சிறுவர்களும் சாவடைந்தனர். கைதான இருவருக்கும் எதிராகக் கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

"வீட்டில் கழிவறை வசதி இல்லை. கூலித் தொழிலாளியான என்னால் வீட்டில் கழிவறை கட்ட இயலவில்லை.

ஏழைகளுக்குக் கழிவறை கட்டுவதற்கு அரசு வழங்கும் மானியமும் எனக்குக் கிடைக்கவில்லை" என்று அவினாஷின் தந்தை மனோஜ் தெரிவித்தார்.



## அரசியல் பதிவிடல்களில் சரி,பிழை பார்க்கமாட்டோம்

அறிவித்தது முகநூல்!

நியூயோர்க்,செப்.28

முகநூல் மூலம் பரப்பப்படுகின்ற போலிச் செய்திகளின் பரவலைத்தடுப்பதற்காகத் தாங்கள் முன்னெடுத்துள்ள, 'செய்தியின் உண்மைத்தன்மையைக் கண்டறியும்' திட்டத்தில் அரசியல்வாதிகளுக்கு விதி விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக முகநூல் நிறுவனம் தெரிவித்தது. அதாவது, அரசியல் சார்ந்த விவாதங்களில் நடுவராகவும், அரசியல் கருத்துக்களைத் தடுக்கும் வகையிலும் தாங்கள் இருக்க விரும்பவில்லை என்று முகநூல் நிறுவனம் மேலும் தெரிவித்தது.

அரசியல்வாதிகளால் பதிவிடப்படும் அனைத்துப் பதிவுகளையும் 'செய்திக்குரிய உள்ளடக்கம்' என்று கருதுவதாகவும் முகநூல் நிறுவனம் தெரிவிக்கிறது.

## இந்தோனேசியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 20பேர் சாவு

ஜகார்த்தா,செப்.28

இந்தோனேசியத் தீவுகளில் நேற்று முன்தினம் காலை 6.5 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெ ரிக்க நில அதிர்வு ஆய்வாளர்கள் தெரிவித்தனர். கிழக்கு இந்தோனேசியாவின் மாலுகுத் தீவுகளில் உள்ள மாலுகு மாகாணத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

மாலுகு மாகாணத்தைச் சேர்ந்த அம்போன் எனும் பகுதியக்கு வடகிழக்கில் 37 கிலோ மீற்றர் தொலைவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் 29 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டதாக அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையம் மேலும் தெரிவித்தது. இந்த நிலநடுக்கம் காரணமாக 20பேர் சாவடைந்தனர் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.



## காஷ்மீரை இறைச்சிக்கடை ஆக்குகிறது இந்தியா!

இம்ரான் கான் தெரிவிப்பு

காஷ்மீரை இறைச்சிக் கடையாக மாற்றுகிறது இந்தியா என்று பாகிஸ்தானின் தலைமை அமைச்சர் இம்ரான் கான் விமர்சித்தார். இம்ரான் கானின் தெஹ்ரிக் இ இன்சாப் கட்சியின் அதிகாரபூர்வ கீச்சகப் பக்கத்திலேயே அவர் இவ்வாறு பதிவிட்டார். இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

சார்க் நாடுகளின் அயலுறவுத்துறை அமைச்சர்கள் பங்கு பற்றுகின்ற கூட்டம் நேற்று அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடந்தது. இதில் இந்தியாவின் அயலுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் பேச முயன்றபோது, பாகிஸ்தானின் அயலுறவுத்துறை அமைச்சர் குரேஷி வெளிநடப்புச் செய்தார். ஜெய்சங்கரின் பேச்சு முடிந்த பின்னர் அமைச்சர் குரேஷி மீண்டும் வந்து கூட்டத்தில் பங்கேற்றுப் பேசினார். இதன் பின்னரான கீச்சகப் பதிவிடலிலேயே இம்ரான் கான் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.




## பாகிஸ்தானில் தொடர்ந்து நிலநடுக்கம்; அச்சத்தில் மக்கள்

இஸ்லாமபாத்,செப்.28

பாகிஸ்தானில் கடந்த செவ்வாய்க்கிழமை பரவலாக நில நடுக்கங்கள் ஏற்பட்டன. இந்த நிலநடுக்கம் இந்தியாவின் வட பகுதிகளிலும் உணரப்பட்டன. இந்த நிலையில் பாகிஸ்தானில் நேற்று மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.7 ஆகப் பதிவாகியது.

இதன் ஆழம் 10 கிலோ மீற்றர்களாக இருந்தது. இந்த நிலநடுக்கம் காரணமாக மீட்பூர் நகரில் கட்டடங்களில் அதிர்வுகள் உணரப்பட்டன.

இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த தகவல் வெளிவரவில்லை. கடந்த செவ்வாய்க்கிழமை பாகிஸ்தானின் வடக்குப் பகுதியில் உள்ள இஸ்லமாபாத், பெஷாவர், லாகூர் பகுதிகளில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 37 பேர் சாவடைந்தும், 500 பேர் காயமடைந்தும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.



## ஈரானைத் தாக்குவதற்கு வாய்ப்புண்டு

சவூதி அரேபியா தெரிவிப்பு

நியாத்,செப்.28

எண்ணெய் நிறுவனங்கள் தாக்கப்பட்ட விடயத்தில் ஈரான் மீது இராணுவத் தாக்குதல் நடத்துவதற்கு வாய்ப்புள்ளதாகச் சவூதி அரேபியா தெரிவித்தது. சவூதி அரேபியாவின் அயலுறவுத் துறை அமைச்சர் அடெல் அல்ஜுபைரே இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:


அனைவரும் போர் நடைபெறாமல் இருப்பதற்கு முயற்சி செய்து வருகிறோம். எனவே இராணுவத் தாக்குதல் உட்பட எங்களிடம் உள்ள அனைத்து வாய்ப்புகளையும் அலசிப் பார்ப்போம். சரியான நேரத்தில் சரியான முடிவு எடுக்கப்படும். ஈரானைத் திருப்திப்படுத்தும் முயற்சி கடந்த காலங்களில் செயற்படவில்லை. எதிர்காலங்களில் இந்த முயற்சி செயற்படாது' என்றார்.



### பின்னணி

சவூதியின் எண்ணெய் நிறுவ னங்கள் மீது கடந்த வாரம் ஆளில்லா வானூர்திகள் தாக்குதல் நடத்தின. இந்தத் தாக்குதலுக்கு ஏமனின் ஹவுத்தி ஆயுததாரிகள் உரிமை கோரினர்.

இதன் பின்னணியில் ஈரான் இருப்பதாக அமெரிக்கா குற்றம் சாட்டுகிறது. நாங்கள்தான் நடத்தினோம் என்றால் அதற்கான ஆதாரங்களைக் காட்டுங்கள் என்று ஈரான் பதிலளித்துள்ளது. அமெரிக்காவுடன் இணைந்து ஈரான் மீது குற்றம் சாட்டுகிறது சவூதி. ஈரான் இதை மறுக்கிறது.





# வன்னியின் பெரும் சமர் நாளை ஆரம்பம்

வன்னியின் பெரும் சமர் என வர்ணிக்கப்படும் கிளிநொச்சி மகா வித்தியாலயத்துக்கும், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கும் இடையிலான 9ஆவது கிளிமுல்லை நட்புக் கிண்ணத்துக்கான கடினப்பந்து துடுப்பாட்ட தொடர் நாளை ஞாயிற்றுக்கிழமையும், நாளை மறுதினம் திங்கட் கிழமையும் புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (23)



# பிரதம செயலர் கொத்தணி அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது

வடமாகாண அமைச்சுக்களுக்கு இடையிலான விளையாட்டு நிகழ்வின் அங்கமான கால்பந்தாட்டத் தொடரில் பிரதம செயலர் கொத்தணி அணி வெற்றி பெற்று கிண்ணம் வென்றது. அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்று முந்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வடமாகாண பிரதம செயலர் கொத்தணி அணியை எதிர்த்து வடமாகாண மகளிர் விவகார அமைச்சு அணி மோதியது. இதில் பிரதம செயலர் கொத்தணி அணி 3 :0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

## கலந்துரையாடல் நாளை

மன்னார் மாவட்ட கால்பந்தாட்ட லீக்கினால் 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மன்னார் பிறீமியர் லீக் கால்பந்தாட்ட சுற்றுத் தொடர் நடத்தப்படவுள்ளது. மன்னார் மாவட்ட கால்பந்தாட்ட லீக் நிர்வாகத்தினருக்கும் அணிகளை கொள்வனவு செய்யவுள்ள உரிமையாளர்களுக்குமான முதலாவது விசேட கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு மன்னார் விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது. (23,56)

## அரையிறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் பிரிவு 3க்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதியாட்டம் இன்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் காலை 9.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. இதில் விக்ரோறி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

## மத்தியஸ்தர்களுக்கான செயலமர்வு நேற்று ஆரம்பமானது

யாழ்ப்பாணம்,செப்.28

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் வலிகாமம், பருத்தித்துறை, வடமாரட்சி ஆகிய கால்பந்தாட்ட லீக்குகளின் கால்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான செயலமர்வு நேற்று வெள்ளிக்கிழமை அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் ஆரம்பமானது. (23)







# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,செப்.28

மன்னார் கால்பந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்ததும் எடிசன் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அடம்பன் பிரதேச சபை மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மள்ளி கைப்பிட்டி சித்தி விநாயகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உயிர்த்தராசன் குளம் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

முற்பகல் 10.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மன்னார் சின்னக் கடை கிறின்பீல்ட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தர்சணமடுதளம்பிட்டி ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. முற்பகல் 11.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சாவற்கட்டு கில்லறி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து எருக்கலம்பிட்டி ஸ்ரார்லையின்விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

நண்பகல் 12.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அந்தோனியார்புரம் குழந்தை இயேசு விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பள்ளிமுனை சென். லூசியா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

யாழ்ப்பாணம், செப்.28


கொற்றவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொற்றவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது. இதில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலட்டி ஐக்கியம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலைமகள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

யாழ்ப்பாணம்,செப்.28

முல்லைத்தீவு மாவட்ட கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சிலாவத்தை இளம்பறவைகள் விளையாட்டுக் கழகத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை வடமாகாணம் ரீதியாக நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சிலாவத்தை இளம் பறவைகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது. இதில் இன்று சனிக்கிழமை இரவு 6.30 . மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மாத்தளன் ஒற்றுமை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 24ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய அமரர் சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்தமாக 17ஆவது வருடமாக மின் ஒளியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின் ஒளியில் இரவு 7 மணியள்வில் இடம்பெறவுள்ளது. இறுதியாட்டத்தில் கோல்டன் பிரதஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

# டோனிக்குக் காயம்



## அதனால்தான் அவருக்கு ஓய்வு என இந்திய ஊடகங்கள் தகவல்

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர், ரி20 தொடர் என்பவற்றில் இருந்தும், அடுத்ததாக நடைபெறவுள்ள பங்களாதேஷுக்கு எதிரான தொடரில் இருந்தும் டோனி விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், காயம் காரணமாகவே அவர் அணியில் இருந்து நீக்கப்பட்டார் என்றதகவல்வெளிவந்துள்ளது.
பண்டுக்கு வாய்ப்புக் கொடுப்பதற்காகவே டோனி நீக்கப்பட்டார் என்று பலரும் பல்வேறு விதமான கருத்துக்களைத் தெரிவித்துவந்த நிலையில், காயம் காரணமாகவே டோனி விலகினார் என்கின்றன இந்திய ஊடகங்கள் சில.
கடந்த வருட ஐ.பி.எல் தொடரின்போதே டோனிக்கு முதுகில் காயமும் கடும் வலியும் இருந்தது.
உலகக்கிண்ணத் தொடருடன் காயம் பெரிதானது. இதையடுத்தே அவருக்குக் கட்டாய ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.
அடுத்த வருடம் நடைபெறும் ரி20 உலகக்கிண்ணத் தொடரில் டோனி விளையாடுவதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளன - என்று அந்த ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. (ம)




## தன்னை நீக்கும் வாய்ப்பை ஏற்படுத்துகிறார் ரிசப் பண்ட்

### கபில் தேவ் குற்றச்சாட்டு

டோனியின் இடத்துக்கான மாற்று வீரர் என்று அடையாளம் காணப்பட்ட ரிசப் பண்ட், அணியில் இருந்து தன்னை நீக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார் என்று தெரிவித்தார் கபில் தேவ்.
டோனியின் ஓய்வு பற்றிய பேச்சுக்கள் பின்புலத்திற்குச் செல்ல தற்போது இளம் வீரர் ரிசப் பண்ட் குறித்து அனைவரும் தங்கள் கருத்துகளைத் தெரிவித்து அவருக்கு கடும் நெருக்கடி அளிக்கின்றனர். இந்தப் பட்டியலில் கபில்தேவும் இணைந்தார்.
பண்ட் தொடர்பில் கபில் தேவ் தெரிவித்ததாவது: 'பந்து மட்டையில் இனிமையாகப் படும் அந்தத் தருணத்துக்காக ரிசப் பண்ட் காத்திருக்க வேண்டும். என்ன அவசரம்? அவரிடம் திறமையும் இளமையும் உள்ளது, பொறுமை என்னும் ஒரு புள்ளியில்தான் அவர் பணியாற்ற வேண்டியுள்ளது. வெற்றிக்கும் தோல்விக்கும் ஒரு நூலளவுதன இடைவெளி.
நானும் ஒரு டெஸ்ட் ஆட்டத்தில் (இங்கிலாந்துக்கு எதிராக 1984) நீக்கப்பட்டேன். ஆனால் நான் யாரையும் குறை கூறவில்லை, காரணம் நீக்குவதற்கான காரணத்தை நான் தான் ஏற்படுத்திக் கொடுத்தேன், அதே போல் பண்ட் தன்னை நீக்குவதற்கான காரணங்களை வழங்கக் கூடாது. அவரிடம் வெற்றிக்கான உந்துதல் உள்ளது, காலம்தான் விரைவில் அவரை மாற்றும், நாம் அவரை ஆதரிப்போம்' - என்றார். (ம)

## இலங்கை - பாக். போட்டி மழையால் கைவிடப்பட்டது



கராச்சியில் நேற்று நடைபெற இருந்த பாகிஸ்தான் - இலங்கை அணிகளுக்கு இடையிலான முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டி மழையால் நாணயச் சுழற்சிகூட மேற்கொள்ளப்படாது கைவிடப்பட்டது.
பாகிஸ்தானில் இலங்கை அணி கடந்த 2009ஆம் ஆண்டு சுற்றுப் பயணம் செய்தபோது வீரர்கள் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினார்கள். இதில் இலங்கை வீரர்கள் காயம் அடைந்தனர். அதன்பின் எந்தவொரு அணியும் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் விளையாட பாகிஸ்தான் செல்லவில்லை. பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தொடர் முயற்சியால் 10 ஆண்டுகளுக்குப் பின்னர் தற்போது இலங்கை அணி ஒருநாள் கிரிக்கெட் தொடரில் விளையாட சம்மதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.
அதன்படி முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டி கராச்சி மைதானத்தில் நேற்று நடைபெறுவதாக இருந்தது.
போட்டி சரியான 3 மணிக்கு தொடங்கும் என தெரிவிக்கப்பட்ட நிலையில், திடீரென கனமழை பெய்தது. மழை நின்றாலும் மைதானத்தை உடனடியாக சரி செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் இன்றைய ஆட்டம் கைவிடப்பட்டது.
இரண்டாவது போட்டியானது நாளை ஞாயிற்றுக்கிழமை கராச்சி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

## ஆப்கானின் தலைமை பயிற்சியாளராக குருஸ்னர் தெரிவு

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக தென்னாபிரிக்கா அணியின் முன்னாள் சகலதுறை ஆட்டக்காரர் குளூஸ்னர் நியமிக்கப்பட்டுள்ளார்.
ஆப்கானிஸ்தான் அணியின் தலைமை பயிற்சியாளராக இருந்தவர் பில் சிம்மன்ஸ். அவரது பதவிக்காலம் முடிவடைந்ததையடுத்து புதிய பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரியது ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை.
இதில் 50க்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்திருந்த நிலையில் தென்னாபிரிக்கா அணியின் தலைசிறந்த சகலதுறை ஆட்டக்காரராக விளங்கிய குளூஸ்னரை தெரிவு செய்து தலைமை பயிற்சியாளராக நியமித்துள்ளது ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை.





## ரோகித் சர்மா மீது ரகானே நம்பிக்கை

டெஸ்ட் ஆட்டங்களில் ரோகித் சர்மா சிறப்பாகச் செயற்படுவார் என்று நம்பிக்கை தெரிவித்தார் துணைத் தலைவர் ரகானே.
தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ரோகித் சர்மா தொடக்க வீரராகக் களமிறங்குவாரா என்பது தொடர்பில் எனக்கு இன்னும் தெரியாது. அவர் தொடக்க வீரராக இறங்கினால், எனக்கு மகிழ்ச்சிதான். மேற்கிந்தியத் தீவுகளில் நடந்த டெஸ்ட் தொடரின் போது, ரோகித் சர்மா போன்ற திறமையான வீரரை வெளியே உட்கார வைத்தது கடினமாக இருந்தது என்று சொல்லியிருந்தேன். அவர் கடினமாக உழைத்து வருகிறார். மீண்டும் டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாட வாய்ப்பு கிடைத்தால் நிச்சயம் அவர் நன்றாக செயல்படுவார் என்று ரகானே தெரிவித்தார். (ம)

## டெஸ்ட் ஆட்டங்களில் சைனிக்கு வாய்ப்புகள்



### பரிசீலனை செய்யுங்கள் என்கிறார் முன்னாள் வேகப்பந்துவீச்சாளர் சகீர்

இந்திய அணியின் இளம் வேகப்பந்து வீச்சாளரான நவ்தீப் சைனிக்கு டெஸ்ட் கிரிக்கெட் பொருத்தமானது என்று சகீர்கான் தெரிவித்தார்.
இந்திய அணியின் இளம் வேகப்பந்து வீச்சாளர் நவ்தீப் சைனி. மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடரில் அறிமுகமான இவர், 140 கிலோமீற்றர் வேகத்துக்கு மேல் பந்துவீசி அனைவரையும் வியக்க வைத்தார். இதனால் தற்போது நடைபெற்று கொண்டிருக்கும் தென்னாபிரிக்கத் தொடரிலும் இடம் பிடித்துள்ளார்.
இந்த நிலையில் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்கு ஏற்படி சைனி மாறிக்கொள்வார் என்று ஜாகீர் கான் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
நவ்தீப் சைனி கிரிக்கெட் குறித்து சகீர் கான் கூறுகையில் "டெஸ்ட் கிரிக்கெட் நவ்தீப் சைனிக்கு பொருத்தமானதாக இருக்கும். அதிவேகத்தில் பந்து வீசும் சைனி, தொடர்ச்சியாக சரியான லெந்தில் பந்து வீசுகிறார்" - என்றார். (ம)

# ஆர்கலி தனியார் வைத்தியசாலை, வவுனியா

**ஆளணி தேவை**

- அனுபவமுள்ள டாக்டர்கள் (MBBS)
- ஓய்வு பெற்ற டாக்டர்கள் (MBBS)
- ஓய்வு பெற்ற டாக்டர்கள் (RMP)
- அனுபவமுள்ள பயிற்சி (டாக்டர்கள்)

**(PRE INTERN)**

- அனுபவமுள்ள தாதிய உத்தியோகத்தர்கள்
- மருந்தாளர்கள் (PHARMASISTS) முன் அனுபவம் உள்ளவர்கள்
- சத்திர சிகிச்சை கூடத்தில் கடமை புரிந்த அனுபவம் உள்ள தாதியர்கள்

(ஏ.582) (13.17)

**076 665 8562**


## மரண அறிவித்தல்

### முத்துலிங்கம் துரைச்சாமி



தோற்றம் 12.06.1935 மறைவு 26.09.2019

கைதடி கிழக்கு கைதடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துலிங்கம் துரைச்சாமி கடந்த (26.09.2019) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நகுலேஸ்வரியின் அன்புக்கணவரும் சத்தியநாதன், லோகநாதன், மகேந்திரம், கௌரி, கௌசலா, தயாபரன், செல்வநாதன், கலா ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.09.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி கிழக்கு

தகவல்: குடும்பத்தினர்
077 691 0590, 077 869 1524

## மரண அறிவித்தல்



தோற்றம் 30 . 03 . 1934

மறைவு 26 . 09 . 2019

### குமாரசாமி பாலசுப்பிரமணியம்

(இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளர், இலங்கை மின்சார சபை, அகில இலங்கை சமாதான நீதவான்)

சங்கானையைப் பிறப்பிடமாகவும் நவக்கிரியை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி பாலசுப்பிரமணியம் 26.09.2019 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - முத்தம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற மதனரஞ்சனியின் அன்புக் கணவரும், பாமினி (ஆசிரியை - சைவ மங்கையர் வித்தியாலயம் - கொழும்பு) பஞ்சசீலன் (அமெரிக்கா), பத்மசீலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவசுந்தரம், தியாகேஸ்வரி மற்றும் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி, சோமசுந்தரம், பஞ்சரத்தினம், சண்முகரத்தினம், செல்வராணி ஆகியோரின் சகோதரனும், உஷாவின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.09.2019) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நிலாவரை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Farm House
நவக்கிரி

தகவல்:
குடும்பத்தினர்.

**077 778 9838** (28325) (13.17)

# தலைசிறந்த அணிகளுக்கு எதிராக விளையாட வேண்டும் - ரஷித் கான்



சிறந்த அணியாக உருவெடுக்க வேண்டுமென்றால் தலைசிறந்த அணிகளுக்கு எதிராக விளையாட வேண்டும் என ஆப்கானிஸ்தான் அணித் தலைவர் ரஷித் கான் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி டெஸ்ட் அந்தஸ்தை பெற்ற பிறகு மூன்று போட்டிகளில் மட்டுமே விளையாடியுள்ளது. இந்தியாவுக்கு எதிரான முதல் போட்டியில் தோல்வியடைந்தாலும் அதன் பின் அயர்லாந்து, பங்களாதேஷ் அணிகளுக்கு எதிராக வெற்றி பெற்றது. பங்களாதேஷ் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரை வென்ற கையோடு, முத்தரப்பு ரி-20 கிரிக்கெட்டிலும் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தான் சிறந்த அணியாக உருவெடுக்க வேண்டுமென்றால், தலைசிறந்த அணிக்கெதிராக விளையாட வேண்டும் என்று அணித் தலைவர் ரஷித் கான் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாங்கள் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு எதிராக இரண்டு முறைதான் விளையாடியுள்ளோம். அவர்களுடைய பலம் மற்றும் பலவீனம் எங்களுக்கு தெரிந்திருக்கும். இதை நிச்சயமாக கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

சிறந்த அணியாக இருக்க வேண்டுமென்றால், தலைசிறந்த அணிகளுக்கு எதிராக அதிக போட்டிகளில் விளையாட வேண்டும். நான்கு வருடத்தில் ஒரு போட்டி என்பது சரியானதாக இருக்காது -என்றார்.

# ரியல் மட்ரிட் அணி அசத்தலாட்டம் !



ஐரோப்பியக் கழகங்களுக்கிடையில் இடம்பெற்று வரும் லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டியில் ரியல் மட்ரிட் அணி 2:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

ரியல் மட்ரிட் - ஒசாசுனா அணிகள் மோதிய முதல் பாதி ஆட்டத்தின் ஆரம்ப நிமிடங்கள் மிக விறுவிறுப்பாகக் காணப்பட்டது. இரு அணி வீரர்களும் போட்டி போட்டுக் கொண்டு ஆக்ரோசமாக ஆட ஆரம்பித்தனர். ஆட்டத்தின் 36ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணி வீரர் ஜூனியர் ஒரு கோலைப் போட ரியல் மட்ரிட் அணி முதல் பாதி ஆட்டத்தில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்ததும் ஒசாசுனா அணி வீரர்கள் தாங்களும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் ஆட ஆரம்பித்தனர். ஆட்டத்தின் 72ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரி அணி வீரர் ரொட்ரிகோ ஒரு கோலைப் போட அணியின் கோல் எண்ணிக்கை 2 ஆக உயர்ந்தது. எனினும் இறுதி வரை எதிரணியால் ஒரு கோலைக் கூட போட முடியாமல் போக இறுதியில் ரியல் மட்ரிட் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.




**வெளிநாடு, உள்நாடு மணமகன், மணமகள் தேவையா?**

**Jaffnaroots.com**
என்ற இணைய தளத்தில் இலவசமாக பதிவு செய்யுங்கள்

**0014 1631 95236** (கனடா)

**சிங்களம் கற்பிக்கப்படும்**

சகல தரப்பினருக்கும் கற்பிக்கப்படும்.

(CS 28322) (14.17)

**070 141 7834**

**கடை விற்பனைக்குண்டு**

295/6, K.K.S வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள கடை (1மாடி) விற்பனைக்குண்டு.

(CS 28287) (14.17)

தொடர்புகளுக்கு: **077 7721740/ 076 594 4947**

**விலைக்குத் தேவை**

கமுகு மடல்கள் ( பாக்கு மர மடல்கள்) தேவை.
சேகரித்து தரக்கூடியவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

**077 316 4617**
**Lava Hospital**
**85, Clock tower Road, Jaffna.**


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.09.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.